**கவனிக்க.**- 30.05.2014 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி III, பகுதி II மற்றும் பகுதி IV(அ) ஆகியவை பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1866 - 2014 ජුනි මස 06 වැනි සිකුරාදා - 2014.06.06

1866 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு யூன் மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 804 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 813 |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2014, யூன் மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2014, யூன் மாதம் 13 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

தமிழ் மொழி மூலம் விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - யாழ்ப்பாணம் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரங்களை உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2014, ஆடி மாதம் 07 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2014, மே 13.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | ஊர்காவற்றுறை | எழுவைதீவுப் பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் ஊர்காவற்றுறை பிரதேச செயலாளர் பிரிவில் விவாகப் (பொது) பதிவாளர் பதவி | அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் |
| யாழ்ப்பாணம் | வேலணை | அல்லைப்பிட்டி பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் வேலணை பிரதேச செயலாளர் பிரிவில் விவாகப் (பொது) பதிவாளர் பதவி | அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் |
| யாழ்ப்பாணம் | வேலணை | புங்குடுதீவு பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் வேலணை பிரதேச செயலாளர் பிரிவில் விவாகப் (பொது) பதிவாளர் பதவி | அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் |
| யாழ்ப்பாணம் | காரைநகர் | காரைநகர் பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் காரைநகர் பிரதேச செயலாளர் பிரிவில் விவாகப் (பொது) பதிவாளர் பதவி | அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் |

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | காரைநகர் | காரைநகர் பிரதேச செயலாளர் பிரிவில் மேலதிக விவாகப் (பொது) பதிவாளர் பதவி | அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் |
| யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவில் மேலதிக விவாகப் (பொது) பதிவாளர் பதவி | அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் |
| யாழ்ப்பாணம் | சங்கானை | வட்டுக்கோட்டைப் பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் சங்கானை பிரதேச செயலாளர் பிரிவில் விவாகப் (பொது) பதிவாளர் பதவி | அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் |
| யாழ்ப்பாணம் | கோப்பாய் | புத்தூர் பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் விவாகப் (பொது) பதிவாளர் பதவி | அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் |
| யாழ்ப்பாணம் | பருத்தித்துறை | கட்டைவேலி பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவில் விவாகப் (பொது) பதிவாளர் பதவி | அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் |

6-27

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி - நுவரெலியா மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரங்களை உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2014, யூன் மாதம் 30 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2014, மே 19.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| நுவரெலியா | அம்பகமுவ | பொகவந்தலாவ பிரதேசத்தின் அம்பகமுவ பிரிவின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், நுவரெலியா |

6-47

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவி - பதுளை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரங்களை உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2014, யூலை மாதம் 07 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2014, மே 20.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| பதுளை | ஹாலிஎல | ஹாலிஎல பிரிவின் மாளிகாதென்ன பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி | அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், பதுளை |

6-105

---

## இலங்கைப் பொலிஸ் திணைக்களம்

### பொலிஸ் கொஸ்தாபல் சாரதிப் பதவி

இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல் சாரதி பதவிக்கு இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன.

2. கீழ்க்காணும் வகையில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் ''பணிப்பாளர் (ஆட்சேர்ப்பு), பயிலுனர் ஆட்சேர்ப்பு அலுவலகம், இல. 375, முதலாம் மாடி, ஸ்ரீ சம்புத்தத்வ ஜயந்தி மாவத்தை, கொழும்பு 06'' என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தங்களால் விண்ணப்பிக்கும் பதவிப் பெயரினைக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் 2014.08.15 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் மேற்குறிப்பிட்ட முகவரியை வந்தடையுமாறு அனுப்பப்படல் வேண்டும். தாமதித்துப் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் பொலிஸ் திணைக்களத்தினால் விண்ணப்பங்கள் வழங்கப்பட மாட்டாது.

3. **சம்பள அளவுத்திட்டம்**.- ரூபா 1,71,360 - 7 x 1,740 - 10 x 2,160 - 17 x 2,880 - ரூபா 2,54,100.

மேலும், அரச உத்தியோகத்தர்களுக்கான வாழ்க்கைச் செலவு கொடுப்பனவுக்கும் அத்துடன் 12.12.2011 ஆந் திகதிய 31/11 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றுநிருபத்துக்கு அமைவான கொடுப்பனவு களுக்கும் உரித்துடையவர்களாவர். மேற்குறிப்பிடப்பட்ட சம்பள அளவுத்திட்டத்திற்கு மேலதிகமாக கீழ்க்காணும் கொடுப்பனவுகள் மாதந்தோறும் வழங்கப்படும்.

(அ) கடினக் கொடுப்பனவுகள் : ரூபா 2,000 ;

(ஆ) இணைந்த கொடுப்பனவுகள் :

(1) வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களில் சேவையின் பொருட்டு 10,500 ரூபா ;
(2) ஏனைய பிரதேசங்களில் சேவையின் பொருட்டு 8,400 ரூபா.

(இ) இலவச போக்குவரத்து வசதிகள் ;

(ஈ) உத்தியோகத்தர்களுக்கு இலவச மருத்துவ வசதி (வெளி நாடுகளிலும் வைத்திய வசதிகள் பொருட்டு) பண உதவிகள் வழங்கப்படும் ;

(உ) சகல சீருடைகளும் இலவசமாக வழங்கப்படும் ;

(ஊ) விளையாட்டுத் திறன்களை வளர்த்துக்கொள்ள உதவிகள் வழங்கப்படும் ;

(எ) கடமைகளுக்கான பிரயாணச் செலவுகள் கடினமான வேலைகளுக்காகவும் அத்துடன் திறமையாக கடமைகளைச் செய்வதற்காகவும் வெகுமதிகளாகப் பணம் வழங்கப்படும்.

**4. தேவையான அடிப்படைத் தகைமைகள் :**

(அ) வயதெல்லை.- வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்ப முடிவுத் திகதியில் 19-32 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) கல்வித் தகைமைகள்.- க. பொ. த. (சா.தர) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் குறைந்தது 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு 1**.- இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் வகைப்படுத்தலின்படி பாடங்களின் எண்ணிக்கையை வகைப்படுத்தும்போது விஞ்ஞான பாட இலக்கங்கள் 41 உம் 44 உம் ஒரு பாடமாகவும், இல. 42, 45 ஐக் கொண்ட கணித பாடங்கள் ஒரு பாடமாகவும் கருதப்படும். க. பொ. த. (சா.தர) பரீட்சையில் சித்தியடைந்த பாடங்களின் எண்ணிக்கை அதன் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

**குறிப்பு 2**.- க.பொ. த. (சா.தர) பரீட்சையில் எழுத்துப் பரீட்சையில் தொழில்நுட்ப பாடத்தில் சித்தியடையாமல் அதே பாடத்தில் செயல்முறைப் பரீட்சையில் சித்தி யடைந்திருந்தபோதும் அப்பாடத்தில் சித்தியடையாதவராக கருதப்படும்.

**குறிப்பு 3**.- விருப்பத்துக்குரிய தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய பாடங்கள் க. பொ. த. (சா. தர) பாடத்திட்டத்துக்குள் உள்ளடக்கப்படாமையால் அப்பாடங்களில் சித்திபெறுதல் க. பொ. த. (சா. தர) பரீட்சையில் சித்தியெய்திய பாடங்களாக கருதப்பட மாட்டாது.

(இ) பௌதிக தகைமைகள் :

* உயரம் : 5 அடி 3 அங்குலம் (ஆகக் குறைந்தது)

* மார்பு : 30 அங்குலம் ஆகக் குறைந்தது (மூச்சு விட்ட நிலையில்)

**குறிப்பு**.- சிறந்த விளையாட்டுத் திறமையுடைய தேசிய மட்டத்தில் விளையாட்டுப் போட்டிகளில் திறமை காட்டியுள்ள அல்லது சர்வதேச போட்டிகளில் பங்குபற்றி இலங்கைக்கு புகழ் ஈட்டித்தந்துள்ள விண்ணப்பதாரர் ஒருவரின் பௌதிக தகைமைகள் சற்று குறைவாக இருப்பினும் அவர் பிற தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பின் பொலிஸ் மா அதிபரின் தற்றுணிபின்படி தகைமை பெறுவர்.

(ஈ) தொழில்சார் தகைமைகள் :

(i) இலகுரக வாகனங்களை அல்லது கனரக வாகனங்களை ஓட்டும் திறமை இருப்பதற்கான சான்றிதழ் இருத்தல்.

(ii) மேற்குறிப்பிட்ட சான்றிதழைப் பெற்றபின் ஆகக் குறைந்தது ஒரு வருடத்திற்கு மோட்டார் வாகனம் செலுத்திய அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு**.- வாகனம் சம்பந்தமாக தொழில்நுட்ப அறிவு, வாகனம் திருத்திய அனுபவம் அத்துடன் நெடுங்காலமாக வாகனம் செலுத்திய அனுபவம் இருந்தால் அவ்விண்ணப்பதாரருக்கு முன்னுரிமை வழங்கப் படும்.

* வாகனத்தை திறமையுடன் செலுத்துவதற்கு தேவைப்படும் உடல் அவயங்களின் இயக்கத்திற்கு தடையாக இருக்கும் ஏதாவது அங்கவீன அல்லது பிற உடல் குறைபாடுகளை உடைய விண்ணப்பதாரர் சேவைக்கு பொருத்தமானவர் எனும் வைத்தியசாலை சான்றிதழ் பெற்றிருப்பினும் தகைமை நீக்கப்படுவர்.

* அடிப்படைத் தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரர் வாகனம் செலுத்துவது மற்றும் பராமரிப்பு தொடர்பில் பரீட்சிக்கப் படுவர். அதுபோலவே வீதிகள் போக்குவரத்து சைகை கள் தொடர்பாக விண்ணப்பதாரர் பெற்றுள்ள அறிவு ஒவ்வொரு விண்ணப்பதாரரும் வாகனம் செலுத்துவதற்கு திறமை பெற்றுள்ள வாகனங்களும் இயந்திர தொழில்நுட்பம் தொடர்பான அடிப்படை அறிவு ஆகியனவும் பரீட்சிக்கப்படும்.

(உ) பார்வை தொடர்பான தேவை.- ஒவ்வொரு கண்ணிலும் பார்வை 6/12 க்கு குறைவாக இருத்தலாகாது. ஒரு கண்ணின் பார்வை 6/6 ஆகவும் மற்ற கண்ணின் பார்வை 6/18 ஆகவும் இருப்பின் ஏற்றுக்கொள்ளப்படும். நிறப்பார்வை சாதாரணமாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் ஒருவர் மூக்குக் கண்ணாடி அல்லது பொருத்து வில்லைகள் பாவிப்பவராயின் தகைமை அற்றவராவார்.

(ஊ) பிற தகைமைகள்.- விண்ணப்பதாரர் திருமணமாகாதவராக அல்லது திருமணமானவராக இருக்கலாம்.

5. **ஆட்சேர்ப்பு முறை**.- தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் பொலிஸ் திணைக்களத்தினால் நடாத்தப்படும் அடிப்படைத் தகைமை பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும். அதில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் பின்வரும் உடற்தகுதிப் பரீட்சையில் பங்குபற்றலாம், அதாவது மனோவலிமை பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும்.-

மீற்றர் 1000 - 03 நிமிடங்கள் 44 விநாடிகள்.

- பௌதீகப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் இறுதி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சையில் 40% அல்லது அதற்கு மேல் புள்ளிகள் எடுப்பவர்கள் மாத்திரம் தொழில்சார் தகைமை பரீட்சைக்கு அழைக்கப் படுவர்.

**6. தொழில்சார் தகைமை பரீட்சை :**

6.1 இலங்கை பொலிஸ் கல்லூரியின் பணிப்பாளரின் பணிப்புரையின்கீழ் பொலிஸ் சாரதி பாடசாலையின் உதவி பணிப்பாளரினால் தொழில்சார் தகைமை பரீட்சை நடாத்தப்படும்.

6.2 தொழில்சார் தகைமைப் பரீட்சைக்கு 100 புள்ளிகள் ஒதுக்கப்பட்டுள்ளது. தொழில்சார் பரீட்சை பின்வருமாறு நடாத்தப்படும் :

(அ) வாகனம் செலுத்தும் தகுதி - 50 புள்ளிகள்
(ஆ) வீதிச்சட்ட அறிவுரை - 25 புள்ளிகள்
(இ) வாகனப் பராமரிப்பு மற்றும் சிறிய திருத்த வேலைகள் தொடர்பான அறிவு - 25 புள்ளிகள்

6.3 தொழில்சார் தகைமைப் பரீட்சை.- வாகனம் செலுத்தும் தகுதிப் பரீட்சைக்கு ஒதுக்கப்பட்டுள்ள உச்ச எல்லையாகிய 50 புள்ளிகளில் ஆகக்குறைந்தது 25 புள்ளிகளும், வீதிச்சட்ட அறிவுரை புத்தகம் தொடர்பாக ஒதுக்கப்பட்டுள்ள உச்ச எல்லையாகிய 25 புள்ளிகளில் ஆகக்குறைந்தது 12.5 புள்ளிகளும், வாகனப் பராமரிப்பும் சிறிய திருத்த வேலைகளும் தொடர்பான அறிவுக்கென்று ஒதுக்கப்பட்டுள்ள உச்ச எல்லையாகிய 25 புள்ளிகளில் ஆகக்குறைந்தது 12.5 புள்ளிகளாவது பெற்று மொத்தப் புள்ளிகள் 100 இல் ஆகக் குறைந்தது 50 புள்ளிகளாவது பெறும் விண்ணப்பதாரர்கள் தொழில்சார் தகைமைப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களாக கருதப்பட்டு மருத்துவப் பரிசோதனைக்கு அழைக்கப்படுவர்.

**குறிப்பு**.- சேர்க்கப்பட்ட பொலிஸ் கொஸ்தாபல் சாரதி பயிலுநர் காலப்பகுதிக்குள் கனரக வாகனங்களை ஓட்டுவதற்கான தகைமையைப் பெற பொலிஸ் வித்தியாலயத்தில் நடைபெறும் கனரக வாகன ஓட்டும் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

**7. மருத்துவப் பரிசோதனை :**

* விண்ணப்பதாரர் தனது நியமனத்தைப் பெற முன்னர் மருத்துவ பரிசோதனையில் சித்தியடைய வேண்டும். மருத்துவ பரிசோதனையானது ஆட்சேர்ப்பு செயற்பாட்டில் ஒரு அங்கம் மட்டுமே ஆகும். மருத்துவ பரிசோதனையில் சித்தியடைந்த விண்ணப்பதாரர்கள் தற்போது உள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கை, ஆகக்கூடிய புள்ளிகள் மற்றும் அவர்களது திறமை அடிப்படையில் அமைந்த பட்டியலில் அவர்களின் நிலையின் அடிப்படையிலேயே தெரிவுசெய்யப்படுவர். மருத்துவ பரிசோதனையில் சித்திபெறாதோர் நிராகரிக்கப் படுவர்.

8. **பின்னணி விசாரணைகள்.**- (அ) விண்ணப்பதாரியின் நன்நடத்தையும் அவரின் கிட்டிய உறவினர்கள், நண்பர்களின் நன்நடத்தைகள் தொடர்பாகவும் விசாரணைகள் மேற்கொள்ளப்படும். துர்நடத்தையுள்ள விண்ணப்பதாரிகள் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள்.

(ஆ) விண்ணப்பதாரர் பொய்யான தகவல்கள் வழங்குவது அவரை ஆட்சேர்ப்பிற்கு தகைமை அற்றதாக்கும். ஆட்சேர்ப்பின் பின் கொடுக்கப் பட்டுள்ள தகவல்கள் பொய்யானது என வெளிப்பட்டால் சேவையில் இருந்து நீக்கப்படுவார்.

9. **அரச மொழி தேர்ச்சி கொள்கையை அமுல்படுத்தல்** :

- பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் வெளியிடப்பட்ட 07/2007ஆம் இலக்க 2007.04.28 ஆந் திகதிய சுற்று நிருபத்தின் பிரகாரம், 2007.07.01 ஆந் திகதியிலிருந்து அரச சேவைக்கு/ மாகாண அரச சேவைக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டவர்களுக்கு தாம் சேவையில் சேர்ந்த அரச கரும மொழிக்கு மேலதிகமாக மற்றைய அரச கரும மொழிகளிலும் சேவையில் சேர்ந்த திகதியில் இருந்து 5 வருடத்திற்குள் தேர்ச்சிபெறல் வேண்டும்.

- 2007.07.01 ஆந் திகதி தொடக்கம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவி நிலைக்கு கீழே சேர்க்கப்பட்ட அலுவலர்கள், அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் இரண்டாம் மட்ட மொழிப் பயிற்சிநெறியில் சித்தி அடைதல் வேண்டும்.

- நியமனத் திகதியில் இருந்து 5 வருடத்திற்குள் இரண்டாம் அரச கருமமொழியில் சித்தியடையாதவர்களாயின் குறித்த மொழியில் தேர்ச்சியடையும் வரை சம்பள ஏற்றம் நிறுத்தி வைக்கப்படும்.

10. **பதவியிலமர்த்தும் நியதிகள்.**- இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உட்பட்டதுமாகும். விதவைகள்/ தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய திட்டத்திற்கு அங்கத்துவப்பணம் செலுத்துதல் வேண்டும்.

11. **சேவை நிபந்தனைகள்.**- (அ) நியமனம் 3 ஆண்டு கால பயிலுநர் அடிப்படையில் இருக்கும்.

(ஆ) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர் அரச கரும மொழிக் கொள்கைக்கு இணங்க ஏற்கனவே ஆக்கப்பட்ட விதிகளுக்கோ அல்லது இனிமேல் ஆக்கப்படக்கூடிய விதிகளுக்கோ அமைந்தொழுக வேண்டும்.

(இ) அவர்கள் தாபனக் கோவையின் I ஆம், II ஆம் தொகுதிகளில் சம்பந்தப்பட்ட ஏற்பாடுகள், நிதி ஒழுங்கு விதிகள், திணைக்களக் கட்டளைகள் அத்துடன் பொலிஸ் மா அதிபரினால் அல்லது அரசாங் கத்தினால் காலத்துக்குக் காலம் வெளியிடப்படும் பிற கட்டளைகளுக்கும் உட்பட்டவராவார்.

(ஈ) பதவி உறுதிப்படுத்துவதற்கு முன்னர் ஒவ்வொரு உத்தியோ கத்தர்களும் விதிக்கப்பட்ட திணைக்களப் பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும். விதிக்கப்படும் பரீட்சையில் சித்தியடையத் தவறுவோர் அல்லது பொலிஸ் கடமைகளை ஆற்றுவதற்குத் தகுதியற்றவர் எனக் கருதப்படுவோர் பொலிஸ் சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவார்.

(உ) தெரிவுசெய்யப்பட்ட திருமணமாகாத பொலிஸ் உத்தியோகத் தர்கள் பொலிஸ்மா அதிபரின் அங்கீகாரம் இல்லாமல் தமது பதவியில் உறுதிப்படுத்தும் வரை திருமணம் செய்ய அனுமதிக்கப்பட மாட்டார்கள். எனினும் 1973.02.28 ஆந் திகதிய 41 ஆம் இலக்கம் கொண்ட பகுதி II பொலிஸ் வர்த்தமானியின் பிரகாரமும் மற்றும் 2006.10.19 ஆந் திகதிய 1952/2006 ஆம் இலக்க பொலிஸ் மா அதிபரின் சுற்றுநிருபத்தின் மற்றும் 2007.08.09 ஆந் திகதியுடைய அதே சுற்றுநிருபத்தின் திருத்தத்தின் பிரகாரம் திருமணம் செய்வதற்கான விசேட காரணங்களை தெரிவித்து பொலிஸ் மா அதிபரின் அனுமதியுடன் திருமணம் செய்ய முடியும்.

(ஊ) தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் பயிற்சிக்குப் பின் 3 வருட பயிலுநர் நிலையில் பொலிஸ் திணைக்களத்திலேயே பணியாற்ற வேண்டியதுடன் பயிலுநர் சேவைக்காலம் முடிவடைவதற்கு முன்னர் அவர்கள் பதவி விலக விரும்பின் பதவி விலகல் கடிதத்தை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்திலேயே அவருடைய பயிற்சிக்காகவும், சீருடை மற்றும் ஏனையவைகளுக்கும் செய்த செலவினங்களைச் செலுத்துவதற்கு விருப்பம் தெரிவித்து ஒப்பந்தமொன்றில் கையொப்பமிட வேண்டும். அப்பெறுமதி இலங்கைப் பொலிஸ் கல்லூரியின் பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படும். பதவி விலகல் அங்கீகரிப்பது 1985 ஆம் ஆண்டின் தாபன விதிக்கோவையின் I ஆம் தொகுதியின் IV ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவிற்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.

(எ) ஆட்சேர்க்கப்படும் பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல் சாரதிகள் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சியினை ஆரம்பித்தவுடன் உடனடியாக, 1693/ 2003 ஆம் இலக்க பொலிஸ் மா அதிபரின் சுற்றுநிருபத்திற்கு இணங்க பொலிஸ் ஒழுக்காற்று கோவையினை பின்பற்றுவதாக பிரமாணம் செய்தல் வேண்டும்.

(ஏ) ஆட்சேர்க்கப்படும் பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல் சாரதிகள் பொலிஸ் பயிற்சி கல்லூரியில் பயிற்சி ஆரம்பித்தவுடன் உடனடியாக பொலிஸ் மா அதிபரின் 1804/ 2004 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அரச சேவைக்கு கட்டுப்பட்டு நடப்பதாக உறுதி/ சத்தியம் செய்தல் வேண்டும்.

(ஐ) பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல் சாரதிகள் தமது பதவியில் உறுதிப்படுத்திய பின் பொலிஸ் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்வு பெறுவதற்கு உரித்துடையவராவார்.

12. (அ) இவ்வர்த்தமானியின் பகுதி I : தொகுதி II (அ) இல் வெளியிடப்பட்டுள்ள அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைய பொது நிபந்தனைகளுக்கு கவனம் ஈர்க்கப்படுகின்றது.

(ஆ) 1990.03.10 ஆந் திகதிய 15/ 90 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் நியதிகளின்படி ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

13. விண்ணப்பதாரர் தமது விண்ணப்பத்துடன் கீழ்க்காணும் ஆவணங்களின் பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும். (மூல ஆவணங் கள் சமர்ப்பிக்கப்படல் ஆகாது) :-

(அ) பிறப்புச் சான்றிதழ் ;
(ஆ) அண்மையில் பெறப்பட்ட குணச் சான்றிதழ்கள் இரண்டு (உறவினர்கள் அல்லாதவர்களிடமிருந்து பெறப்பட்டது);
(இ) கல்வித் தகைமைச் சான்றிதழ்கள் ;
(ஈ) விசேட சாதனையுடன் விளையாட்டுத் துறையில் பெற்ற சான்றிதழ்கள் அல்லது பாடத்துக்கு புறம்பாக பெறப்பட்ட சான்றிதழ்கள் ;
(உ) சேவையில் அனுபவம் சம்பந்தமான சான்றிதழ் (இருப்பின்) ;
(ஊ) தேசிய அடையாள அட்டையின் நிழற்படப் பிரதி ;
(எ) சாரதி அனுமதிப்பத்திரத்தின் நிழற்படப் பிரதி.

14. (அ) தற்போது அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை தத்தமது திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படின் அவரை விடுவிக்க முடியும் என்ற சான்றிதமும் இணைக்கப்படல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரர் 11" x 8" அளவிலான தாளில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை தமது சொந்த கையெழுத்தில் பூரணப்படுத்தி சான்றிதழ்களது பிரதிகளுடன் இரண்டாம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். எக்காரணம் கொண்டும் இத்திணைக்களத்தின் எந்த உத்தியோகத்தர்களிடமும் விண்ணப்பங்களை நேரடியாக கையளித்தலாகாது.

15. இவ்வறிவித்தலின் விதிமுறைகளுக்கு அமைவுறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் அது தொடர்பாக விண்ணப்பதாரருக்கு அறிவிக்கப்படமாட்டாது.

**குறிப்பு**.- பரீட்சைக்கும், நேர்முகப் பரீட்சைக்கும் அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு போக்குவரத்துச் செலவுகளோ, பிற செலவுகளோ வழங்கப்பட மாட்டாது.

இலங்கக்கோன்,
பொலிஸ் மா அதிபர்.

பொலிஸ் தலைமையகம்,
கொழும்பு 01.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை பொலிஸ் திணைக்களம்**

*பொலிஸ் கொஸ்தாபல் சாரதி பதவி*

1. (அ) முழுப் பெயர் (தெளிவான பெரிய எழுத்துக்களிலும் விண்ணப்பதாரரின் பிறப்புச் சான்றிதழ்களில் உள்ளபடியும் இருத்தல் வேண்டும்) :-----.

(ஆ) பெயர் (முதல் எழுத்துக்களுடன்) :-----.

(இ) விண்ணப்பதாரரின் பதவி :-----.

2. தேசிய அடையாள அட்டை இல. :-----.
(தேசிய அடையாள அட்டையின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்.)

3. தந்தையின் முழுப் பெயர் :-----.

4. விண்ணப்பதாரரின் பிறந்த இடம் :-----.

பிறந்த இடத்துக்குரிய பொலிஸ் நிலையம் -
மாகாணம் :-----.

5. (அ) தற்போதைய முகவரி :-----.

(ஆ) தற்போதைய முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----.

(இ) நிரந்தர முகவரி :-----.

(ஈ) நிரந்தர முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----.

(உ) நிரந்தர முகவரிக்குரிய கிராமசேவகர் பிரிவு :-----. பிரதேச செயலகம் :-----.

(ஊ) தொலைபேசி இலக்கம் (வதிவிடம்) :-----, கையடக்க தொலைபேசி இலக்கம் :-----.

6. (அ) தேசிய இனம் :-----.

(ஆ) நீங்கள் பிறப்பினால் இலங்கைப் பிரசையா ? அல்லது பதிவு மூலம் இலங்கைப் பிரசையா ? (பதிவு மூலம் எனின் பதிவுச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்) :-----

(இ) வம்சாவளி மூலம் இலங்கைப் பிரசையானால் பின்வருபவர்களின் பிறந்த இடங்களைக் குறிப்பிடவும் :-

(1) விண்ணப்பதாரர் :-----.
(2) விண்ணப்பதாரரின் தந்தை :-----.
(3) விண்ணப்பதாரின் தந்தை வழி பாட்டன் :-----.
(4) விண்ணப்பதாரரின் தந்தை வழி முப்பாட்டன் :-----.

7. விண்ணப்பதாரரின் பிறந்த திகதி :-----.
(பிறப்புச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்)

வயது (வர்த்தமானி அறிவித்தலில் தரப்பட்டுள்ள விண்ணப்ப முடிவுத் திகதியன்றுள்ளவாறு) :-

வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.

8. உயரம் : அடி :----- அங்குலம் :----- மார்பு : அங்குலம் :-----.

9. கல்வித் தகைமைகள் (சித்தியடைந்த பரீட்சையைக் குறிப்பிட்டு சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

10. (அ) வாகனம் ஓட்டும் அனுமதிப்பத்திர இலக்கம் :-----.
(ஆ) வாகனம் ஓட்டும் அனுமதிப்பத்திரம் பெற்ற திகதி :-----.
(இ) திறமைபெற்ற வாகனங்களின் வகுப்புகள் :-----.
(சான்றிதழின் பிரதிகளை இணைக்கவும்.)

11. மேலதிகத் தகைமைகள் உண்டா ? (சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

12. திருமணம் ஆனவரா/திருமணம் ஆகாதவரா ? :-----.

13. (அ) தற்போது செய்யும் தொழில் :-----.

(ஆ) நீங்கள் இலங்கை ஆயுதப்படை அங்கத்தவரா ? :-----.

14. வேறு ஏதேனும் விசேட திறமைகள்/தகைமைகள் உண்டா ? :-----.

15. உங்களைப் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய உறவினர்கள் அல்லாத இரு நபர்களின் பெயர் முகவரிகளைக் குறிப்பிடுக :-

(அ) -----.
(ஆ) -----.

16. (அ) நீங்கள் இதற்கு முன்னர் பொலிஸ் சேவையின் ஏதாவது பதவி ஒன்றுக்கு விண்ணப்பித்ததுண்டா? (ஆம் எனின் அது தொடர்பான விபரங்களைத் தருக) :-----.

(ஆ) நீங்கள் இதற்கு முன்னர் பொலிஸ் அல்லது பொலிஸ் உப சேவையில் கடமையாற்றியுள்ளீரா ? (ஆம் எனின் அப்பதவியில் இருந்து விலகியதற்கான காரணங்களைக் குறிப்பிடுக ? : -----.

17. நீங்கள் தற்போது பொலிஸ் உப சேவையில் சேவையாற்றுகிறீரா ? அவ்வாறாயின் நியமனத் திகதி, பதவிநிலை போன்ற விபரங்களின் பிரதியை இணைக்குக :-----.

18. (அ) நீங்கள் படைதாங்கு சேவையில் இருக்கிறீர்களா ? அவ்வாறாயின் குறிப்பிட்ட அப்படைதாங்கு சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்.

(ஆ) நீங்கள் படைதாங்கு சேவையில் இருந்துள்ளீர்களா ? அவ்வாறாயின் அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைத்து அனுப்ப வேண்டும் :-----.

19. (அ) நீங்கள் படைதாங்கு தொண்டர் அணிச் சேவையில் இருக்கிறீர்களா ? அவ்வாறாயின் குறிப்பிட்ட அப்படைதாங்கு தொண்டர் சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்.

(ஆ) நீங்கள் படைதாங்கு தொண்டர் அணிச் சேவையில் இருந்துள்ளீர்களா ? அவ்வாறாயின் அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைக்கவும் :-----.

20. நீங்கள் ஏதாவது குற்றம் தொடர்பாக அல்லது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளீரா? அல்லது வேறு குற்றம் தொடர்பாக குற்றம்சாட்டப்பட்டு நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்டுள்ளீரா ? அவ்வாறாயின் விபரம் தருக. :-----.

21. உங்கள் உறவினர்கள் எவரேனும் தவறு சம்பந்தப்பட்டு சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனரா ? அல்லது அது தொடர்பான அழைப்பாணை கொடுக்கப்பட்டுள்ளனரா அல்லது குற்றம் சுமத்தப்பட்டுள்ளனரா அல்லது குற்றத்துக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளனரா? அவ்வாறாயின் விபரம் தருக :-----.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் என்னுடைய அறிவுக்கு எட்டிய வரையில் உண்மையானவையென்றும், சரியானவை யென்றும் வெளிப்படுத்துகின்றேன். மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் எவையேனும் பிழையானவையென்றோ, பொய்யான வையென்றோ தெரியவரின் நான் பொலிஸ் திணைக்கள சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருப்பினும் எந்த சந்தர்ப்பத் திலும் உடனடியாக நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

.................,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

6-187

## தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்

(சமூக சேவைகள் அமைச்சு)

பதவி வெற்றிடங்களை நிரப்புதல்

1. **பதவி**.- சிரேஷ்ட விரிவுரையாளர் (3 பதவிகள்) :

(i) வயதெல்லை.- விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தன்று 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல். (தற்போது அரச, மாகாண அரச சேவையில் மற்றும் அரச நியதிச் சபைகளில் பணியாற்று வோருக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.)

(ii) (அ) கல்வித் தகைமை.- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் சமூக விஞ்ஞான பாடங் களில் இளமானிப் பட்டத்துடன் சமூகப் பணியில் (Social Work) கலாநிதிப் பட்டம் பெற்றிருத்தல்.

(ஆ) அனுபவம்.- அரச அல்லது அரசினால் ஏற்றுக்கொள் ளப்பட்ட உயர் கல்வி நிறுவனமொன்றில் 10 வருடத் திலும் குறையாத வகையில் சமூகப்பணி கற்றல் மற்றும் கற்பித்தல் துறைகளில் அனுபவமிருத்தல்.

(iii) சம்பள அளவுத்திட்டம்.- ஏ ஆர் 2-2006ஏ
ரூபா 34,550 - 10 x 925 - 43,880 ரூபா (மாதம்)

2. **பதவி**.- சிரேஷ்ட பயிற்சி உத்தியோகத்தர் (பதவிகள் 3) :

(i) வயதெல்லை.- விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தன்று 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல். (தற்போது அரச, மாகாண அரச சேவையில் மற்றும் அரச நியதிச் சபைகளில் பணியாற்று வோருக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.)

(ii) கல்வித் தகைமை.- (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் சமூக விஞ்ஞான பாடங் களில் கலைமானிப் பட்டத்தினையும் சமூக விஞ்ஞானப் பாடத்தில் கலாநிதிப் பட்டத்தினையும் பெற்றிருத்தல்.

அத்துடன்

அரசாங்க அல்லது அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள் ளப்பட்ட நிறுவனமொன்றில் 10 வருடத்திலும் குறையாத வகையில் பயிற்சித் துறையில் அனுபவ மிருத்தல்.

அல்லது

(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் சமூக விஞ்ஞான பாடங்களில் இளமானிப் பட்டத்துடன் சமூக விஞ்ஞானத்தில் முதுமானி பட்டத்தினைப் பெற்றிருத்தல்.

அத்துடன்

அரசாங்கம் அல்லது அரசாங்கத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிறுவனம் ஒன்றில் 15 வருடத்திற்கு குறையாமல் சமூகப் பணி பயிற்சிப் பிரிவில் அனுபவம் பெற்றிருத்தல்.

(iii) சம்பள அளவுத்திட்டம்.- ஏஆர் 2-2006ஏ
ரூபா 34,550 - 10 X 925 - 43,880 ரூபா (மாதம்)

**குறிப்பு**.- உளவியல்சார் உளவளத்துறையில் ஒரு வருடத்துக்குக் குறையாத பட்டப்பின் படிப்பினை அல்லது அதற்கு மேற்பட்ட தகுதியினைப் பெற்றிருப்பது விசேட தகுதியாகக் கருதப்படும்.

3. **பதவி**.- சிரேஷ்ட ஆய்வு உத்தியோகத்தர் (பதவிகள் 3) :

(i) வயதெல்லை.- விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தன்று 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல். (தற்போது அரச, மாகாண அரச சேவையில் மற்றும் அரச நியதிச் சபைகளில் பணியாற்று வோருக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.)

(ii) கல்வித் தகைமை.- (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் சமூக விஞ்ஞான பாடங்களில் கலைமானிப் பட்டத்தினையும் சமூக விஞ்ஞான பாடத்தில் கலாநிதி பட்டத்தினையும் பெற்றிருத்தல்.

அத்துடன்

அரசாங்க அல்லது அரசாங்கத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிறுவனமொன்றில் 10 வருடத்திலும் குறையாத வகையில் சமூகப்பணி ஆய்வுத் துறையில் அனுபவமிருத்தல்.

அல்லது

(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் சமூக விஞ்ஞானப் பாடங்களில் இளமானிப் பட்டத்துடன் சமூக விஞ்ஞானத்தில் முதுமானி பட்டத்தினைப் பெற்றிருத்தல்.

அத்துடன்

அரசாங்க அல்லது அரசாங்கத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிறுவனமொன்றில் 15 வருடத்திலும் குறையாத வகையில் சமூகப்பணி ஆய்வுத் துறையில் அனுபவமிருத்தல்.

(iii) சம்பள அளவுத்திட்டம்.- ஏஆர் 2-2006ஏ
ரூபா 34,550 - 10 X 925 - 43,880 ரூபா (மாதம்)

4. **பதவி**.- ஆங்கில போதனாசிரியர் (பதவி 1) :

(i) வயதெல்லை.- விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தன்று 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல். (தற்போது அரச, மாகாண அரச சேவையில் பணியாற்றுபவர்கள் மற்றும் அரச நியதிச் சபைகளில் பணியாற்றுவோருக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.)

(ii) கல்வித் தகைமை.- (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் ஆங்கிலப் பாடத்தை உள்ளடக்கியதாக பட்டத்தினைப் பெற்றிருத்தல்.

அல்லது

(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் பெறப்பட்ட ஆங்கில மொழி, ஆங்கில இலக்கியம் மற்றும் ஆங்கில மொழியைக் கற்பிக்கும் முறை உள்ளடங்கிய பட்டம்.

அத்துடன்

(இ) ஆங்கில மொழியைக் கற்பித்தல் தொடர்பான ஏற்றுக்கொள்ளப்பட்ட உயர் கல்வி நிறுவனத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்ட ஒரு வருடத்திற்கு குறையாத டிப்ளோமா பாடநெறியைப் பூர்த்திசெய்திருத்தல்.

அல்லது

(ஈ) ஆங்கில மொழியைக் கற்பித்தல் தொடர்பான அரச பாடசாலை ஒன்றில் அல்லது ஏனைய அரச உயர் கல்வி நிறுவனம் ஒன்றில் 3 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் பெற்றிருத்தல்.

(iii) சம்பள அளவுத்திட்டம்.- எம்ஏ 4-2006ஏ
ரூபா 18,230 - 10 X 365 - 15 X 450 - 5 X 550 - 31,380 ரூபா (மாதம்)

5. **பதவி**.- மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/ஆங்கிலம்) III (1 பதவி) :

(i) வயதெல்லை.- விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தன்று 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு அதிகரிக்காமலும் இருத்தல். (தற்போது அரச, மாகாண அரச சேவையில் மற்றும் அரச நியதிச் சபைகளில் பணியாற்று வோருக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.)

(ii) (அ) கல்வித் தகைமை.- (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் சிங்கள/ ஆங்கில மொழிமூலம் பெற்றுக்கொண்ட பட்டத்துடன் கல்விப் பொதுத் தராதர (உ. த.) பரீட்சையில் சிங்களம் மற்றும் ஆங்கிலம்/ஆங்கில இலக்கியத்தில் விசேட சித்தி பெற்றிருத்தலும் சிங்களம்/ஆங்கில மொழிபெயர்ப்பு தொடர்பான திறன் இருத்தல் வேண்டும்.

அத்துடன்

(ஆ) அரசாங்க அல்லது அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள் ளப்பட்ட நிறுவனமொன்றில் சிங்களம்/ ஆங்கில மொழிபெயர்ப்பாளராக 2 வருட அனுபவம் பெற்றிருத்தல்.

(iii) சம்பள அளவுத்திட்டம்.- எம்ஏ 4-2006ஏ
ரூபா 18,230 - 10 X 365 - 15 X 450 - 5 X 550 - 31,380 ரூபா (மாதம்)

6. **பதவி**.- கட்புல செவிப்புல நுட்பவியலாளர் (1 பதவி) :

(i) வயதெல்லை.- விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தன்று 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல். (தற்போது இந்நிறுவனத்தில் பணியாற்றுவோருக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.)

(ii) (அ) கல்வித் தகைமை.- (அ) கல்விப் பொதுத்தராதர (சா. த.) பரீட்சையில் சிங்களம், கணிதம் மற்றும் ஏனைய இரு பாடங்களுக்கு விசேட சித்தியுடன் ஒரே அமர்வில் (6) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(ஆ) கல்விப் பொதுத்தராதர (உ. த.) பரீட்சையில் விஞ்ஞான பாடத்துறையில் அனைத்து பாடங்களிலும் (சாதாரண பொதுப் பரீட்சை தவிர) சித்தியடைந்து மூன்றாம் நிலைக் கல்வியைத் தொடர்வதற்கான தகுதியினைப் பெற்றிருத்தல்.

(இ) தொழில்நுட்ப திறன்/ ஆற்றல்.- ஒவ்வொரு பதவிக்குமான கடமைகள் பொறுப்புகளுக்கு ஏற்றவாறு மூன்றாம் நிலைக் கல்வி ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்டுள்ளவாறு தேசிய தொழிற்திறன் தகைமையில் (NVQ) ஐந்தாம் (5) தரத்திற்கு குறையாத செவிப்புல கட்புல தொழில்நுட்ப பாடநெறியொன்றினை வெற்றிகரமாகப் பின்பற்றி சான்றிதழ் பெற்றிருத்தல்.

(iii) *சம்பள அளவுத்திட்டம்.- எம்ஏ 2-2-2006ஏ ரூபா 14,610 - 10 x 145 - 7 x 170 - 4 x 290 - 20 x 345 - 25,310 ரூபா (மாதம்)*

**மேற்படி பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு நிபந்தனைகள் :**

(1) பதவி நிரந்தரமானது ;
(2) அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட விதத்திற்கு அமைய ஊழியர் சேமலாப நிதிக்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும் ;
(3) மூன்று வருட தகுதிகாண் நன்னடத்தைக் காலத்திற்கு உட்படுத்தல்.

**குறிப்பு**.- இப்பதவி வெற்றிடங்கள் நாவலை, ராஜகிரியவில் அமைந்துள்ள பிரதான அலுவலகத்திலேயே காணப்படுவதுடன் இந்நிறுவனத்திற்கு கிளைகள் இல்லை. தெரிவாகும் விண்ணப்பதாரிகள் பின்வரும் விலாசத்தில் அமைந்துள்ள பிரதான அலுவலகத்தில் மாத்திரம் பணிபுரிதல் வேண்டும்.

**சேவை நிபந்தனைகள்**.- 1992 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனச் சட்டத்தின் கட்டளைகளுக்கும் அரசாங்கத்தினால் காலத்திற்கு காலம் பிறப்பிக்கப்படும் சட்டங்கள் மற்றும் பிரமாணங்களுக்கு கீழ்ப்படிதல் வேண்டும்.

விண்ணப்பதாரியின் முழுமையான தகவல்களை உள்ளடக்கிய விண்ணப்பங்கள் கீழே குறிப்பிட்ட முகவரிக்கு 2014.07.04 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கப்பெறுமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பிக்கும் பதவியை கடித உறையின் இடது மேல் மூலையில் குறிப்பிட வேண்டும். முழுமையற்ற, தெளிவற்ற அல்லது தாமதமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். அரசாங்கத் துறையில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை திணைக்கள/ நிறுவனத் தலைவரின் ஊடாக சமர்ப்பிக்க வேண்டும்.

ரிட்லி ஜயசிங்க,
பணிப்பாளர் நாயகம்,
தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்.

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்,
இல. 488ஏ, நாவல வீதி,
இராஜகிரிய,
2014, மே 21.

6-86

## பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

திருத்தம்

### நிதி, திட்டமிடல் அமைச்சு

இலங்கை சுங்கத் திணைக்களம்

2014, மே 9 ஆந் திகதி வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1862 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மூலம் இலங்கை சுங்கத் திணைக்களத்தின் சுங்க உதவி அத்தியட்சகர் தரம் II, சுங்க பரிசோதகர் தரம் II மற்றும் சுங்கக் காவலர் தரம் III ஆம் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2014, தொடர்பில் விண்ணப்பங்கள் கோரப்பட்டன. அவ்வறிவித்தலில் பின்வரும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன :-

(i) 4 ஆம் இலக்க பந்தியில் வருகின்ற குறிப்பு எனும் விடயம் பின்வருமாறு திருத்தப்படுகிறது :-

"குறிப்பு.- இப்பரீட்சையானது சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். இந்த அறிவித்தலின் பந்தி 2 (iii) இல் குறிப்பிடப்பட்ட தகைமை பரீட்சையில் சித்திபெற்ற மொழியிலேயே விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். (அதாவது, சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கிலம் மொழியில்) ஆயினும் தகைமைப் பரீட்சையை ஆங்கிலம் அல்லது தமிழ் மொழியில் சித்திபெறும் ஒரு விண்ணப்பதாரி அல்லது தமிழ் அல்லது ஆங்கில மொழியில் கல்வி கற்றதொரு விண்ணப்பதாரி தாம் விரும்பினால் இப்பரீட்சைக்கு சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் தோற்றலாம். பரீட்சார்த்தி விண்ணப்பத்திற் கொடுத்த பரீட்சை மொழியை மாற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்."

2014, மே 9 ஆந் திகதி வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1862 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மூலம் இலங்கை சுங்கத் திணைக்களத்தின் சுங்க உதவி அத்தியட்சகர் தரம் II ஆம் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2014, தொடர்பில் விண்ணப்பங்கள் கோரப்பட்டன. அவ்வறிவித்தலில் பின்வரும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன :-

(i) முதலாம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள "இப்பரீட்சையினைப் பிற்போடுவதற்கு அல்லது இரத்துச் செய்வதற்கான உரிமையை நிதி, திட்டமிடல் அமைச்சு கொண்டுள்ளது" என்பது "இப்பரீட்சையினைப் பிற்போடுவதற்கு அல்லது இரத்துச் செய்வதற்கான உரிமையை இலங்கை சுங்கத் திணைக்களம் கொண்டுள்ளது" என திருத்தம் செய்யப்படுகிறது.

(ii) 13 ஆம் இலக்கப் பந்திக்குப் பின்னரான இறுதியில் குறிப்பிடப் பட்டுள்ள "செயலாளர், நிதி திட்டமிடல் அமைச்சு, செயலகம், கொழும்பு 1" என்பது "இலங்கை சுங்கத் திணைக்களம். "சுங்க இல்லம்", இல. 40, பிரதான வீதி, கொழும்பு 11" என திருத்தஞ் செய்யப்படுகிறது.

3. சுங்கத் திணைக்களத்தின் சுங்க உதவி அத்தியட்சகர் தரம் II, சுங்க பரிசோதகர் தரம் II மற்றும் சுங்கக் காவலர் தரம் III ஆம் பதவிகளுக்கான திறந்த போட்டிப் பரீட்சைகளுக்கான விண்ணப்ப முடிவுத் திகதி 2014.06.11 வரை நீடிக்கப்பட்டுள்ளதுடன் விண்ணப்பதாரி 2014.06.04 ஆந் திகதிக்கு முன்னர் சகல தேவைப்பாடுகளையும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

இலங்கை சுங்கத் திணைக்களம்.

இலங்கை சுங்கத் திணைக்களம்,
2014, மே 29.

6-151

---

**அரசாங்க சேவைகள் ஆணைக்குழு**

இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு

**தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களம்**

இலங்கைத் தொழில்நுட்பக் கல்விச் சேவையின் (விசேட பதவியணி) III ஆம் வகுப்பிற்கான போதனாசிரியர் பதவிகளுக்காக ஆட்சேர்ப்புச் செய்யும் போட்டிப் பரீட்சை -2014

தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களத்தின்கீழ் இலங்கை தொழில்நுட்பக் கல்விச் சேவையின் (விசேட பதவியணி) III ஆம் வகுப்பின் பின்வரும் போதனாசிரியர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன : -

| பதவி இலக்கம் | பதவி | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் |
|---|---|---|---|---|
| 1 | போதனாசிரியர் (இலத்திரனியல்) | 10 | 04 | - |
| 2 | போதனாசிரியர் (கட்டிடத் தொழில்) | 39 | 09 | - |
| 3 | போதனாசிரியர் (மோட்டார் இயந்திரவியல்) | 29 | 08 | - |
| 4 | போதனாசிரியர் (மரவேலை) | 40 | 04 | - |
| 5 | போதனாசிரியர் (குளிர்சாதனம் மற்றும் வளிச்சீராக்கல்) | 08 | 02 | - |
| 6 | போதனாசிரியர் (தொழில்நுட்ப வரைவு) | 35 | 08 | - |
| 7 | போதனாசிரியர் (மின்னியல்) | 27 | 09 | - |
| 8 | போதனாசிரியர் (ஆங்கிலம்) | - | - | 32 |
| 9 | போதனாசிரியர் (கணினித் தொழில்நுட்பவியல்) | 20 | 03 | - |
| 10 | போதனாசிரியர் (விஞ்ஞானம்/கணிதம்) | 24 | 07 | - |
| 11 | போதனாசிரியர் (வணிகம்) | 34 | 09 | - |
| 12 | போதனாசிரியர் (உலோக வேலை) | 29 | 06 | - |
| 13 | போதனாசிரியர் (ஆபரண வடிவமைப்பு மற்றும் உற்பத்தி) | 02 | - | - |
| 14 | போதனாசிரியர் (விவசாயம்) | 06 | - | - |
| 15 | போதனாசிரியர் (சுருக்கெழுத்து மற்றும் தட்டச்சு) | 14 | 06 | 18 |

1. **ஆட்சேர்ப்பு மேற்கொள்ளும் முறை**.- தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களத்தின்கீழ் இலங்கை தொழில்நுட்பக் கல்விச் சேவையின் (விசேட பதவியணி) III ஆம் வகுப்பிற்கான போதனாசிரியர் வெற்றிடத்திற்காக திறந்த போட்டிப் பரீட்சை ஒன்றின் பெறுபேற்றின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும். இலங்கை தொழில்நுட்பக் கல்விச் சேவையின் சேவைக் குறிப்பின் விதிமுறைகளுக்கு ஏற்ப நியமனம் செய்ய அதிகாரம் உள்ளவருக்குப் பதிலாக இந்தப் பரீட்சையானது, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் நடாத்தப்படும்.

*2. **தகைமைகள்**.*- சகல விண்ணப்பதாரிகளும் பின்வரும் தகைமைகளை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் பூரணப்படுத்தி இருத்தல் வேண்டும் :-

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;
(ii) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று விண்ணப்பதாரிகள் 21 வயதுக்குக் குறையாமலும் 40 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும் ;
(iii) சிறந்த ஒழுக்கவியல்புகளை உடையவராகவும் ஆரோக்கியமான உடல் தகைமையுடையவராகவும் இருத்தல் வேண்டும் ;
(iv) கீழே குறிப்பிடப்பட்டவாறு ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் உரிய துறையில் பட்டமொன்றைப் பெற்றதன் பின்னர் 3 வருட கால கற்பிக்கும்/தொழில் துறையில் அனுபவத்தையும் பெற்றிருத்தல் வேண்டும்.

| தொடர் இல. | பதவி | கல்வி/தொழில்சார் மற்றும் அனுபவம் தொடர்பான தகைமைகள் |
|---|---|---|
| 1 | போதனாசிரியர் (இலத்திரனியல்) | * மூன்றாம் நிலை மற்றும் தொழில்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றின் மூலம் தேசிய தொழில் தகைமை (NVQ) 5 ஆம் மட்டத்தின் அல்லது அதனிலும் உயர் மட்டத்தில் உரிய விடயத்துறையின் பாடநெறியொன்று<br>அல்லது<br>* தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமா (இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்பு)<br>அல்லது<br>* உயர் தேசிய பொறியியல் டிப்ளோமா (மின் பொறியியல் இலத்திரனியல்)<br>அல்லது<br>* தேசிய தொழில்நுட்பவியல் சான்றிதழ் (மின் மற்றும் இலத்திரனியல் பொறியியல்)<br>அல்லது<br>* லண்டன் சிற்றி அன்ட் கில்ட்ஸ் நிறுவனத்தின் தொழில்நுட்பவியலாளர்களின் முழுத் தொழில்நுட்பவியல் சான்றிதழ் (உரிய துறையில்)<br>அல்லது<br>* உரிய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பவியல் மட்டத்திற்குச் சமமான அல்லது அதனினும் உயர் தகைமைகளைப் பெற்றிருத்தல் (பொது நிர்வாக அமைச்சு மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்)<br>மற்றும்<br>* கல்விப் பொதுத் தராதர (சா. த.) பரீட்சையில் சிங்களம்/தமிழ் மொழி மற்றும் கணிதம்/எண்கணிதம் அடங்கலாக இரண்டுக்கு மேற்றாத அமர்வுகளில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்<br>மற்றும்<br>* மேற்குறிப்பிடப்பட்ட தகைமைகளில் ஏதேனுமொன்று பூரணப்படுத்தப்பட்டதன் பின்னர் உரிய துறையில் ஐந்து (05) வருடகால கற்பித்தல் மற்றும்/அல்லது செயன்முறை அனுபவம். |
| 2 | போதனாசிரியர் (கட்டிடத் தொழில்) | * மூன்றாம் நிலை மற்றும் தொழில்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றின் மூலம் தேசிய தொழில் தகைமை (NVQ) 5 ஆம் மட்டத்தின் அல்லது அதனிலும் உயர் மட்டத்தில் உரிய விடயத்துறையின் பாடநெறியொன்று<br>அல்லது<br>* தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமா (சிவில் பொறியியல்)<br>அல்லது<br>* உயர் தேசிய பொறியியல் டிப்ளோமா (சிவில் பொறியியல்)<br>அல்லது<br>* தேசிய தொழில்நுட்பவியல் சான்றிதழ் (சிவில் பொறியியல்)<br>அல்லது<br>* லண்டன் சிற்றி அன்ட் கில்ட்ஸ் நிறுவனத்தின் முழுத் தொழில்நுட்பவியல் சான்றிதழ் (உரிய துறையில்)<br>அல்லது<br>* உரிய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பவியல் மட்டத்திற்குச் சமமான அல்லது அதனிலும் உயர் தகைமைகளைப் பெற்றிருத்தல் (பொது நிர்வாக அமைச்சு மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்)<br>மற்றும் |

| தொடர் இல. | பதவி | கல்வி/தொழில்சார் மற்றும் அனுபவம் தொடர்பான தகைமைகள் |
|---|---|---|
| | | * கல்விப் பொதுத் தராதர (சா. த.) பரீட்சையில் சிங்களம்/தமிழ் மொழி மற்றும் கணிதம்/ எண்கணிதம் அடங்கலாக இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்<br>மற்றும்<br>* மேற்குறிப்பிடப்பட்ட தகைமைகளில் ஏதேனுமொன்று பூரணப்படுத்தப்பட்டதன் பின்னர் உரிய துறையில் ஐந்து (05) வருடகால கற்பித்தல் மற்றும்/ அல்லது செயன்முறை அனுபவம். |
| 3 | போதனாசிரியர் (மோட்டார் இயந்திரவியல்) | * மூன்றாம் நிலை மற்றும் தொழில்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவன மொன்றின் மூலம் தேசிய தொழில் தகைமை (NVQ) 5 ஆம் மட்டத்தின் அல்லது அதனிலும் உயர் மட்டத்தில் உரிய விடயத்துறையின் பாடநெறியொன்று<br>அல்லது<br>* தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமா (எந்திரவியல் பொறியியல் - மோட்டார் இயந்திர விஞ்ஞானம்)<br>அல்லது<br>* உயர் தேசிய பொறியியல் டிப்ளோமா (எந்திரவியல் பொறியியல் - மோட்டார் இயந்திர விஞ்ஞானம்)<br>அல்லது<br>* தேசிய தொழில்நுட்பவியல் சான்றிதழ் (எந்திரவியல் பொறியியல்)<br>அல்லது<br>* லண்டன் சிற்றி அன்ட் கில்ட்ஸ் நிறுவனத்தின் முழுத் தொழில்நுட்பவியல் சான்றிதழ் (உரிய துறையில்)<br>அல்லது<br>* உரிய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பவியல் மட்டத்திற்குச் சமமான அல்லது அதனிலும் உயர் தகைமைகளைப் பெற்றிருத்தல் (பொது நிர்வாக அமைச்சு மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்)<br>மற்றும்<br>* கல்விப் பொதுத் தராதர (சா. த.) பரீட்சையில் சிங்களம்/தமிழ் மொழி மற்றும் கணிதம்/ எண்கணிதம் அடங்கலாக இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்<br>மற்றும்<br>* மேற்குறிப்பிடப்பட்ட தகைமைகளில் ஏதேனுமொன்று பூரணப்படுத்தப்பட்டதன் பின்னர் உரிய துறையில் ஐந்து (05) வருடகால கற்பித்தல் மற்றும்/ அல்லது செயன்முறை அனுபவம். |
| 4 | போதனாசிரியர் (மரவேலை) | * மூன்றாம் நிலை மற்றும் தொழில்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவன மொன்றின் மூலம் தேசிய தொழில் தகைமை (NVQ) 5 ஆம் மட்டத்தின் அல்லது அதனிலும் உயர் மட்டத்தில் உரிய விடயத்துறையின் பாடநெறியொன்று<br>அல்லது<br>* தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமா (எந்திரவியல் பொறியியல் - சிவில் பொறியியல்)<br>அல்லது<br>* உயர் தேசிய பொறியியல் டிப்ளோமா (எந்திரவியல் பொறியியல் - சிவில் பொறியியல்)<br>அல்லது<br>* தேசிய தொழில்நுட்பவியல் சான்றிதழ் (எந்திரவியல் பொறியியல் - சிவில் பொறியியல்)<br>அல்லது<br>* லண்டன் சிற்றி அன்ட் கில்ட்ஸ் நிறுவனத்தின் முழுத் தொழில்நுட்பவியல் சான்றிதழ் (உரிய துறையில்)<br>அல்லது<br>* உரிய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பவியல் மட்டத்திற்குச் சமமான அல்லது அதனிலும் உயர் தகைமைகளைப் பெற்றிருத்தல் (பொது நிர்வாக அமைச்சு மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்)<br>மற்றும் |

| தொடர் இல. | பதவி | கல்வி/தொழில்சார் மற்றும் அனுபவம் தொடர்பான தகைமைகள் |
|---|---|---|
| | | * கல்விப் பொதுத் தராதர (சா. த.) பரீட்சையில் சிங்களம்/தமிழ் மொழி மற்றும் கணிதம்/ எண்கணிதம் அடங்கலாக இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்<br>மற்றும்<br>* மேற்குறிப்பிடப்பட்ட தகைமைகளில் ஏதேனுமொன்று பூரணப்படுத்தப்பட்டதன் பின்னர் உரிய துறையில் ஐந்து (05) வருடகால கற்பித்தல் மற்றும்/ அல்லது செயன்முறை அனுபவம். |
| 5 | போதனாசிரியர் (குளிர்சாதனம் மற்றும் வளிசீராக்கி) | * மூன்றாம் நிலை மற்றும் தொழில்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றின் மூலம் தேசிய தொழில் தகைமை (NVQ) 5 ஆம் மட்டத்தின் அல்லது அதனிலும் உயர் மட்டத்தில் உரிய விடயத்துறையின் பாடநெறியொன்று<br>அல்லது<br>* தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமா (எந்திரவியல்/உற்பத்திப் பொறியியல்)<br>அல்லது<br>* உயர் தேசிய பொறியியல் டிப்ளோமா (எந்திரவியல் பொறியியல் - குளிர்சாதனம் மற்றும் வளி சீராக்கி)<br>அல்லது<br>* தேசிய தொழில்நுட்பவியல் சான்றிதழ் (எந்திரவியல் பொறியியல்)<br>அல்லது<br>* லண்டன் சிற்றி அன்ட் கில்ட்ஸ் நிறுவனத்தின் முழுத் தொழில்நுட்பவியல் சான்றிதழ் (உரிய துறையில்)<br>அல்லது<br>* உரிய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பவியல் மட்டத்திற்குச் சமமான அல்லது அதனிலும் உயர் தகைமைகளைப் பெற்றிருத்தல் (பொது நிர்வாக அமைச்சு மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்)<br>மற்றும்<br>* கல்விப் பொதுத் தராதர (சா. த.) பரீட்சையில் சிங்களம்/தமிழ் மொழி மற்றும் கணிதம்/ எண்கணிதம் அடங்கலாக இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்<br>மற்றும்<br>* மேற்குறிப்பிடப்பட்ட தகைமைகளில் ஏதேனுமொன்று பூரணப்படுத்தப்பட்டதன் பின்னர் உரிய துறையில் ஐந்து (05) வருடகால கற்பித்தல் மற்றும்/ அல்லது செயன்முறை அனுபவம். |
| 6 | போதனாசிரியர் (தொழில்நுட்ப வரைவு) | * மூன்றாம் நிலை மற்றும் தொழில்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றின் மூலம் தேசிய தொழில் தகைமை (NVQ) 5 ஆம் மட்டத்தின் அல்லது அதனிலும் உயர் மட்டத்தில் தொழில்நுட்ப வரைதலை ஒரு பாடமாக உள்ளடக்கிய பாடநெறியொன்று<br>அல்லது<br>* தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமா (எந்திரவியல் பொறியியல்)<br>அல்லது<br>* உயர் தேசிய பொறியியல் டிப்ளோமா (எந்திரவியல் பொறியியல்)<br>அல்லது<br>* தேசிய தொழில்நுட்பவியல் சான்றிதழ் (எந்திரவியல் பொறியியல்)<br>அல்லது<br>* லண்டன் சிற்றி அன்ட் கில்ட்ஸ் நிறுவனத்தின் முழுத் தொழில்நுட்பவியல் சான்றிதழ் (உரிய துறையில்)<br>அல்லது<br>* உரிய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பவியல் மட்டத்திற்குச் சமமான அல்லது அதனினும் உயர் தகைமைகளைப் பெற்றிருத்தல் (பொது நிர்வாக அமைச்சு மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்)<br>மற்றும்<br>* கல்விப் பொதுத் தராதர (சா. த.) பரீட்சையில் சிங்களம்/தமிழ் மொழி மற்றும் கணிதம்/ எண்கணிதம் அடங்கலாக இரண்டுக்கு மேற்படாத தடவைகளில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்<br>மற்றும்<br>* மேற்குறிப்பிடப்பட்ட தகைமைகளில் ஏதேனுமொன்று பூரணப்படுத்தப்பட்டதன் பின்னர் உரிய துறையில் ஐந்து (05) வருடகால கற்பித்தல் மற்றும்/ அல்லது செயன்முறை அனுபவம். |

| தொடர் இல. | பதவி | கல்வி/தொழில்சார் மற்றும் அனுபவம் தொடர்பான தகைமைகள் |
|---|---|---|
| 7 | போதனாசிரியர் (மின்னியல்) | * மூன்றாம் நிலை மற்றும் தொழில்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றின் மூலம் தேசிய தொழில் தகைமை (NVQ) 5 ஆம் மட்டத்தின் அல்லது அதனிலும் உயர் மட்டத்தில் மின் தொழில்நுட்பவியலை ஒரு பாடமாக உள்ளடக்கிய பாடநெறியொன்று<br>அல்லது<br>* தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமா (மின் பொறியியல்)<br>அல்லது<br>* உயர் தேசிய பொறியியல் டிப்ளோமா (மின் பொறியியல்)<br>அல்லது<br>* தேசிய தொழில்நுட்பவியல் சான்றிதழ் (மின் மற்றும் இலத்திரனியல் பொறியியல்)<br>அல்லது<br>* லண்டன் சிற்றி அன்ட் கில்ட்ஸ் நிறுவனத்தின் முழுத் தொழில்நுட்பவியல் சான்றிதழ் (உரிய துறையில்)<br>அல்லது<br>* உரிய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பவியல் மட்டத்திற்குச் சமமான அல்லது அதனினும் உயர் தகைமைகளைப் பெற்றிருத்தல் (பொது நிர்வாக அமைச்சு மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்)<br>மற்றும்<br>* கல்விப் பொதுத் தராதர (சா. த.) பரீட்சையில் சிங்களம்/தமிழ் மொழி மற்றும் கணிதம்/ எண்கணிதம் அடங்கலாக இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்<br>மற்றும்<br>* மேற்குறிப்பிடப்பட்ட தகைமைகளில் ஏதேனுமொன்று பூரணப்படுத்தப்பட்டதன் பின்னர் உரிய துறையில் ஐந்து (05) வருடகால கற்பித்தல் மற்றும்/ அல்லது செயன்முறை அனுபவம். |
| 8 | போதனாசிரியர் (ஆங்கிலம்) | * ஆங்கிலப் பாடத்தை ஒரு பாடமாக உள்ளடக்கி அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட பட்டம்<br>மற்றும்<br>* அந்தத் தகைமையைப் பூர்த்திசெய்ததன் பின்னர் ஆங்கிலம் கற்பிப்பது தொடர்பில் 3 வருடகால அனுபவம்<br>அல்லது<br>* ஆங்கில மொழி மூலத்தில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டம் பெற்றுக்கொண்டதன் பின்னர் ஆங்கில மொழிக் கற்பித்தலில் 3 வருட கால அனுபவம். |
| 9 | போதனாசிரியர் (கணினித் தொழில் நுட்பவியல்) | * கணினி விஞ்ஞானம்/கணினி பொறியியல் விஞ்ஞானம் தொடர்பாக பல்கலைக்கழகம் ஒன்றில் பெற்றுக்கொண்ட விஞ்ஞானமாணிப் பட்டம்<br>அல்லது<br>* கணினிப் பாடத்தை பிரதான பாடமாகக் கொண்டு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பெற்றுக்கொண்ட விஞ்ஞானமாணிப் பட்டம்<br>அல்லது<br>* கணினி விஞ்ஞானத்தை உள்ளடக்கி அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பெற்றுக்கொண்ட விஞ்ஞானமாணி பொறியியல் பட்டம்<br>அல்லது<br>* அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பெற்றுக்கொண்ட விஞ்ஞானமாணிப் பட்டத்துடன் தகவல் தொழில்நுட்பவியல் தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பெற்றுக்கொண்ட பட்டப் பின்படிப்பு டிப்ளோமா சான்றிதழ்<br>மற்றும்<br>* மேற்குறிப்பிடப்பட்ட தகைமைகள் பூரணப்படுத்தப்பட்டதன் பின்னர் கணினி தொழில்நுட்பவியல் துறையில் கற்பித்தல் மற்றும்/அல்லது செயன்முறையில் 3 வருடகால அனுபவம்<br>அல்லது<br>* தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவனம் ஒன்றினால் வழங்கப்படுகின்ற கணினித் தொழில்நுட்பவியல் தொடர்பில் இரு வருட கால முழுநேரம் உயர் டிப்ளோமா சான்றிதழ்<br>அல்லது<br>* மூன்றாம் நிலை மற்றும் தொழில்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றின் மூலம் தேசிய தொழில் தகைமை (NVQ) 5 ஆம் மட்டத்தின் அல்லது அதனிலும் உயர் மட்டத்தில் உரிய விடயத்துறையில் பாடநெறியொன்று<br>அல்லது |

| தொடர் இல. | பதவி | கல்வி/தொழில்சார் மற்றும் அனுபவம் தொடர்பான தகைமைகள் |
|---|---|---|
| | | * சமமான அல்லது உயர் தகைமைகள் (பொது நிர்வாக அமைச்சு மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்)<br>மற்றும்<br>* மேற்குறிப்பிடப்பட்ட தகைமைகள் பூரணப்படுத்தப்பட்டதன் பின்னர் கணினி தொழில்நுட்பவியல் துறையில் ஐந்து (05) வருடகால கற்பித்தல் அனுபவம். |
| 10 | போதனாசிரியர் (விஞ்ஞானம்/ கணிதம்) | * பௌதீக விஞ்ஞானம் மற்றும் கணிதத்தை (தூயகணிதம் அல்லது பிரயோக கணிதம்) ஒரு பாடமாக உள்ளடக்கி அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் விஞ்ஞானமாணிப் பட்டத்தைப் பெற்றிருத்தல்<br>மற்றும்<br>* பட்டம் பெற்றுக்கொண்டதன் பின்னர் 3 வருடகால கற்பித்தல் அனுபவம். |
| 11 | போதனாசிரியர் (வணிகம்) | * வியாபார நிர்வாகம் அல்லது அரசாங்க நிர்வாகம் அல்லது வணிக விஞ்ஞானம் அல்லது பொருளாதார விஞ்ஞானம் தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டம் பெற்றிருத்தல்<br>* தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களத்தின் கீழுள்ள தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றில்/ இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் வணிக விஞ்ஞான டிப்ளோமா ஒன்றைப் பெற்றிருத்தல்<br>அல்லது<br>* சமமான அல்லது உயர் தகைமைகள் (பொது நிர்வாக அமைச்சு மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்)<br>மற்றும்<br>* தகைமைகள் பூரணப்படுத்தப்பட்டதன் பின்னர் உரிய துறையில் மூன்று (3) வருடகால கற்பித்தல் அனுபவம். |
| 12 | போதனாசிரியர் (உலோக வேலை) | * மூன்றாம் நிலை மற்றும் தொழில்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவன மொன்றின் மூலம் தேசிய தொழில் தகைமை (NVQ) 5 ஆம் மட்டத்தின் அல்லது அதனிலும் உயர் மட்டத்தில் உரிய விடயத்துறையின் பாடநெறியொன்று<br>அல்லது<br>* தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமா (எந்திரவியல் பொறியியல்)<br>அல்லது<br>* உயர் தேசிய பொறியியல் டிப்ளோமா (எந்திரவியல் பொறியியல்)<br>அல்லது<br>* தேசிய தொழில்நுட்பவியல் சான்றிதழ் (எந்திரவியல் பொறியியல்)<br>அல்லது<br>* லண்டன் சிற்றி அன்ட் கில்ட்ஸ் நிறுவனத்தின் முழுத் தொழில்நுட்பவியல் சான்றிதழ் (உரிய துறையில்)<br>அல்லது<br>* உரிய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பவியல் மட்டத்திற்குச் சமமான அல்லது அதனினும் உயர் தகைமைகளைப் பெற்றிருத்தல் (பொது நிர்வாக அமைச்சு மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்)<br>மற்றும்<br>* கல்விப் பொதுத் தராதர (சா. த.) பரீட்சையில் சிங்களம்/தமிழ் மொழி மற்றும் கணிதம்/ எண்கணிதம் அடங்கலாக இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்<br>மற்றும்<br>* மேற்குறிப்பிடப்பட்ட தகைமைகளில் ஏதேனுமொன்று பூரணப்படுத்தப்பட்டதன் பின்னர் உரிய துறையில் ஐந்து (05) வருடகால கற்பித்தல் மற்றும்/ அல்லது செயன்முறை அனுபவம். |
| 13 | போதனாசிரியர் (ஆபரண வடிவ மைப்பு மற்றும் உற்பத்தி) | * மூன்றாம் நிலை மற்றும் தொழில்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவன மொன்றின் மூலம் தேசிய தொழில் தகைமை (NVQ) 5 ஆம் மட்டத்தின் அல்லது அதனி லும் உயர் மட்டத்தில் உரிய விடயத்துறையின் பாடநெறியொன்று<br>அல்லது |

| தொடர் இல. | பதவி | கல்வி/தொழில்சார் மற்றும் அனுபவம் தொடர்பான தகைமைகள் |
|---|---|---|
| | | * ஆபரண வடிவமைப்பு மற்றும் உற்பத்தி தொடர்பில் டிப்ளோமா<br>மற்றும்<br>* கல்விப் பொதுத் தராதர (சா. த.) பரீட்சையில் சிங்களம்/தமிழ் மொழி மற்றும் கணிதம்/ எண்கணிதம் அடங்கலாக இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்<br>மற்றும்<br>* ஆபரண வடிவமைப்பு மற்றும் உற்பத்தி செய்தல் தொடர்பில் ஐந்து (5) வருடகால கற்பித்தல் மற்றும்/அல்லது செயன்முறை அனுபவம். |
| 14 | போதனாசிரியர் (விவசாயம்) | * மூன்றாம் நிலை மற்றும் தொழில்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவன மொன்றின் மூலம் தேசிய தொழில் தகைமை (NVQ) 5 ஆம் மட்டத்தின் அல்லது அதனிலும் உயர் மட்டத்தில் உரிய விடயத்துறையின் பாடநெறியொன்று<br>அல்லது<br>* அம்பாறை ஹாடி உயர் தொழில்நுட்பக் கல்லூரி, குளியாப்பிட்டி தொழில்நுட்பக் கல்லூரி, தம்புள்ளை தொழில்நுட்பக் கல்லூரி, குண்டசாலை விவசாயப் பாடசாலை, அல்லது பேராதெனிய விவசாயப் பாடசாலை ஒன்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட விவசாய டிப்ளோமா அல்லது சமமான அல்லது உயர் தகைமைகள்<br>* கல்விப் பொதுத் தராதர (சா. த.) பரீட்சையில் சிங்களம்/தமிழ் மொழி மற்றும் கணிதம்/ எண்கணிதம் அடங்கலாக இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்<br>மற்றும்<br>* விடயம் தொடர்பில் ஐந்து (5) வருடகால கற்பித்தல் மற்றும்/ அல்லது செயன்முறை அனுபவம். |
| 15 | போதனாசிரியர் (சுருக்கெழுத்து மற்றும் தட்டச்சு) | * தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களத்தின் கீழுள்ள தொழில்நுட்ப/தொழில்நுட்ப வியல் கல்லூரி ஒன்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட சுருக்கெழுத்து மற்றும் தட்டச்சு தொடர் பான உயர் சான்றிதழ் மற்றும் வணிகச் சான்றிதழை (வணிகக் கணக்கு முறை) உரிய மொழிமூலத்தில் பெற்றிருத்தல் அல்லது சமமான அல்லது உயர் தகைமைகள்<br>மற்றும்<br>* கல்விப் பொதுத் தராதர (சா. த.) பரீட்சையில் சிங்களம்/தமிழ் மொழி மற்றும் கணிதம்/ எண்கணிதம் அடங்கலாக இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்<br>மற்றும்<br>* விடயம் தொடர்பில் ஐந்து (5) வருடகால கற்பித்தல் மற்றும்/ அல்லது செயன்முறை அனுபவம். |

**3. சேவையில் அமர்த்தப்படுவதற்கான நிபந்தனைகள் :**

(i) இந்தப் பதவி நிரந்தரமானது, ஓய்வூதியத்தைக் கொண்டது. விதவை/தாரமிழந்தவர், அநாதை ஓய்வூதிய நிதியத்திற்குச் உதவு தொகை செலுத்துதல் வேண்டும் ;

(ii) நியமனமானது 3 வருட நன்னடத்தைக் காலத்திற்கு உட்பட்டது ;

(iii) இலங்கையின் எந்தப் பகுதியிலும் சேவையாற்றுவதற்கு கட்டுப்பட்டிருத்தல் வேண்டும் ;

(iv) இலங்கைத் தொழில்நுட்பக் கல்விச் சேவையின் (விசேட பதவியணி) III ஆம் வகுப்பிற்கு நியமனம் பெற்று 3 வருட காலத்தில் அதாவது நன்னடத்தைக் காலத்தினுள் முதலாவது வினைத்திறமைகாண் தடைதாண்டலில் சித்தியடைதல் வேண்டும் ;

(v) இந்தப் பதவிக்காக இணைத்துக்கொள்ளப்படுகின்ற உத்தியோகத்தர்கள் பொது நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 01/2014 இற்கு ஏற்ப பதவியில் இணைந்து ஐந்து (05) வருட காலத்தினுள் இரண்டாம் மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

**4. சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகள்.-** இந்தப் பதவிக்குரிய மாதாந்தத் திரட்டிய சம்பள அளவுத்திட்டம் ரூபா 22,935-645x10-790x8-1,050x17- ரூபா 53,555 ஆகும். (SL-1-2006) பொது நிர்வாகச் சுற்றறிக்கை 6/2006 இற்கு அமைய சம்பளம் வழங்கப்படும். மேலே 03 (IV) பந்தியில் குறிப்பிடப்பட்டவாறு வினைத்திறமைகாண் தடையைப் பூர்த்திசெய்தமைக்கமைய சம்பள ஏற்றக் கொடுப்பனவுகள் அமையும்.

**5. எழுத்துப் பரீட்சை.-** பரீட்சைக்காக அனுமதி அட்டை வழங்கப்பட்ட சகல விண்ணப்பதாரிகளும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். பரீட்சையானது, சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழியில் நடைபெறும். ஆங்கிலம்

தொடர்பான போதனாசிரியர் பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு ஆங்கில மொழி மூலத்தில் பெற்றுக்கொண்ட பட்டத்தை தகைமையாகச் சமர்ப்பித்த விண்ணப்பதாரிகள் ஆங்கில மொழியில் நடைபெறும் விசேட வினாப்பத்திரத்துக்குத் தோற்ற வேண்டும்.

பாடத்திட்டம்.- பின்வரும் வினாப்பத்திரங்களுக்குத் தோற்ற வேண்டும் :-

பொது அறிவு (நேரம் : 1 மணித்தியாலம் - 100 புள்ளிகள்).- பொருளாதார, சமூக, அரசியல், பூகோள விடயங்கள் தொடர்பாக தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் விண்ணப்பதாரியிடம் காணப்படும் அறிவைப் பரீட்சிப்பதற்காக இந்த வினாப்பத்திரம் தயாரிக்கப்பட்டுள்ளதோடு, பல்வேறுபட்ட 50 வினாக்களைக் கொண்டிருக்கும். சகல வினாக்களும் கட்டாயமானதாகும்.

மதிநுட்பத்தைப் பரீட்சித்தல் (நேரம் : 1 மணித்தியாலம் - 100 புள்ளிகள்).- விண்ணப்பதாரியின் தர்க்க ரீதியிலான சிந்திக்கும் திறன், தீர்மானம் எடுக்கும் ஆற்றல் மற்றும் அறிவு மட்டத்தைப் பரீட்சித்தல் தொடர்பில் இந்த வினாப்பத்திரமானது, பல்தேர்வு வினாக்களையும் சுருக்க வினாக்களையும் கொண்டிருக்கும். வினாப்பத்திரத்தின் 50 வினாக்களுக்கும் தோற்ற வேண்டிய அதேவேளை, சகல வினாக்களும் கட்டாயமானதாகும்.

ஆங்கிலம் தொடர்பான போதனாசிரியர் பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு ஆங்கில மொழி மூலத்தில் பெற்றுக்கொண்ட பட்டத்தை தகைமையாகச் சமர்ப்பித்த விண்ணப்பதாரிகள் தோற்றவேண்டியுள்ள விசேட ஆங்கில வினாப்பத்திரம் (நேரம் : 1 மணித்தியாலம் - 100 புள்ளிகள்).- கட்டுரை, மதிப்பீடு, சாராம்சம் எழுதுதல், தெளிவு போன்ற பகுதிகளை இந்த வினாப்பத்திரம் கொண்டிருக்கும்.

6. **நேர்முகப் பரீட்சை**.- போட்டிப் பரீட்சையில் சிறப்புத் திறமை வரிசைக்கேற்ப தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்களின் ஆட்சேர்ப்பு அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட அடிப்படைத் தகைமைகளை உறுதிப்படுத்திக்கொள்ளும் பொருட்டு ஒரு நேர்முகப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். (நேர்முகப் பரீட்சைக்குப் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.)

ஒவ்வொரு பாடத்துக்காகவும் 40 வீதமான புள்ளிகள் அல்லது அதற்கு மேலதிக புள்ளிகள் பெறும் விண்ணப்பதாரிகளின் மொத்தப் புள்ளிகளுக்கு ஏற்ப முன்னுரிமைப் பட்டியல் தயாரிக்கப்படுவதோடு, ஒவ்வொரு பாடத்துறையிலும் நிலவுகின்ற வெற்றிடங்களுக்கு ஏற்ப இணைத்துக்கொள்ளப்படும் எண்ணிக்கையானது அரசாங்க சேவைகள் ஆணைக்குழு மூலம் தீர்மானிக்கப்படும்.

**7. விண்ணப்பிக்கும் முறை :**

(i) விண்ணப்பப்பத்திரத்தின் தலைப்பு இலக்கம் 1 தொடக்கம் 7 வரை முதலாம் பக்கத்திலும் 8 முதல் 12 வரை இரண்டாம் பக்கத்திலும் ஏனையவை மூன்றாம் பக்கத்திலும் வருமாறு தயாரித்து அதற்கு உரித்தான தகவல்களை தமது கையெழுத்தினால் பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் மொழி மூலத்தில் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஒத்திராத விண்ணப்பப்படிவங்கள், பூரணமில்லாத தகவல்கள் அடங்கிய விண்ணப்பப்படிவங்கள் அனைத்தும் எந்தவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படுவதோடு, குறித்த விண்ணப்பப்படிவத்தின் பிரதியை வைத்துக்கொள்வது பயனுள்ளதாக அமையும். விண்ணப்பப்பத்திரங்களைத் தயாரிக்கும்போது அந்த தலைப்புக்களில் குறிப்பிடப்படும் பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பங்களில் சிங்களத்துக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்படல் வேண்டும்.

(ii) கீழே காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 2014, யூலை 07 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் பதிவுத்தபாலில் "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஏற்பாடு மற்றும் வெளிநாட்டு பரீட்சைகள் பிரிவு, பரீட்சைகள் திணைக்களம், பெலவத்த, பத்தரமுல்ல" என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்பத்திரத்தை உள்ளடக்கிய கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை தொழில்நுட்பக் கல்விச் சேவையின் (விசேட பதவியணி) III ஆம் வகுப்பிற்கான போதனாசிரியர் பதவி" எனக் குறிப்பிடல் வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள், தமது விண்ணப்பப்படிவத்தில் தாம் தெரிவுசெய்யும் பதவிகளின் ஒழுங்குமுறைக்கு ஏற்ப பதவி எண் மற்றும் பதவிப்பெயர் என்பவற்றைக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும். வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட அடிப்படைத் தகைமைகள் உள்ளவர்கள் மாத்திரமே எழுத்துப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

(iii) அரசாங்க சேவைகளில் உள்ள விண்ணப்பதாரிகள் திணைக்களத் தலைவரூடாகவே தமது விண்ணப்பப்படிவங்களை அனுப்புதல் வேண்டும்.

(iv) பின்வரும் ஆவணங்கள் அனைத்தினதும் பிரதிகள் தம்மால் உறுதிப்படுத்தப்பட்டு விண்ணப்பப்படிவத்துடன் அனுப்பப்படுதல் வேண்டும் :-

(i) பிறப்புச் சான்றிதழ் (க. வே.) கல்வித் திணைக்கள உதவி பெறும் பாடசாலைக்கான ஒழுக்கவிதிக் கோவை நோக்கத்துக்காக வழங்கப்படும் சான்றிதழ் அல்லது சமய தீட்சைச் சான்றிதழ் என்பன ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது ;

(ii) தொடரப்பட்ட பாடங்கள் தொடர்பான விபரங்கள் உள்ளடக்கப்பட்ட பட்டப் படிப்பு சான்றிதழ் அல்லது ஏனைய கல்விச் சான்றிதழ்கள் ;

(iii) அனுபவங்களை உறுதிப்படுத்தும் தொழில்சார் மற்றும்/அல்லது தொழில்நுட்பவியல் தகைமைகள் காணப்படும் சான்றிதழ் ;

(iv) சிங்களத்தில், தமிழில் மற்றும் ஆங்கிலத்தில் சித்தியடைந்த உயர் பரீட்சைச் சான்றிதழ்.

8. **பரீட்சைத் திகதி**.- (i) இந்தப் பரீட்சையானது 2014, செத்தெம்பர் மாதம் கொழும்பு நகரில் நடைபெறும். இந்தப் பரீட்சையைத் தாமதப்படுத்த அல்லது இரத்துச்செய்ய அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் ஆலோசனைக்கு ஏற்ப பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு அதிகாரம் உண்டு.

(ii) விண்ணப்பதாரர்களுக்கு அனுமதி அட்டை வழங்கப்பட்டவுடன் உடனடியாக அதுகுறித்து பத்திரிகை அறிவித்தலொன்று இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தால் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 அல்லது 3 நாட்களின் பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காவிடின், அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அதுபற்றி இலங்கை பரீட்சைகள் திணைக்களத்துக்கு அறிவிக்க வேண்டும். தம்வசம் வைத்துக்கொண்ட விண்ணப்பப்படிவத்தின் மற்றும் பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியையும் பதிவுத்தபால் பற்றுச்சீட்டையும் கொழும்பல்லாத பிரதேசமெனின் அனுமதி அட்டையை அனுப்புவதற்காக தொலைநகல் இலக்கம் குறிப்பிட்டு வேண்டுகோள் கடிதம் ஆகியவற்றுடன் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்துக்கு அனுப்புவது பயனுள்ளதாக இருக்கும்.

9. **பரீட்சை அனுமதி**.- (i) பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் அனுமதி அட்டை வழங்கப்படும் விண்ணப்பதாரி தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திய பரீட்சை அனுமதி அட்டையை பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு செய்யத் தவறும் விண்ணப்பதாரிகள் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்பட மாட்டார்.

(ii) விண்ணப்பதாரி தமக்கு குறிக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். சகல விண்ணப்பதாரிகளும் கடைப்பிடிக்கவேண்டிய சட்டதிட்டங்கள் வர்த்தமானி அறிவித்தலின் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(iii) பரீட்சைகள் நடாத்துவது தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு விண்ணப்பதாரிகள் கட்டுப்பட்டுள்ளனர். அந்த சட்டதிட்டங்கள் மீறப்பட்டால் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கு உட்படுவதற்கு விண்ணப்பதாரிகள் ஆளாவர்.

10. விண்ணப்பதாரியின் ஆளடையாளம்.- தாம் தோற்றும் சகல பாடங்கள் தொடர்பாகவும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்திப்படுமளவு விண்ணப்பதாரர், தமது ஆளடையாளத்தை பரீட்சை மண்டபத்தில் உறுதிப்படுத்தல் வேண்டும். இதன் பொருட்டு-

(1) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;

அல்லது

(2) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு

என்பவை மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும்.

11. **போலியான தகவல்களுக்கு வழங்கப்படும் தண்டனைகள்**.- விண்ணப்பதாரி ஒருவருக்கு தகைமைகள் இல்லையென கண்டுபிடிக்கப்பட்டால் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் காலத்தில் அல்லது பரீட்சையின் பின்னரென எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது பரீட்சார்த்தித் தன்மை இரத்துச்செய்யப்படுவதற்கு இடமுண்டு. விண்ணப்பதாரி போலியானவை எனத் தெரிந்துகொண்டே தகவல்களை முன்வைத்தல் அல்லது ஏதேனும் முக்கியமான ஒன்றை வேண்டுமென்றே மறைத்தல் தொடர்பில் கண்டுபிடிக்கப்பட்டால் அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் ஆளாவர்.

12. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக் கட்டணம் 1,000 ரூபா ஆகும். அக்கட்டணம் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்துக்கு முன்னர் தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் மக்கள் வங்கியின் மத்திய நகரக் கிளை இலக்கமான 176-1001-39026228 எனும் கணக்கிலக்கத்திற்கு நாட்டிலுள்ள ஏதேனும் ஒரு மக்கள் வங்கியின் கிளையில் பணத்தைச் செலுத்தி, செலுத்தியதற்கான பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் உரிய பகுதியில் ஒட்டுதல் வேண்டும். இந்தக் கட்டணம் மீள வழங்கப்பட மாட்டாது. பற்றுச்சீட்டின் பிரதி ஒன்றை உங்களுடன் வைத்துக்கொள்வது உகந்ததாகும்.

13. அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நியமனங்கள் மற்றும் இந்த வர்த்தமானி அறிவித்தலின் 3 ஆம் பிரிவின் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்ட அரசாங்க சேவைப் பதவிகளுக்கு நியமிப்பது தொடர்பிலான பொது நிபந்தனைகள் மற்றும் 1986.08.15 ஆந் திகதியிடப்பட்ட 415 ஆம் இலக்கத்தைக் கொண்ட அரசாங்க வர்த்தமானியின் பொது பகுதி I இல் வெளியிடப்பட்டுள்ள இலங்கை தொழில்நுட்ப கல்விச் சேவையின் பிரமாணக் குறிப்புக்களின்பால் விண்ணப்பதாரிகளின் கவனம் ஈர்க்கப்படுகின்றது. தாபன விதிக்கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 10 முதல் 12 வரையான பந்திகளின் பிரிவுகள் பதவிக்குப் பொருத்தமான வகையில் உரித்தாகும்.

14. வெற்றிடங்களின் ஒரு பகுதியைப் பூரணப்படுத்துவதற்கான அல்லது சகலதையும் பூரணப்படுத்தாமல் இருப்பதற்கான உரிமை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கே உள்ளது.

15. இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிக் கருத்துக்களில் ஏதேனும் முரண்பாடுகள் தோன்றின், அவ்வேளை சிங்கள மொழிக் கருத்தே மேலோங்கி நிற்கும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

செயலாளர்,
இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு.

2014.06.06.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு**

*இலங்கை தொழில்நுட்பக் கல்விச் சேவையின் (விசேட சேவைத் தொகுதி) III ஆம் வகுப்பிற்கான போதனாசிரியர் பதவிகளுக்காக ஆட்சேர்ப்புச் செய்யும் போட்டிப் பரீட்சை -2014*

| விண்ணப்பிக்கும் பதவி | பதவி இலக்கம் | பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் மொழிமூலம் |
|---|---|---|
| | | |
| வர்த்தமானி அறிவித்தலின் 5 ஆம் பந்திக்கு ஏற்ப விசேட ஆங்கில வினாப்பத்திரத்துக்கு தோற்ற வேண்டுமா ? ஆம்/இல்லை | | |

1. முதலெழுத்துக்கள் இறுதியில் குறிப்பிடப்பட்டு, முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
   உதாரணம் : SILVA A. B

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | |

2. முழுப்பெயர் :----.
3. (அ) அலுவலக முகவரி :----.
   (ஆ) தனிப்பட்ட முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
   (இந்த முகவரிக்கு அனுமதி அட்டை அனுப்பப்படும்)
   (இ) தனிப்பட்ட தொலைபேசி இலக்கம் :----.
4. (அ) நீர் இலங்கைப் பிரசையா என்பது பற்றி ? : ஆம் ☐ இல்லை ☐
5. (அ) பிறந்த திகதி :-

   ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

   (ஆ) தேசிய ஆளடையாள அட்டை இல. :----.

   ☐☐☐☐☐☐☐☐☐☐

6. விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது :----.

   வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

7. தற்போது வகிக்கின்ற பதவி தொடர்பான விபரம் :
   (அ) பதவி மற்றும் நியமனத் திகதி :----.
   (ஆ) பதவி நிரந்தரமானதா ? தற்காலிகமானதா ? என்பது தொடர்பிலான விடயம் :----.
   (இ) பதவி ஓய்வூதியத்துடனானதா என்பது தொடர்பிலான விடயம் ? :----.
   (ஈ) பதவியில் நிரந்தரமாக்கப்பட்டமை என்பது தொடர்பிலான விடயம் :----.
   (உ) திணைக்களம் :----.
   (ஊ) நிறுவனம்/சேவை நிலையம் :----.

8. கல்வித் தகைமை தொடர்பான விபரம் (சிங்களம்/தமிழ் மொழித் தேர்ச்சி தொடர்பான சான்றிதழ்களையும் உள்ளடக்கி) :

| சித்தியடைந்த பரீட்சை | பல்கலைக்கழகம்/ நிறுவனம் | சித்தியடைந்த ஆண்டு | பாடத்துறை |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |

9. கற்பித்தல் மற்றும் அனுபவம் தொடர்பான விபரம் :

| கற்பித்த/சேவையாற்றிய நிறுவனத்தின் பெயர் | பதவி | பெற்றுக்கொண்ட சான்றிதழ் | கால எல்லை | பாடத்துறை/ தொழில்சார் துறை |
|---|---|---|---|---|
| 1. | | | | |
| 2. | | | | |
| 3. | | | | |
| 4. | | | | |

(உரிய சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி இணைக்கப்படல் வேண்டும்.)

10. ஏற்கனவே வகித்த பதவி (காலப்பகுதி ஒழுங்கின் அடிப்படையில் சரியான திகதியைக் குறிப்பிட வேண்டும் :

| திணைக்களம்/ நிறுவனம் | சேவை நிலையம் | பதவி | நிரந்தரமானதா தற்காலிகமானதா என்பது பற்றி | இருந்து | வரை | சேவைக் காலம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | | | | | | |
| 2. | | | | | | |
| 3. | | | | | | |
| 4. | | | | | | |

11. நீர் ஏதேனுமொரு குற்றச்சாட்டு தொடர்பாக நீதிமன்றத்தினால் குற்றவாளியாகத் தீர்ப்பு அளிக்கப்பட்டுள்ளீரா ? அவ்வாறு இருப்பின் விபரத்தைக் குறிப்பிடவும் :----.

12. இதற்கு முன்னர் திணைக்களமொன்றில், கூட்டுத்தாபனமொன்றில் அல்லது சபையொன்றில் சேவையாற்றியிருந்தால் அச்சேவையிலிருந்து நீங்கியமைக்கான/நீக்கப்படுவதற்கான காரணத்தைக் குறிப்பிடவும் :----.

13. உமக்கு எதிராக ஏதேனும் ஒழுக்காற்று விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா ? அவ்வாறு இருப்பின், விபரத்தைச் சுருக்கமாகக் குறிப்பிடவும் :----.

பற்றுச்சீட்டு கழன்றுவிடாதவாறு இங்கு ஒட்டப்படல் வேண்டும்.

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் சரியானவையும் உண்மையானவையும் என இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இங்கு வழங்கப்பட்டுள்ள தகவல்கள் ஏதேனும் பொய்யானது அல்லது பிழையானது என நான் தெரிவுசெய்யப்பட முன்னர் தெரியவருமிடத்து, எனது விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும் என்பதையும், தெரிவுசெய்யப்பட்ட பின்னர் அது தொடர்பாக தெரியவரின் எந்தவித நஷ்டஈடும் வழங்கப்படாது சேவையில் இருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன். மேலும் பரீட்சைகள் நடாத்துவது தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் அறிவிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு நான் கட்டுப்படுவேன் எனவும் உறுதியுரைக்கிறேன்.

----,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :----.

தற்போது அரசாங்க மற்றும் மாகாண அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரிகளுக்காக-

**திணைக்களத் தலைவரின் விதப்புரை**

மேற்குறிப்பிடப்பட்ட விண்ணப்பதாரி தொடர்பாக தொடர் இலக்கம் 1 முதல் 13 வரை குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் சரியானவை எனவும், சரியான பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது எனவும் அதன் பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளது என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

திகதி :----.

6-107

---

## இலங்கை நிர்வாக சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2013 (2014)

இலங்கை நிர்வாக சேவையின் தரம் III இன் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்காக தகைமைபெற்ற பரீட்சார்த்திகளிடமிருந்து விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

1. இவ்வறிவித்தலில் உள்ள சொற்பதங்களான-

(அ) 'செயலாளர்' என்பதன் மூலமாகக் கருதப்படுவது, "பொது நிருவாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர்" ஆவார்.
(ஆ) "சேவை" என்பதன் மூலமாகக் கருதப்படுவது, இலங்கை நிர்வாக சேவை ஆகும்.

2. இலங்கை நிர்வாக சேவையின் தரம் III இற்கான ஆட்சேர்ப்பானது இப்பரீட்சையின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

*எழுத்துப் பரீட்சை.-* இப்பரீட்சையானது பின்வரும் நான்கு (4) வினாத்தாள்களைக் கொண்டிருக்கும் :-

(1) பொது விவேகம் ;
(2) இலங்கையின் சமூக, பொருளாதார, அரசியல் பின்னணியும் உலகளாவிய போக்குகளும் ;
(3) பொது நிர்வாகத்துடன் தொடர்புபட்ட விடய ஆய்வு I (தாபன விதிக்கோவை, அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவின் நடைமுறை விதிகள் மற்றும் நிதிப்பிரமாணங்கள் என்பவை சார்ந்தவை) ;
(4) பொது நிர்வாகத்துடன் தொடர்புபட்ட விடய ஆய்வு II (ஆக்கபூர்வமான, பகுப்பாய்வு ரீதியான மற்றும் தொடர்பாடல் திறன்கள் என்பவற்றின் மதிப்பீடு சார்ந்தது.

*பரீட்சை நடைபெறும் திகதி.-* இப்பரீட்சையானது 2014 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் கொழும்பு நகரில் மட்டும் நடாத்தப்படும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்களுக்குட்பட்டு இப்பரீட்சையினைப் பிற்போடுவதற்கோ இரத்துச் செய்வதற்கோ செயலாளருக்கு உரிமையுண்டு.

*நேர்முகப் பரீட்சை.-* எழுத்துப் பரீட்சையின் சகல வினாத்தாள்களுக்கும் தோற்றி அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் வரையறுக்கப்பட்டவாறு போதுமான உயர் மொத்தப் புள்ளிகளைப் பெற்றுள்ள பரீட்சார்த்திகளுக்கு பொது மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையானது நடாத்தப்படும். நேர்முகப் பரீட்சைக்கான திகதியானது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் ஆலோசனைப் படி செயலாளரினால் நிர்ணயிக்கப்படும்.

3. நியமிக்கப்படவுள்ள ஆட்களின் எண்ணிக்கை 46 ஆகும். வெற்றிட எண்ணிக்கைக்கு மேல், இறுதி வெற்றிடம் அல்லது இறுதியான சில வெற்றிடங்களுக்காக சமமான புள்ளிகளைப் பெற்றுள்ள பரீட்சார்த்திகள் காணப்படும் நிலைமைகளில் அத்தகைய வெற்றிடங்களை நிரப்புவதற்கான தீர்மானமானது நடைமுறை விதிகளின் பிரிவு 80 இற்கமைய அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் மூலம் எடுக்கப்படல் வேண்டும். நியமனம் நடைமுறைக்கு வரும் திகதியானது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் பணிப்பின் பேரில் நிர்ணயிக்கப்படல் வேண்டும்.

**4. சேவை நிபந்தனைகள் :**

4.1 அரசாங்க சேவையில் உள்ள நியமனங்களை நிர்வகிக்கும் பொது நிபந்தனைகளுக்கு உட்பட்டு மற்றும் 2013.12.23 ஆந் திகதிய 1842/2 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை நிர்வாக சேவையின் பிரமாணக் குறிப்பில் காட்டப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் பிரமாணக் குறிப்பில் மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் திருத்தங்கள் அல்லது இதனகத்துப் பின்னர் மேற்கொள்ளப்படவுள்ள திருத்தங்கள், தாபன விதிக்கோவையின் நிதிப்பிரமாணங்கள், 2009.02.20 ஆந் திகதிய 1589/30 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் என்பவற்றின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட பரீட்சார்த்தி ஒருவர் இலங்கை நிர்வாக சேவையின் தரம் III இற்கு நியமிக்கப் படுவார்.

4.2 இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதிய உரித்துடையதுமாகும். விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம்/ தபுதாரர், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

4.3 நியமனமானது ஒரு வருட வேலை பார்க்கும் காலப்பகுதி ஒன்றிற்கு உட்பட்டதாகும். சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டவாறு இலங்கை நிர்வாக சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்த திகதியிலிருந்து 3 வருடத்திற்குள் முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையானது சித்தியெய்தப்படல் வேண்டும்.

4.4 பொது நிர்வாகச் சுற்றறிக்கை 01/2014 மற்றும் தொடர்ந்து வரும் சுற்றறிக்கைகள் ஆகியவற்றுக்கிணங்க சேவையில் இணைந்து 5 வருடத்திற்குள் குறித்துரைக்கப்பட்ட அரச கரும மொழித் தேர்ச்சியானது பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

4.5 நியமிக்கப்பட்ட பதவியின் கடமைகளை உரிய திகதியில் பொறுப்பேற்கத் தவறுகின்ற மற்றும்/அல்லது தான் நியமிக்கப்படும் பிரதேசம் ஒன்றில் சேவையாற்ற மறுக்கின்ற அல்லது தவிர்க்கின்ற ஏதேனும் பரீட்சார்த்தியின் நியமனத்தினை இரத்துச்செய்வதற்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு அதிகாரம் உண்டு.

5. **மாதாந்த சம்பள அளவுத்திட்டம்**.- 06/2006 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் எஸ். எல். 1-2006 சம்பளத் தொகுதியானது இச்சேவைக்குப் பிரயோகிக்கப்படுவதுடன் கூறப்பட்ட சம்பளத் தொகுதிக்கு உரித்துடைய சம்பள அளவுத்திட்டமானது பின்வருமாறு :

ரூபா 22,935 - 10 × 645 - 8 × 790 - 17 × 1,050 - ரூபா 53,555 (மாதாந்தம்)

6. **ஆட்சேர்ப்பதற்கான தகுதி**.- (அ) (i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ii) நன்நடத்தை உடையவராக இருத்தல் வேண்டும் ;

(iii) சிறந்த ஒழுக்க நடத்தையுடனும் நாட்டின் எப்பகுதியிலும் சேவையாற்றுவதற்கான தேகாரோக்கியத்துடனும் இருத்தல் வேண்டும்

(ஆ) கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம்.- (i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டம் வழங்கும் நிறுவனம் ஒன்றிலிருந்து பட்டம் ஒன்றினைப் பெற்றிருத்தல் வேண்டும் ;

அத்துடன்

அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் நிரந்தர ஓய்வூதிய உரித்துடைய பொது நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 06/2006 இல் சம்பளக் குறியீட்டு இலக்கம் எம்என்-2-2006 அல்லது அதற்கு மேற்பட்ட எம்என் சம்பளக் குறியீட்டு இலக்கத்தின்கீழ் சம்பளம் பெறுகின்ற அல்லது எஸ்எல்-1-2006 சம்பளக் குறியீட்டு இலக்கத்தின்கீழ் சம்பளம் பெறுகின்ற சேவையில்/பதவியில் குறைந்தபட்சம் ஐந்து (5) வருட முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்துள்ள அலுவலராக இருத்தல் ;

அல்லது

(ii) அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் நிரந்தர ஓய்வூதிய உரித்துடைய பொது நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 06/2006 இல் சம்பளக் குறியீட்டு இலக்கம் எம்என்-2-2006 அல்லது அதற்கு மேற்பட்ட எம்என் சம்பளக் குறியீட்டு இலக்கத்தின்கீழ் சம்பளம் பெறுகின்ற அல்லது எஸ்எல்-1-2006 சம்பளக் குறியீட்டு இலக்கத்தின்கீழ் சம்பளம் பெறுகின்ற சேவையில்/பதவியில் குறைந்தபட்சம் பத்து (10) வருட முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்துள்ள அலுவலராக இருத்தல்.

**குறிப்பு** :

(1) பட்டம் நடைமுறைக்கு வரும் திகதியானது 2013.12.31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னராக இருத்தல் வேண்டும் ;

(2) மேற்குறிப்பிடப்பட்ட சேவைக்காலத்தைக் கணிப்பிடும்போது அரசாங்க சேவையில் அத்துடன்/அல்லது மாகாண அரச சேவையிலுள்ள தொடர்ச்சியான சேவைக்காலத்தின் மொத்தமானது கருத்திற்கொள்ளப்படும்.

(இ) வயது மற்றும் பூர்த்திசெய்திருக்க வேண்டிய ஏனைய தகைமைகள்.- (i) 2013.12.31 ஆந் திகதியன்று வயதெல்லை 53 வருடத்திற்கு மேற்பட்டதாக இருத்தலாகாது ;

(ii) மேலே 6 (ஆ) இல் குறிப்பிடப்பட்ட சேவை/பதவி ஒன்றில் நிரந்தரப் பதவியினைப் பெற்றிருத்தல் வேண்டும் ;

(iii) உடன் முன்வரும் 5 வருடங்களில் ஏதேனும் ஒழுக்காற்றுத் தண்டனைக்கு உட்பட்டிருத்தலாகாது ;

(iv) உடன் முன்வரும் 5 வருங்களில் உரிய சம்பள ஏற்றங்களை உழைத்திருத்தல் வேண்டும்.

(ஈ) தகைமைகள் பற்றிய வரையறைகள்.- (i) மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு இரண்டு (2) தடவைகளுக்கு மேல் தோற்ற எந்தவோர் பரீட்சார்த்தியும் அனுமதிக்கப்படமாட்டார். (முன்னைய சேவைப் பிரமாணக் குறிப்பின்கீழ் இலங்கை நிர்வாக சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான பரீட்சைகளில் அமர்வுகளின் எண்ணிக்கையானது கருத்திற்கொள்ளப்படுவதில்லை.)

(ii) இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கத் தேவைப்படுத்தப்படும் தகைமைகள் 2013.12.31 ஆந் திகதியளவில் முழுமையாகப் பூர்த்தி செய்திருக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(iii) எந்தவொரு மதத்தையும் சேர்ந்த துறவிகளும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

7. **பரீட்சைக் கட்டணம்**.- இப்பரீட்சைக்கான கட்டணம் 1,000 ரூபாவாக இருக்கும். இது விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு வரவு வைக்கப்பட்டு ஏதேனும் மாவட்ட/பிரதேச செயலகத்தில் செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன், அவ்வாறு விண்ணப்பதாரியின் பெயரில் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டானது விண்ணப்பப் படிவத்தின் உரிய கூட்டில் ஒட்டப்படல் வேண்டும். கட்டணமானது மீளச் செலுத்தப்பட மாட்டாது. பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதி ஒன்றினை வைத்திருப்பது உகந்ததாக இருக்கும்.

8. **விண்ணப்பிக்கும் முறை**.- (அ) விண்ணப்பப்படிவம் இவ்வறி வித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தினை ஒத்ததாக இருத்தல் வேண்டுமென்பதுடன் அதனை தாளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி A4 அளவிலான தாளில் தயாரித்தல் வேண்டும். 1 முதல் 2.12 வரையான தலைப்புக்கள் முதலாம் பக்கத்திலும், 3 தொடக்கம் 4(ii) வரையானவை இரண்டாம் பக்கத்திலும், எஞ்சிய பகுதிகள் மூன்றாம் பக்கத்திலும் உள்ளடங்கும் வகையில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும் என்பது விசேடமாகக் குறிப்பிடப்படுகின்றது. கணினியில் தயாரிக்கப்படும் விண்ணப்பம்/ தட்டச்சு விண்ணப்பங்களும் இந்நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்பட முடியும். விண்ணப்பம் பரீட்சார்த்தியினாலேயே தனது சொந்தக் கையெழுத்தில் தெளிவாகப் பூர்த்திசெய்யப்படல் வேண்டும் என்பதுடன்

மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்கிய வகையில் தயாரிக்கப்படாத விண்ணப்பங்களும் முழுமையாகத் தகவல்கள் குறிப்பிடப்படாத விண்ணப்பங்களும் அறிவித்தல் எதுவுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியொன்றை தம்வசம் வைத்திருப்பது பயனளிக்கக்கூடும். பூர்த்திசெய்யப்படும் விண்ணப்பங்கள் பரீட்சை அறிவித்தலில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்கியதாக உள்ளனவா என்பதைச் சரி பார்ப்பது விண்ணப்பதாரியின் பொறுப்பாகும். இல்லையேல் விண்ணப்பம் நிராகரிக்கப்படலாம்.

(ஆ) பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலத்திலேயே விண்ணப்பங்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பங்களைத் தயாரிக்கும்போது அதன் தலைப்பில் உள்ள பரீட்சையின் பெயர் சிங்கள மற்றும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் உரிய மொழிகளுக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் எழுதப்படுதல் வேண்டும்.

(இ) பரீட்சார்த்திகளினால் பூரணப்படுத்தப்படும் விண்ணப்பங்கள் 2014, யூலை மாதம் 7 ஆந் திகதிக்கு முன்னர் பின்வரும் முகவரியினை அடையக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் உரிய திணைக்களத் தலைவர் ஊடாக அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் இடப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் “இலங்கை நிர்வாக சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2013 (2014)” என தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும். இத்திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் :

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்,
ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை,
பரீட்சைகள் திணைக்களம்,
த. பெ. இல. 1503,
கொழும்பு.

(ஈ) பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தின் போதான விண்ணப்பதாரர்களின் பதவி மற்றும் சேவை நிலையம் என்பன பரீட்சை தொடர்பான சகல நடவடிக்கைகளுக்கும் ஏற்புடையதாவதோடு விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டதன் பின்னர் அது தொடர்பாக ஏற்படும் மாற்றங்கள் எதுவும் கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.

(உ) ஒவ்வொரு அம்சமும் முழுமையில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்பத்திரம் தபாலில் தொலைந்துவிட்டதாகவோ தாமதமானதாகவோ கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.

(ஊ) பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டவுன் பரீட்சைகள் திணைக்களத்தினால் பத்திரிகைகளில் அறிவிப்பொன்று வெளியிடப்படும். அத்தகைய அறிவிப்பு வெளியாகி 2 நாட்கள் அல்லது 3 நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காவிடின் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவிக்கும்போது பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், முகவரி மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம் என்பன குறிப்பிடப்படல் வேண்டும். கொழும்புக்கு வெளியேயுள்ள விண்ணப்பதாரிகளாயின் அனுமதி அட்டை அனுப்பப்படவுள்ள ஒரு தொலைநகல் (பெக்ஸ்) இலக்கத்தைக் குறிப்பிட்டு கூறப்பட்ட அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தொலைநகல் இலக்கத்திற்கு கோரிக்கைக் கடிதம் ஒன்றை அனுப்புதல் கூடுதல் பயனுடையதாகும். விண்ணப்பப்படிவம் மற்றும் பரீட்சைக் கட்டணம், பற்றுச்சீட்டு என்பவற்றின் பிரதி மற்றும் கடிதம் பதிவுசெய்த பற்றுச்சீட்டு ஆகியவற்றினை வைத்துக்கொள்ளுதல் பயனுடையதாகும்.

9. **பரீட்சைக்கு அனுமதித்தல்.**- (அ) சகல விதத்திலும் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்ற சகலருக்கும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அனுமதி அட்டைகளை வழங்குவார். தனது அனுமதி அட்டையினைச் சமர்ப்பிக்கத் தவறுகின்ற ஏதேனும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்.

(ஆ) பரீட்சார்த்தி ஒருவர் தமக்கு ஒதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்காகத் தோற்றுதல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகள் ஒவ்வொருவரும் தமது கையொப்பத்தை முன்கூட்டியே உறுதிப்படுத்திய அனுமதிப்பத்திரங்களைப் பரீட்சைக்குத் தோற்றும் முதலாம் நாளில் மண்டப மேற்பார்வையாளருக்கு கையளிக்க வேண்டும். சகல பரீட்சார்த்திகளும் கையாள வேண்டிய விதிக்கோவை ஒன்று இவ்வர்த்தமானிப் பத்திரிகையில் வெளியிடப்படுகின்றது.

(இ) பரீட்சை நடாத்துதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிதல் வேண்டும். அச்சட்ட விதிகளை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு உள்ளாதல் வேண்டும். பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**குறிப்பு.**- பரீட்சைக்காக அனுமதி அட்டை வழங்கப்பட்டமையானது பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சையில் தோற்றுவதற்கான தகுதியினைக் கொண்டுள்ளார் என்பதனை அவசியமாகக் கருதாது.

10. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்.**- பரீட்சார்த்திகள் தாம் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடத்தின்போதும் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டும். அதற்காக பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;
(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

11. **பிழையான தகவல்கள் அளிப்பதற்கான தண்டனை.**- எவரேனும் பரீட்சார்த்தி ஒருவர் தகுதியற்றவர் எனத் தெரியவருமாயின் பரீட்சையின் முன்னரோ அல்லது பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலும் அவரின் பரீட்சார்த்தி உரிமை இரத்துச்செய்யப்படலாம். பரீட்சார்த்தி ஒருவர் வேண்டுமென்றே பிழையான தகவல்களை அளித்துள்ளார் அல்லது வேண்டுமென்றே ஏதேனும் ஒரு விடயத்தை மூடிமறைத்திருப்பதாக வெளிவந்தால் அவர் அரச சேவையிலிருந்து பதவி நீக்கத்திற்கும் ஆளாவார்.

12. இவ்வறிவித்தலில் ஏற்பாடு செய்யப்படாத ஏதேனும் விடயமானது அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்களுக்குட்பட்டு செயலாளரினால் வரையறுக்கப்பட்டவாறு கையாளப்படல் வேண்டும்.

13. **பரீட்சைத் திட்டம் மற்றும் பரீட்சை மொழி மூலம் :-**

(அ) இப்பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும்.

(ஆ) பரீட்சார்த்தி ஒருவர் தான் சேவைக்குச் சேர்வதற்காகத் தரப்படுத்தல் பரீட்சையினை/ நேர்முகப் பரீட்சையினை சித்தியெய்திய மொழிமூலத்தில் அல்லது அரச கரும மொழியிலோ பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

**குறிப்பு :**

(i) பரீட்சார்த்தி ஒருவர் ஒரே மொழியில் பரீட்சையின் சகல வினாத்தாள்களுக்கும் தோற்றுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப்படிவத்தில் சுட்டிக்காட்டப்பட்ட மொழி மூலத்தினை மாற்றுவதற்கு பரீட்சார்த்திகள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

**14. ஆட்சேர்ப்பு முறை :**

14.1 எழுத்துமூலப் பரீட்சை.- பின்வரும் பாடங்களை உள்ளடக்கிய எழுத்துமூலப் பரீட்சை ஒன்று நடாத்தப்படும். பாடங்கள் மற்றும் ஒவ்வொரு பாடத்திலிருந்தும் பெற்றுக்கொள்ள வேண்டிய குறைந்தபட்சப் புள்ளிகள் என்பன பின்வருமாறு :-

| | பாடம் | புள்ளிகள் | குறைந்தபட்ச சித்தியெய்தல் புள்ளிகள் |
|---|---|---|---|
| 1 | பொது விவேகம் | 100 | 50 |
| 2 | இலங்கையின் சமூக, பொருளாதார, அரசியல் பின்னணியும் உலகளாவிய போக்குகளும் | 100 | 50 |
| 3 | பொது நிர்வாகத்துடன் தொடர்புபட்ட விடய ஆய்வு I (தாபன விதிக்கோவை, அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் மற்றும் நிதிப் பிரமாணங்கள் என்பவை சார்ந்தவை) | 100 | 50 |
| 4 | பொது நிர்வாகத்துடன் தொடர்புபட்ட விடய ஆய்வு II (ஆக்கபூர்வமான, பகுப்பாய்வு ரீதியான மற்றும் தொடர்பாடல் திறன்கள் என்பவற்றின் மதிப்பீடு சார்ந்தது) | 100 | 50 |

பரீட்சார்த்திகள் சகல வினாப்பத்திரங்களுக்கும் தோற்றுதல் வேண்டும்.

14.2 பொது மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை.- (i) நேர்முகப் பரீட்சையானது இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது. அதாவது பொது நேர்முகப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை :-

(அ) பொது நேர்முகப்பரீட்சை :

(i) மேற்படி பந்தி 6 இல் விதித்துரைக்கப்பட்ட ஆட்சேர்ப்புக்கான தகைமைகள் பூர்த்திசெய்யப் பட்டுள்ளனவா என்றும் தகுதி தொடர்பான வரையறைகளுக்கு விண்ணப்பதாரிகள் இணங்கியொழுகின்றனரா என்றும் உறுதிப் படுத்துவதற்கு பொது நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

(ii) பொது நேர்முகப் பரீட்சைச் சபைக் குழுவானது அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும்.

(ஆ) கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை.- கட்டமைக்கப் பட்ட நேர்முகப் பரீட்சையானது பரீட்சார்த்திகளின் முகாமைத்துவத் திறன்கள், தலைமைத்துவப் பண்புகள், தொடர்பாடல் திறன்கள் மற்றும் ஆளுமை என்பவற்றை அளவிடுவதற்குப் பின்வரும் நடைமுறையுடன் ஒத்திசைவாக நடாத்தப்படும். இது தொடர்பில் இயைபாக்கப்படும் முறைமையானது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் ஆலோசனையுடன் பொது நிர்வாகச் செயலாளரினால் உருவாக்கப் பட்டுள்ளது. இந்நேர்முகப் பரீட்சையில் பெற்றுக் கொள்ளக்கூடிய ஆகக்கூடிய புள்ளிகள் இருபத்தைந்து (25) ஆகும்.

| | விடயத் தலைப்பு | உச்சப் புள்ளி |
|---|---|---|
| 1 | முகாமைத்துவப் பண்பு | 10 |
| 2 | தலைமைத்துவப் பண்பு | 05 |
| 3 | தொடர்பாடல் திறமை | 05 |
| 4 | ஆளுமை | 05 |
| | மொத்தம் | 25 |

(i) ஒவ்வொரு பாடத்திலும் ஆகக்குறைந்தது ஐம்பது (50%) புள்ளிகளைப் பெற்ற பரீட்சார்த்திகளில் சகல பாடங்களிற்கும் மொத்தமாக உச்ச புள்ளிகளைப் பெறுகின்றவர்கள் பொது நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதி பெறுவர். தகுதிபெற்ற பரீட்சார்த்திகளில் நிரப்பப்பட எதிர்பார்க்கப்படும் வெற்றிடங்களுக்கிணங்க ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் மொத்த எண்ணிக்கைக்குச் சமனானதோர் எண்ணிக்கையானோர் மற்றும் எதிர்பார்க்கப்படும் வெற்றிட எண்ணிக்கையின் 25% ஆனோர் மட்டும் பொது நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவார்கள். தகுதிபெற்ற விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கையானது மேலே குறிப்பிடப்பட்ட எண்ணிக்கையினைத் தொகையிடவில்லையாயின் அவ்வாறு தகுதி பெற்ற பரீட்சார்த்திகளின் அத்தகைய

எண்ணிக்கையினர் மட்டும் பொது நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவார்கள்.

(ii) தகைமைகளைப் பரீட்சிப்பதற்கு கட்டமைக்கப் பட்ட நேர்முகப் பரீட்சைக்கு முன்னராக பொது நேர்முகப் பரீட்சையானது நடாத்தப்படும் என்பதுடன் அங்கே எதுவித புள்ளிகளும் ஒதுக்கப்பட மாட்டாது. பொது நேர்முகப் பரீட்சையில் ஆட்சேர்ப்பதற்கான சகல தகைமைகளையும் பூர்த்திசெய்துள்ளதனை உறுதிப் படுத்திய விண்ணப்பதாரிகள் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதற்குத் தகுதிபெறுவர். குறித்த சில எண்ணிக்கையான பரீட்சார்த்திகள் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதற்கு தகுதிப்படுத்தப்படா விட்டாலுங்கூட ஏனைய பரீட்சார்த்திகள் அவ்வாறு தகுதிப்படுத்தப்படாதவர்களின் இடத்துக்காக பொது நேர்முகப் பரீட்சைக்கு மீண்டும் அழைக்கப்பட மாட்டார்கள்.

(iii) நிலவும் வெற்றிடங்களுக்கிணங்க நியமிக்கப்பட எதிர்பார்க்கப்படும் பரீட்சார்த்திகளின் எண்ணிக்கையினரால் எழுத்துப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை என்பவற்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட மொத்தப் புள்ளிகளுக்கமைய உச்ச புள்ளிகளைப் பெற்றுள்ள பரீட்சார்த்திகளிலிருந்து ஆரம் பித்து திறமை அடிப்படையில் தரம் மூன்றிற்கு (III) நியமனங்கள் மேற்கொள்ளப்படும்.

**கவனிக்கவும்**.- நேர்முகப் பரீட்சைக்கு சமூக மளித்தலானது நியமனம் ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்கு ஏற்ற சகல தகைமைகளைக் கொண்டிருப்பதாக கருதப்படலாகாது.

15. **எழுத்துப் பரீட்சைப் பாடத்திட்டம்** :

(1) *பொது விவேகம்*.- எண்கள், மொழிசார் மற்றும் உருவ வடிவங்கள், இடைத்தொடர்புகளுடன் சம்பந்தப்பட்ட சிக்கல்கள் தொடர்பிலான பகுப்பாய்வுத் திறமை, தர்க்க ரீதியான விளக்கம், பொருள் கோடல் ஆற்றல், ஏனைய நிலைமைகளுக்கு ஏற்புடையதாக ஆக்கிக்கொள்ளும் ஆற்றல் மற்றும் முடிபுகளுக்கு வருதல் தொடர்பாக பரீட்சார்த்திக்கு உள்ள புத்திக்கூர்மை மட்டத்தை அளவிடுவது இதன் மூலமாக எதிர்பார்க்கப்படுகின்றது. (காலம் : 1 1/2 மணித்தியாலங்கள் - 100 புள்ளிகள்.) இவ்வினாத்தாள் பல்தேர்வு வினாக்கள் மற்றும் சுருக்க விடைகளுக்கான வினாக்கள் என்பவற்றைக் கொண்டிருக்கும். சகல வினாக்களுக்கும் விடையளிக்கப்படல் வேண்டும்.)

(2) *இலங்கையின் சமூக, பொருளாதார, அரசியல் பின்னணியும் உலகளாவிய போக்குகளும்*.- இலங்கை மற்றும் உலகின் சமூக, பொருளாதார, அரசியல், கலாசார, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப நிலைமைகள் பற்றிய பரீட்சார்த்தியின் விடய அறிவு அல்லது பரீட்சார்த்திக்கு முன்வைக்கப்படுகின்ற சூழ்நிலை ஒன்றுடன் தொடர்புடையதாக ஆக்கபூர்வமாக, பகுப்பாய்வு ரீதியாக மற்றும் விமர்சன ரீதியாக சிந்திக்கும் ஆற்றல், முன்னுரிமை பற்றித் தீர்மானிக்கும் ஆற்றல் மற்றும் உபாயமார்க்க ரீதியாக எதிர்காலத்தை எதிர்வுகூறக்கூடிய ஆற்றல் சம்பந்தமாக பரீட்சார்த்தி கொண்டுள்ள திறமைகளை அளவிடுவது இதன் மூலமாக எதிர்பார்க்கப்படுகின்றது. (காலம் : 3 மணித்தியாலங்கள் - 100 புள்ளிகள்.) இவ்வினாத் தாள் பல்தேர்வு வினாக்கள், சுருக்க விடைகளுக்கான வினாக்கள், கட்டமைக்கப்பட்ட கட்டுரைகள், வினாக்கள் மற்றும் கட்டுரைகள், வினாக்கள் என்பவற்றைக் கொண்டிருக்கும். சகல வினாக்களுக்கும் விடையளிக்கப்படல் வேண்டும்.

(3) *பொது நிர்வாகத்துடன் தொடர்புபட்ட விடய ஆய்வு I (தாபன விதிக்கோவை, அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவின் நடைமுறை விதிகள் மற்றும் நிதிப்பிரமாணங்கள் என்பவை சார்ந்தவை)*.- அரசாங்க சேவையில் வேறுபட்ட சுற்றுச்சூழல் களில் தோன்றக்கூடிய சிக்கலொன்றை அல்லது ஒரு சிலவற்றைத் தொடர்புபடுத்திக் கொண்டு உருவாக்கப்பட்ட சம்பவமொன்றை/ சம்பவங்களை பரீட்சார்த்தியிடம் முன்வைத்து பரீட்சார்த்தி கொண்டுள்ள ஆக்கபூர்வமான சிந்தனைச் சக்தியையும் சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதற்கான ஆற்றலையும் தாபன விதிக்கோவை மற்றும் நிதிப் பிரமாணங்களுடன் தொடர்புடையதாக அரசாங்க சேவையின் நடைமுறைகள் சார்ந்ததாக அளவிடுதலே இதன் மூலமாக எதிர்பார்க்கப்படுகின்றது. (காலம் : 3 மணித்தியாலங்கள் - 100 புள்ளிகள்.) இவ்வினாத்தாள் பல்தேர்வு வினாக்கள், சுருக்க விடைகளுக்கான வினாக்கள், கட்டமைக்கப்பட்ட கட்டுரைகள், வினாக்கள் மற்றும் கட்டுரைகள், வினாக்கள் என்பவற்றைக் கொண்டிருக்கும். சகல வினாக்களுக்கும் விடையளிக்கப்படல் வேண்டும்.

(4) *பொது நிர்வாகத்துடன் தொடர்புபட்ட விடய ஆய்வு II (ஆக்கபூர்வமான, பகுப்பாய்வு ரீதியான மற்றும் தொடர்பாடல் திறன்கள் என்பவற்றின் மதிப்பீடு சார்ந்தது)*.- தரப்பட்ட தலையங்கங்கள்/ தொனிப் பொருள்கள் பலவற்றிலிருந்து பரீட்சார்த்தி தானாகவே தெரிவுசெய்யும் ஒரு தலையங்கம்/ தொனிப்பொருள் பற்றி கருத்துக்களையும் தகவல்களையும் பகுப்பாய்தல், தொகுத்தல் மற்றும் சமர்ப்பித்தல் தொடர்பில் பரீட்சார்த்தி காட்டுகின்ற தர்க்க ரீதியான மற்றும் சிந்தனை சக்தியை அளவிடுதலும் ஓரளவு சிக்கலான பந்தியொன்றை, எழுத்தாவணம் அல்லது நிருபமொன்றை ஊகித்துணர்ந்து கொள்ளவும் அதன் முக்கிய கருத்துக்களைத் தனது சொல்லில் சுருக்கி சரியாகவும் தெளிவாகவும் தெரிவிப்பதில் அவருக்குள்ள ஆற்றலை அளவிடுதலும் இதன் மூலமாக எதிர்பார்க்கப்படுகின்றது. (காலம் : 3 மணித்தியாலங்கள் - 100) புள்ளிகள். சகல வினாக்களுக்கும் விடையளிக்கப்படல் வேண்டும்.

16. இப்பரீட்சை அறிவித்தலிலுள்ள சிங்களம், தமிழ், ஆங்கில மொழி உரைகளுக்கிடையில் ஏதேனும் வேறுபாடு காணப்படும் பட்சத்தில் சிங்கள மொழி உரையே மேலோங்குதல் வேண்டும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

பி. பீ. அபேகோன்,
செயலாளர்,
பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2014, மே 22.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்காக)

**இலங்கை நிர்வாக சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2013 (2014)**

LIMITED COMPETITIVE EXAMINATION FOR RECRUITMENT TO GRADE III OF SRI LANKA ADMINISTRATIVE SERVICE - 2013 (2014)

1. மொழி மூலம் :
   பரீட்சைக்கு தோற்றும் மொழி மூலம் :
   சிங்களம் - 2
   தமிழ் - 3
   ஆங்கிலம் - 4
   (உரிய இலக்கத்தை கூட்டினுள் குறிப்பிடவும்)

   பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்ற உத்தேசித்துள்ள மொழி மூலத்தில் விண்ணப்பமானது நிரப்பப்படல் வேண்டும்.

2. தனிப்பட்ட தகவல்கள் :

2.1 முதலெழுத்துக்களை இறுதியாக இட்டு பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :-----.
உதாரணம் : GUNAWARDHANA, M. G. B. S. K.

2.2 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :-----.

2.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :-----.

2.4 அலுவலக முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :
(அனுமதி அட்டை இம்முகவரிக்கு அனுப்பப்படும்) :-----.

2.5 அலுவலக முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :-----.

2.6 தனிப்பட்ட முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :-----.

2.7 பால் (ஆண் - 0, பெண் - 1)
(உரிய இலக்கத்தை கூட்டினுள் குறிப்பிடவும்)

2.8 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

2.9 விவாக நிலை :
(விவாகமாகாதவர் -1, விவாகமானவர் - 2)
(உரிய இலக்கத்தை கூட்டினுள் குறிப்பிடவும்)

2.10 இனம் (சிங்களவர் -1, தமிழர் - 2, இந்தியத் தமிழர் - 3, முஸ்லிம் - 4, ஏனையோர் - 5) :-
(உரிய இலக்கத்தை கூட்டினுள் குறிப்பிடவும்)

2.11 பிறந்த திகதி :

ஆண்டு : மாதம் : திகதி :

2.12 தொலைபேசி இலக்கம் :

3. 2013.12.31 ஆந் திகதியிலுள்ளவாறு சேவைக்கு/ தரத்திற்கு உள்வருவதற்காக தரப்படுத்தல் பரீட்சை/நேர்முகப் பரீட்சையினைத் தாங்கள் சித்தியெய்திய மொழி மூலத்தினைக் குறிப்பிடவும் :----.

4. (i) வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 6 இல் குறிப்பிடப்பட்ட சகல தகைமைகளும் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதா ? :----.

(அ) 2013.12.31 ஆந் திகதியிலுள்ளவாறு வயது :----.

(ஆ) கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம்.- வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 6(ஆ) இற்கமைய பந்தி 6 (ஆ) I அல்லது (ஆ) II இன்கீழ் பரீட்சார்த்தி தகைமை பெற்றுள்ளாரா என்பதைக் குறிப்பிடவும் :----.

பட்டம் பெற்ற திகதி :----.
பல்கலைக்கழகம்/நிறுவகம் :----.
பதிவிலக்கம் :----.
உள்வாரி/வெளிவாரி :----.
பட்டம் :----.
பாடங்கள் :----.
வகுப்பு :----.
மேல்/கீழ் :----.
பட்டம் நடைமுறைக்கு வரும் திகதி :----.
பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றிய மொழிமூலம் : ----.

(இ) சேவை/ தரம் ....................................... தங்களின் சேவை/ தரம் [வகுப்பு, தரம் அல்லது தொகுதி (ஏதேனும் இருப்பின்) சுட்டிக்காட்டப்படல் வேண்டும்] : ----.
தற்போதைய பதவி :----.
கூறப்பட்ட பதவியானது அரச சேவைக்கு அல்லது மாகாண அரச சேவைக்கு உரியதா ? :----.
தரம் :----.
வகுப்பு/தொகுதி :----.
பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி :----.
கூறப்பட்ட பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட திகதி :----.
சம்பளக் குறியீடு மற்றும் சம்பள அளவுத்திட்டம் :----.

இப்பதவிக்கு விண்ணப்பிப்பதற்காக தகைமை பெறுவதற்கு சில சேவைகள் தங்களுக்கு ஏற்புடைய தாயின் சேவையில் கூறப்பட்ட காலப்பகுதியின் விபரங்கள் (முனைப்பானதும் திருப்திகரமானதும்) பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்படல் வேண்டும்.

| சேவையின் பெயர்/தரம் | பொ. நி. சுற்றறிக்கைக் கமைய ஏற்புடையதான சம்பளக் குறியீடு உதாரணம் : MN2-2006(A) | நியமனத் திகதி |
|---|---|---|
| (1) | | |
| (2) | | |
| (3) | | |
| (4) | | |
| (5) | | |

(ii) வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 6 இல் குறிப்பிடப்பட்ட அனுமதிக்கப்பட்ட பதவி ஒன்றின் சேவைகள்/தரங்களின் தகைமைகள் பூர்த்திசெய்யப்பட வேண்டிய 2013.12.31 ஆந் திகதியிலுள்ளவாறான முனைப்பானதும் திருப்திகரமானது மான மொத்த சேவைக்காலம் :----.

5. பணம் செலுத்திய பற்றுச்சீட்டினை கழறாதவாறு ஒட்டவும் :

| |
|---|
| (விளிம்பிலிருந்து இறுக்கமாக பணப்பற்றுச்சீட்டினை (மூலப்பிரதி) ஒட்டவும்.<br>(பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியினை வைத்திருக்கவும்.) |

6. பரீட்சார்த்தியின் சான்றுரை :

2013.12.31 ஆந் திகதிக்கு முன்வரும் ஐந்து வருட காலப்பகுதியில் வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 6 (ஆ) இற்கமைய 2013.12.31 ஆந் திகதியிலுள்ளவாறு சகல சம்பள ஏற்றங்களையும் (சேவை அல்லது திணைக்களப் பரீட்சையில் சித்தியடைதல் நிபந்தனையாக அமைகின்ற சம்பள ஏற்றம் தவிர்ந்த) நான் உழைத்துள்ளதுடன் முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக்காலத்தைக் கொண்டுள்ளேன் என்பதுடன் எந்த வடிவிலான ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் (எச்சரிக்கைகள் தவிர்ந்த) நான் உட்படுத்தப் பட்டிருக்கவில்லை என்பதையும் நான் பிரகடனம் செய்கின்றேன். மேலும், பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கும் நான் கட்டுப்படுவேன் என்றும் நான் பிரகடனம் செய்கின்றேன்.

வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட சகல விதிகளுக்கும், ஒழுங்குவிதிகளுக்கும் அமைய இம்மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எனக்கு தகுதியுள்ளது என்றும் எனது அறிவுக்கு எட்டியவரை இதில் தரப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை எனவும் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட .................................. ஆந் திகதிய ........................... ஆம் இலக்கப் பற்றுச்சீட்டினை இதில் ஒட்டியுள்ளேன் என்றும் நான் பிரகடனம் செய்கின்றேன். இப்பரீட்சையின் விதிகள் மற்றும் ஒழுங்குவிதி களுக்கு கட்டுப்படுவதற்கும் இப்பரீட்சையின் பிரமாணக் குறிப்புக்கு இணங்க நான் தகுதியற்ற ஒருவர் எனத் தெரியவந்தால் பரீட்சைக்கு முன்னராயினும் பரீட்சையின்போதும் அல்லது பரீட்சைக்குப் பின்னராயினும் எனது பரீட்சார்த்தி உரிமையை இரத்துச் செய்வதற்காக எடுக்கப்படும் எத்தகையதுமான தீர்மானத்திற்கும் நான் உடன்படுகின்றேன். மேலும், இப்பரீட்சையினை நடாத்துதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கும் நான் கட்டுப்படுவேன் என்றும் இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

----,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :----.

7. திணைக்களத் தலைவரின் சான்றுரை (தனிப்பட்ட கோவை யினைச் சரிபார்த்து) :

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ......................................... எனும் விண்ணப்பதாரர் மத்திய அரசாங்கம்/ ..................................... மாகாண அரசாங்கத்தின்கீழ் ................................................ அமைச்சு/ திணைக்களத்தில் ........................................ என்னும் பதவியொன்றில் சேவையாற்றுகிறார் என்றும், 2013.12.31 ஆந் திகதிக்கு முன்னரான 5 வருட காலப்பகுதியில் (சேவை அல்லது திணைக்களப் பரீட்சையில் சித்தியடைதல் நிபந்தனையாக அமைகின்ற சம்பள ஏற்றம் தவிர்ந்த) சகல சம்பள ஏற்றங்களையும் உழைத்துள்ளார் என்றும் கூறப்பட்ட காலப்பகுதியில் எந்தவித ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் (எச்சரிக்கைகள் தவிர்ந்த) உட்படுத்தப்படவில்லை என்றும் வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 6(ஆ) இற்கமைய ............................ (ஐந்து/பத்து) வருட முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக்காலத்தைக் கொண்டுள்ளார் என்றும் உரிய வர்த்தமானி அறிவித்தலில் விதித்துரைக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கமைய இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவர் தகுதியினைக் கொண்டுள்ளார் என்றும் குறித்துரைக்கப்பட்ட பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி பற்றுச்சீட்டினை இதில் ஒட்டியுள்ளார் என்றும் என் முன்னிலையில் இவ்விண்ணப்பப்படிவத்தில் கையொப்பமிட்டார் எனவும் நான் இத்தால் சான்றுப்படுத்துகின்றேன்.

-----,
திணைக்களத் தலைவரின்/அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரின் கையொப்பம்.

பெயர் :-----.
பதவி :-----.
திகதி :-----.
(உத்தியோகபூர்வ முத்திரையை இடவும்)

6-175

---

## இலங்கை நிர்வாக சேவையில் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2013 (2014)

இலங்கை நிர்வாக சேவையின் தரம் III இல் உள்ள பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்காகத் தகுதிபெற்ற இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

1. இவ்வறிவித்தலில் 'செயலாளர்' என்ற பதம் "பொது நிர்வாக அமைச்சின் விடயப் பொறுப்பு செயலாளர்" எனப் பொருள்படும். "சேவை" என்ற பதம் வேறு எந்தவிதத்திலும் விசேடமாக குறிப்பிடப் படாத சந்தர்ப்பத்தில் "இலங்கை நிர்வாக சேவை" எனப் பொருள்படும்.

2. இப்பரீட்சை மூலம் இலங்கை நிர்வாக சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

*எழுத்துப் பரீட்சை.*- இப்பரீட்சை பின்வரும் ஐந்து (5) வினாப் பத்திரங்களைக் கொண்டமைந்திருக்கும் :

(i) பொது விவேகம் ;
(ii) இலங்கையின் சமூக, பொருளாதார அரசியல் பின்னணி மற்றும் அதன் போக்குகள் ;
(iii) சர்வதேச போக்குகள் ;
(iv) முகாமைத்துவ விவேகம் ;
(v) ஆக்கபூர்வ, பகுப்பாய்வு மற்றும் தொடர்பாடல் திறன்கள்

*பரீட்சைத் திகதி.*- இப்பரீட்சை 2014 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் கொழும்பு நகரில் நடாத்தப்படும். இப்பரீட்சையை ஒத்திவைக்கவோ அல்லது இரத்துச் செய்வதற்கோ அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஆலோசனைகளுக்கமைய செயலாளருக்கு அதிகாரம் உண்டு.

நேர்முகப் பரீட்சை.- எழுத்துப் பரீட்சையில் எல்லா வினாத்தாள்களுக்கும் தோற்றிய பரீட்சார்த்திகளுக்கிடையில் போதுமானதென அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் ஆகக்கூடிய மொத்தப் புள்ளிகளைப் பெறுகின்ற பரீட்சார்த்திகளுக்காக பொது மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும். நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும் திகதியை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஆலோசனைக்கமைய செயலாளர் தீர்மானிப்பார்.

3. நியமிக்கப்படவுள்ள ஆட்களின் எண்ணிக்கை 172 ஆகும். வெற்றிட எண்ணிக்கைக்கு மேல், இறுதி வெற்றிடம் அல்லது இறுதியான சில வெற்றிடங்களுக்காக சமமான புள்ளிகளைப் பெற்றுள்ள பரீட்சார்த்திகள் காணப்படும் நிலைமைகளில் அத்தகைய வெற்றிடங்களை நிரப்புவதற்கான தீர்மானமானது நடைமுறை விதிகளின் பிரிவு 80 இற்கமைய அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் மூலம் எடுக்கப்படல் வேண்டும். நியமனம் நடைமுறைக்கு வரும் திகதியானது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் பணிப்பின் பேரில் நிர்ணயிக்கப்படல் வேண்டும்.

**4. சேவை நிபந்தனைகள் :**

4.1 அரசாங்க சேவை நியமனங்களை நிர்வகிக்கும் பொது நிபந்தனைகளுக்கும், இலங்கை நிர்வாக சேவைப் பிரமாணக் குறிப்பில் (இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2013.12.23 ஆந் திகதிய 1842/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட) விதிக்கப்பட்டுள்ள விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும், அப்பிரமாணக் குறிப்புக்கு மேற்கொள்ளப்பட்டுள்ளதும், வருங்காலங்களில் மேற்கொள்ளப்படவுள்ளதுமான திருத்தங்களுக்கும், தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகள் மற்றும் நிதிப் பிரமாணங்கள் மற்றும் 2009.02.20 ஆந் திகதிய 1589/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் என்பவற்றுக்கமைய தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்தி ஒருவர் சேவையின் தரம் III இற்கு நியமனம் செய்யப்படுவர்.

4.2 இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம்/தபுதாரர், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

4.3 நியமனமானது ஒரு வருட பதிற்கடமை காலப்பகுதி ஒன்றிற்கு உட்பட்டதாகும். சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டவாறு இலங்கை நிர்வாக சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்த திகதியிலிருந்து 3 வருடத்திற்குள் முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையானது சித்தியெய்தப்படல் வேண்டும்.

4.4 பொது நிர்வாகச் சுற்றறிக்கை 01/2014 மற்றும் தொடர்ந்து வரும் சுற்றறிக்கைகள் ஆகியவற்றுக்கிணங்க சேவையில் இணைந்து 5 வருடத்திற்குள் குறித்துரைக்கப்பட்ட அரச கரும மொழித் தேர்ச்சியானது பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

4.5 தனக்கு வழங்கப்பட்ட பதவியின் கடமையை உரிய திகதியில் பொறுப்பேற்கத் தவறுகின்ற மற்றும்/அல்லது நியமனம் செய்யப்பட்ட ஒரு பதவியில் அல்லது நியமனம் செய்யப்பட்ட ஒரு பிரதேசத்தில் கடமையைப் பொறுப்பேற்க மறுக்கின்ற அல்லது நழுவுகின்ற பரீட்சார்த்திகளின் நியமனங்களை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி இரத்துச்செய்ய இடமுண்டு.

5. **மாதாந்த வேதன அளவுத்திட்டம்**.- 06/2006 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் எஸ்.எல். 1-2006 சம்பளத் தொகுதியானது இச்சேவைக்கு பிரயோகிக்கப்படுவதுடன் கூறப்பட்ட சம்பளத் தொகுதிக்கு உரித்துடைய சம்பள அளவுத்திட்டமானது பின்வருமாறு.- ரூபா 22,935 - 10 × 645 - 8 × 790 - 17 × 1,050 - ரூபா 53,555 (மாதாந்தம்)

6. **ஆட்சேர்ப்புச் செய்வதற்கான தகைமைகள்**.- (அ) (i) இலங்கைப் பிரசையொருவராக இருத்தல் ;

(ii) சிறந்த நடத்தையுடையவராக இருத்தல் ;

(iii) நாட்டின் எந்தவொரு பகுதியிலும் பணிபுரிவதற்குப் போதிய உடல் மற்றும் உளத் தகைமைகளைக் கொண்டிருத்தல்.

(ஆ) கல்வித் தகைமைகள்.- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பட்டத்தினை வழங்கும் நிறுவனமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நிறுவனமொன்றினால் வழங்கப்படும் பட்டம் ஒன்றினைப் பெற்றிருத்தல்.

**குறிப்பு**.- பட்டம் நடைமுறைக்கு வரும் திகதியானது விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதி அல்லது அதற்கு முன்னராக இருத்தல் வேண்டும்.

(இ) வயது.- விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதியன்று இருபத்திரண்டு (22) வயதிற்கு குறையாதிருப்பதோடு இருபத்தெட்டு (28) வயதினை அடையாதவராக இருத்தல் வேண்டும்.

(ஈ) தகைமைகள் பற்றிய வரையறைகள்.- (i) திறந்த போட்டிப் பரீட்சையில் (2) இரு தடவைகளுக்கு மேல் தோற்றுவதற்கு எந்தவொரு விண்ணப்பதாரிக்கும் அனுமதியளிக்கப்பட மாட்டாது. (முன்னைய சேவைப் பிரமாணக் குறிப்பின்கீழ் இலங்கை நிர்வாக சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான பரீட்சைகளில் அமர்வுகளின் எண்ணிக்கையானது கருத்திற்கொள்ளப்படுவதில்லை.)

(ii) இப்பரீட்சைக்காக விண்ணப்பம் செய்வதற்குத் தேவைப்படும் தகைமைகள் விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதியில் எல்லா வகையிலும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

(iii) யாதேனுமோர் மதப் போதகராக பதவி வகிக்கும் எந்தவொரு நபருக்கும் இப்போட்டிப் பரீட்சைக்காக விண்ணப்பிப்பதற்கு அல்லது தோற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

7. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக் கட்டணம் 1,000 ரூபாவாகும். அதனை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் எந்தவொரு மாவட்ட செயலகத்திற்கோ அல்லது பிரதேச செயலகத்திற்கோ பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு வரவு வைப்பதற்காக செலுத்த வேண்டும். மாவட்டச் செயலகத்திலிருந்து/ பிரதேச செயலகத்திலிருந்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பத்தில் உரிய கூட்டில் ஒட்டுதல் வெண்டும். இக்கட்டணம் மீளச் செலுத்தப்பட மாட்டாது. பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்.

8. **விண்ணப்பிக்கும் முறை**.- (அ) விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவ உருவில் அமைய வேண்டுமென்பதுடன் அது 8 1/2" x 12" (A4) அளவுடைய ஒரு தாளின் இரண்டு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்கப்பட வேண்டும். அவ்வாறு தயாரித்த விண்ணப்பம், பரீட்சார்த்தியின் கையெழுத்திலேயே பூர்த்திசெய்யப்படுதல் வேண்டும். 1 தொடக்கம் 2.12 வரையிலான விபரங்கள் விண்ணப்பத்தில் முதலாம் பக்கத்திலும் 3 தொடக்கம் 6 வரையிலான விபரங்கள் அதன் மறுபக்கத்திலும் உள்ளடங்கும் வண்ணம் விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்படுதல் வேண்டும் என்பதை விசேடமாகக் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவ உருவில் அமையாத விண்ணப்பங்களும் முழுமை பெறாதவாறு தகவல்களைக் குறிப்பிட்டுள்ள விண்ணப் பங்களும் அறிவிப்புகள் ஏதுமின்றி நிராகரிக்கப்படும். (விண்ணப்பப் படிவத்தின் நிழற்படப் பிரதி ஒன்றை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்.) பூர்த்தி செய்யப்படுகின்ற விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக உள்ளதென்பதற்கு விண்ணப்பதாரியே பொறுப்பாக இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்து விண்ணப்பம் நிராகரிக்கப்படலாம்.

(ஆ) பரீட்சார்த்தி எம்மொழியில் பரீட்சைக்குத் தோற்ற விரும்பு கிறாரோ அம்மொழி மூலத்தில் விண்ணப்பத்தைப் பூர்த்திசெய்தல் வேண்டும்.

(இ) பரீட்சைக்காக பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், த. பெ. இல. 1503, கொழும்பு" என்று முகவரியிடப்பட்டு 2014.07.07 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னராக பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பம் வைத்து அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை நிர்வாக சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2013 (2014)" என்று தெளிவாக எழுதப்படல் வேண்டும். அத்திகதிக்குப் பின் கிடைக்கும் விண்ணப்பம் எதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பப்படிவத்தை தயாரிக்கும் போது பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும், தமிழ் மொழி விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் எழுதப்படல் அத்தியாவசியமாகும்.

(ஈ)விண்ணப்பப்பத்திரத்தில் உள்ள பரீட்சார்த்தியின் கையொப்பம் அரசாங்கப் பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, படைதாங்கு சேவையின் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவி வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது ரூபா 2,40,360 இற்கு மேற்பட்ட ஆண்டுச் சம்பளத்தையுடைய அரச சேவையில் நிரந்தரப் பதவி வகிக்கும் உத்தியோகத்தர் ஆகிய ஒருவரால் சான்றுப்படுத்தப்படல் வேண்டும்.

(உ) எல்லா வகையிலும் நிறைவுபெற்றிராத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படலாம். விண்ணப்பம் அஞ்சலில் தொலைந்துவிட்டமை அல்லது தாமதித்தமை பற்றிய முறைப்பாடுகள் எதுவும் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

(ஊ) விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை தொடர்பாக அறிவிக்கப்பட மாட்டாது. இலங்கை பரீட்சைகள் திணைக்களம் விண்ணப்பதாரர்களுக்கு அனுமதி அட்டைகளை அனுப்பியதும், அது தொடர்பாக பத்திரிகைகளில் அறிவிப்பொன்றை வெளியிடும். அறிவிப்பு வெளியாகி 2 நாட்கள் அல்லது 3 நாட்கள் முடிவடைந்த பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காவிடின் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு அது தொடர்பாக பரீட்சைத் திணைக்களத்திடம் அறிவித்தல் வேண்டும். பரீட்சைகள் திணைக்களத்துக்கு அறிவிக்கும்போது பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், முகவரி மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம் என்பன குறிப்பிடப்படல் வேண்டும். கொழும்புக்கு வெளியேயுள்ள விண்ணப்பதாரிகளாயின் அனுமதி அட்டையின் பிரதி ஒன்றை அனுப்புவதற்காக ஒரு தொலைநகல் (பெக்ஸ்) இலக்கத்தைக் குறிப்பிட்டு கூறப்பட்ட அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தொலைநகல் இலக்கத்திற்கு கோரிக்கைக் கடிதம் ஒன்றை அனுப்புதல் கூடுதல் பயனுடையதாகும். மேலும், பரீட்சைத் திணைக்களத்தினால் கோரப்படும் ஏதேனும் தகவல்களினை மெய்ப்பிப்பதற்கு விண்ணப்பப்படிவம் மற்றும் பரீட்சைக் கட்டண பற்றுச்சீட்டு என்பவற்றின் பிரதி மற்றும் கடிதம் பதிவுசெய்த பற்றுச்சீட்டு ஆகியவற்றினை வைத்துக்கொள்ளுதல் பயனுடையதாகும்.

9. **பரீட்சைக்கு அனுமதியளித்தல்**.- (அ) சகல விதத்திலும் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பங்களை அனுப்பிய யாவருக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகம் அனுமதி அட்டைகளை அனுப்புவார். தனது அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்பட மாட்டார்.

(ஆ) பரீட்சார்த்தி தனக்குக் குறித்தொதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். ஒவ்வொரு பரீட்சார்த்தியும் முற்கூட்டியே தனது கையொப்பத்தினை அத்தாட்சிப் படுத்த வேண்டியதுடன் பரீட்சைக்காக அவர் சமுகமளிக்கும் முதல் நாளிலேயே அந்த அனுமதி அட்டையை மேற்பார்வையாளரிடம் கையளித்தல் வேண்டும். பரீட்சார்த்திகள் யாவரும் கடைப்பிடிக்க வேண்டிய விதிகளின் தொகுதியொன்று இவ்வர்த்தமானி அறிவித்தலின் ஆரம்பத்தில் தரப்பட்டுள்ளது. பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளரால் விதிக்கப்படும் விதி ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக வேண்டும். இந்த விதிகளை மீறும் பரீட்சார்த்திகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைக்கு உள்ளாவதற்கு நேரிடும்.

**குறிப்பு**.- பரீட்சார்த்தி ஒருவருக்கு அனுமதி அட்டை வழங்கப்பட்டமை அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எல்லாத் தகுதிகளையும் உடையவர் என்பதை ஏற்றுக்கொள்ளும் ஒரு சாதனமாக கொள்ளவியலாது.

10. **பரீட்சார்த்தியின் ஆளடையாளம்**.- பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்தில் தான் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வை யாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டும். இதற்காகப் பின்வரும் சாதனங்களில் யாதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;

(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

11. **பொய்யான தகவல்கள் வழங்குதலுக்கான தண்டனை**.- பரீட்சார்த்தி ஒருவர் தகுதியற்றவர் எனக் கண்டுபிடிக்கப்பட்டால் பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சையின் பொழுதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எக்கட்டத்திலும் அவரின் பரீட்சார்த்த உரிமை இரத்துச் செய்யப்படலாம். பரீட்சார்த்தி ஒருவர் அளித்த விபரங்களில்

எவையேனும் அவரின் அறிவுக்கு எட்டிய அளவில் பொய்யானவை யெனக் காணப்படின் அல்லது அவர் ஏதேனுமொரு முக்கியமான விடயத்தை வேண்டுமென்று மறைத்திருந்தால் அவர் அரச சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

12. இவ்வொழுங்கு விதிகளால் ஏற்பாடு செய்யப்படாத எவையேனும் விடயங்கள் தொடர்பில் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அறிவுறுத்துரைகளுக்கு அமைவாக செயலாளர் தீர்மானிக்கின்றபடி நடவடிக்கை எடுக்கப்படும்.

**13. பரீட்சைத் திட்டம் மற்றும் பரீட்சை மொழி மூலம் :-**

(அ) பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடத்தப்படும்.

(ஆ) பரீட்சார்த்தி தகைமைபெற்ற பல்கலைக்கழக பட்டத்தை எம்மொழி மூலம் எழுதி சித்தியடைந்தாரோ அம்மொழி மூலம் அல்லது அரச கரும மொழி மூலம் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.

(இ) பரீட்சார்த்தியொருவர் தகைமைபெற்ற பல்கலைக்கழக பட்டத்தில் பாடங்களை இரண்டு மொழிகளிலோ அல்லது அதற்கு மேற்பட்ட மொழிகளின் மூலமாகவோ சித்தியடைந் திருப்பின், அந்தப் பல்கலைக்கழக பட்டத்தில் அவர் சித்தியடைந்த பாடங்களில் கூடிய தொகைக்கு விடையெழுதிய மொழி மூலமாகவோ அல்லது அரச கரும மொழியொன்றின் மூலமாகவோ பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.

(ஈ) பிரதான பாடத்தை ஒரு மொழியிலும் துணைப் பாடத்தை இன்னுமொரு மொழியிலும் எழுதிச் சித்தியடைந்திருக்கும் சிறப்புப் பட்டம் பெற்ற பரீட்சார்த்தி ஒருவர், அவர் பிரதான பாடத்திற்குத் தோற்றிய மொழியில் அல்லது அரச கரும மொழியொன்றின் மூலம் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.

**குறிப்பு :**

(i) மேற்போந்த (ஆ), (இ) என்பவற்றில் பிரயோகிக்கப்பட்ட "தகைமைபெற்ற பல்கலைக்கழக பட்டம்" எனும் சொற்றொடர் 6 (ஆ) பந்தியில் குறிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்டங்களின் தகைமையைக் குறிக்கும்.

(ii) பரீட்சார்த்தி பரீட்சையில் எல்லா வினாப்பத்திரங் களுக்கும் ஒரே மொழியில் மட்டும் விடை எழுத வேண்டும்.

(iii) பரீட்சார்த்தியொருவர் தனது விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை மொழியை மாற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்.

**14. ஆட்சேர்ப்பு முறை :**

14.1 எழுத்துமூலப் பரீட்சை.- கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களை உள்ளடக்கிய ஐந்து (5) வினாப்பத்திரங்களைக் கொண்ட எழுத்துப் பரீட்சை ஒன்று நடாத்தப்படும். பாடங்கள் மற்றும் ஒவ்வொரு பாடத்திலும் சித்தியடைவதற்கு பெறவேண்டிய குறைந்தபட்ச புள்ளிகள் என்பன கீழே குறிப்பிடப்பட் டுள்ளன :

| பாடம் | புள்ளிகள் | சித்தியடைவதற்குப் பெறவேண்டிய குறைந்தபட்ச புள்ளிகள் |
|---|---|---|
| 1. பொது விவேகம் | 100 | 50 |
| 2. இலங்கையின் சமூக, பொருளாதார, அரசியல் பின்னணி மற்றும் அதன் போக்குகள் | 100 | 50 |
| 3. சர்வதேச போக்குகள் | 100 | 50 |
| 4. முகாமைத்துவ விவேகம் | 100 | 50 |
| 5. ஆக்கபூர்வ பகுப்பாய்வு மற்றும் தொடர்பாடல் திறன்கள் | 100 | 50 |

பரீட்சார்த்திகள் எல்லா வினாத்தாள்களுக்கும் தோற்றுதல் வேண்டும் :

14.2 பொது மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை.- நேர்முகப் பரீட்சையானது இரண்டு பகுதிகளைக் கொண் டுள்ளது. அதாவது பொது நேர்முகப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை-

(அ) பொது நேர்முகப் பரீட்சை :

(i) மேற்படி இலக்கம் 6 இல் குறிப்பிடப்பட்ட ஆட்சேர்ப்புக்கான தகைமைகளைப் பரீட் சார்த்தி பூர்த்திசெய்துள்ளாரா என்றும் அத்தகைய தகைமைகள் அதில் காட்டப்பட்ட குறிப்புரைகளுக்குள் அமைகின்றனவா என்றும் சரி பார்ப்பதற்கு பொது நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

(ii) பொது நேர்முகப் பரீட்சைச் சபையானது அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும்.

(ஆ) கட்டமைப்பு நேர்முகப் பரீட்சை :

(i) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சை சபை யொன்றின் மூலம் பரீட்சார்த்திகளின் முகாமைத்துவ ஆற்றல், தலைமைத்துவப் பண்புகள், தொடர்பாடல் திறன்கள் மற்றும் ஆளுமை என்பனவற்றை அளவிடுவதற்காக கட்டமைப்பு நேர்முகப் பரீட்சையொன்று

நடாத்தப்படும். இங்கு பெற்றுக்கொள்ள முடியுமான உச்சப் புள்ளிகள் இருபத்தைந்து (25) ஆகும்.

| | விடயத் தலைப்பு | உச்சப் புள்ளி |
|---|---|---|
| 1 | முகாமைத்துவப் பண்பு | 10 |
| 2 | தலைமைத்துவப் பண்பு | 05 |
| 3 | தொடர்பாடல் திறமை | 05 |
| 4 | ஆளுமை | 05 |
| | மொத்தம் | 25 |

(ii) ஒவ்வொரு பாடத்திலும் குறைந்தபட்சம் நூற்றுக்கு ஐம்பது (50%) புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரிகளிலிருந்து சகல பாடங்களிலும் பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் கூடிய புள்ளி களைப் பெற்றுக்கொண்ட விண்ணப்ப தாரிகள் பொது நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவ தற்குத் தகைமை பெறுவர். தகுதி பெற்ற பரீட் சார்த்திகளில் எதிர்பார்க்கப்படும் மொத்த ஆட்சேர்ப்பு வெற்றிட எண்ணிக்கையினர் மற்றும் எதிர்பார்க்கப்பட்ட மொத்த ஆட்சேர்ப்பு வெற்றிட எண்ணிக்கையின் 25% ஆனோர் ஆகிய இரண்டினதும் கூட்டுத்தொகையானோர் மட்டும் பொது நேர்முகப் பரீட்சைக்காக அழைக் கப்படுவார்கள். தகுதிபெற்ற விண்ணப்பதாரி களின் எண்ணிக்கையானது மேலே குறிப்பிடப் பட்ட எண்ணிக்கையினை தொகையிடவில்லை யாயின் அவ்வாறு தகுதிபெற்ற பரீட்சார்த்தி களின் அத்தகைய எண்ணிக்கையினர் மட்டும் பொது நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படு வார்கள். தகைமை பெற்ற பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை மேற்படி எண்ணிக்கைக்குச் சமனற்றதாகக் காணப்பட்டால் அவ்வாறான சந்தர்ப்பத்தில் மேற்படி தகைமை பெற்ற பரீட்சார்த்திகள் மாத்திரமே பொது நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவர்.

(iii) கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு முன்னர் தகைமைகளைப் பரீட்சிப்பதற்காக பொது நேர்முகப் பரீட்சை நடாத்தப்படுவதோடு இங்கு புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது. பொது நேர்முகப் பரீட்சையில் ஆட்சேர்ப்புச் செய்வ தற்கான சகல தகைமைகளையும் பூர்த்திசெய் துள்ளதாக உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்ப தாரிகள் கட்டமைப்பு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதற்காக தகைமை பெறுவர். மேற்குறிப்பிடப்பட்ட வகையில் பொது நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட விண்ணப்பதாரிகளிலிருந்து குறிப்பிட்டதொரு தொகை கட்டமைப்பு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதற்காக தகைமை பெறா விடினும் அவ்வாறு தகைமை பெறாதவர் களுக்குப் பதிலாக வேறு விண்ணப்பதாரிகள் மீண்டும் பொது நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்பட மாட்டார்கள்.

(iv) நிலவும் வெற்றிடங்களுக்கிணங்க நியமிக்கப்பட எதிர்பார்க்கப்படும் பரீட்சார்த்திகளின் எண்ணிகையினரால் எழுத்துப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை என்ப வற்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட மொத்தப் புள்ளிகளுக்கமைய உச்ச புள்ளிகளைப் பெற்றுள்ள பரீட்சார்த்திகளிலிருந்து ஆரம் பித்து திறமை அடிப்படையில் தரம் மூன்றிற்கு (III) நியமனங்கள் மேற்கொள்ளப்படும்.

**கவனிக்க வேண்டியது**.- நேர்முகப் பரீட்சை யில் கலந்து கொள்வதனால் நியமனம் வழங்கப் படுவதற்காக தகைமைகளைப் பூர்த்திசெய் துள்ளதாக கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.

15. **எழுத்துப் பரீட்சைப் பாடத்திட்டம்**.- (1) பொது விவேகம்.- எண் ரீதியான, மொழி ரீதியான மற்றும் உருவ ரீதியான கட்டமைப்புக்கள் மற்றும் இடைத்தொடர்புகள் என்பவற்றுடன் தொடர்புபட்டதாக முன்வைக்கப்படும் சிக்கல்கள் தொடர்பில் பகுப்பாய்வுத் திறன், தர்க்க விவேகம், பொருள்கோடல் திறன் என்பவற்றை ஏனையவற்றுடன் தொடர்புபடுத்தும் ஆற்றல் மற்றும் தீர்மானங்களை மேற்கொள்வது தொடர்பாக பரீட்சார்த்தியிடம் காணப்படும் உளச்சார்பு மட்டத்தினை அளவிடுதல் இங்கு எதிர்பார்க்கப்படுகின்றது. (நேரம் : 1 1/2 மணித்தியாலங்கள் - 100 புள்ளிகள்.) இவ்வினாத்தாள் பல்தேர்வு வினாக்கள் மற்றும் சுருக்க விடைகளுக்கான வினாக்கள் என்பவற்றைக் கொண்டிருக்கும். சகல வினாக்களுக்கும் விடையளிக்குமாறு பரீட்சார்த்திகள் கேட்கப்படுகின்றார்கள்.

(2) இலங்கையின் சமூக, பொருளாதார, அரசியல் பின்னணி மற்றும் அதன் போக்குகள்.- இலங்கையின் சமூக, பொருளாதார, அரசியல், கலாசாரம், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப நிலைமைகள் தொடர்பான விடய அறிவு அல்லது பரீட்சார்த்திக்கு முன்வைக்கப்படும் நிலைமைகளுடன் ஆக்கபூர்வமாகவும் பகுப்பாய்வுடனும் விமர்சன ரீதியாகவும் சிந்தனை செய்யும் ஆற்றல் முன்னுரிமையினைத் தீர்மானிக்கும் ஆற்றல் மற்றும் உபாயமார்க்க ரீதியாக எதிர்வுகூறும் ஆற்றல் தொடர்பாக பரீட்சார்த்தியின் ஆற்றல்களை அளவிடுதல் இங்கு எதிர்பார்க்கப்படுகிறது. (நேரம் : 3 மணித்தியாலங்கள் - 100 புள்ளிகள்.) இவ்வினாப்பத்திரம் அமைப்புக் கட்டுரை மற்றும் கட்டுரை வினாக்கள் மற்றும் பல்தேர்வு வினாக்கள், சுருக்க வினாக்கள் என்பவற்றைக் கொண்டது. சகல வினாக்களுக்கும் விடையளிக்குமாறு பரீட்சார்த்திகள் கேட்கப்படுகின்றார்கள்.

(3) சர்வதேச போக்குகள்.- சர்வதேச சமூக, பொருளாதார, அரசியல், கலாசார, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிலைமைகள் தொடர்பான விடய ஆய்வு அல்லது பரீட்சார்த்திக்கு முன்வைக்கப்படும் நிலைமைகளுடன் ஆக்கபூர்வமாகவும், பகுப்பாய்வுடனும் விமர்சன ரீதியாகவும் சிந்தனை செய்யும் ஆற்றல் முன்னுரிமையினைத் தீர்மானிக்கும் ஆற்றல் மற்றும் உபாயமார்க்க ரீதியாக எதிர்வுகூறும் ஆற்றல் தொடர்பாக அல்லது பரீட்சார்த்தியின் ஆற்றல்களை அளவிடுதல் இங்கு எதிர்பார்க்கப்படுகின்றது. (நேரம் : 3 மணித்தியாலங்கள் - 100 புள்ளிகள்). இவ்வினாப்பத்திரம் அமைப்புக் கட்டுரை மற்றும் கட்டுரை வினாக்கள் மற்றும் பல்தேர்வு வினாக்கள், சுருக்க வினாக்கள் என்பவற்றைக் கொண்டது. சகல வினாக்களுக்கும் விடையளிக்குமாறு பரீட்சார்த்திகள் கேட்கப்படுகின்றார்கள்.

(4) *முகாமைத்துவ விவேகம்.*- சிக்கல்களையும் அவற்றிற்கான காரணங்களையும் கண்டறிதல், தீர்மானங்களை மேற்கொள்ளல், ஆளிடைத் தொடர்புகளைப் பேணுதல், தொடர்பாடல் திறன், சுய ஒழுக்கநெறிக் கொள்கைகள், உபாய மார்க்கங்களை வகுத்தல் என்பவற்றில் பரீட்சார்த்தியின் ஆற்றலையும் மற்றும் கருத்துரு மற்றும் புலமை அம்சத்திலுள்ள பிரச்சினைகள் மற்றும் சூழ்நிலைகளின் சூழமைவில் முன்வைக்கப்படும் பிரச்சினைகள் தொடர்பில் பரீட்சார்த்தியின் ஆற்றலையும் அளவிடுவதற்காக இவ்வினாப்பத்திரம் வடிவமைக்கப்படுகின்றது. (நேரம் : 3 மணித்தியாலங்கள் - 100 புள்ளிகள். இவ்வினாப்பத்திரம் அமைப்புக் கட்டுரை மற்றும் கட்டுரை வினாக்கள் மற்றும் பல்தேர்வு வினாக்கள், சுருக்க வினாக்கள் என்பவற்றைக் கொண்டது. சகல வினாக்களுக்கும் விடையளிக்குமாறு பரீட்சார்த்திகள் கேட்கப்படுகின்றார்கள்.)

(5) *ஆக்கபூர்வமான பகுப்பாய்வு ரீதியான மற்றும் தொடர்பாடல் திறன்கள்.*- தரப்பட்ட தலைப்புக்கள்/மையக் கருத்துக்களிலிருந்து பரீட்சார்த்தியினால் தெரிவுசெய்யப்படும் தலைப்பு/மையக்கருத்து என்பவற்றினூடாக கருத்துக்கள் மற்றும் தகவல்களைப் பகுப்பாய்வு செய்தல், கோப்புப்படுத்தல் மற்றும் சமர்ப்பித்தல் தொடர்பாக பரீட்சார்த்தியின் தர்க்கிக்கும் ஆற்றல் மற்றும் கற்பனை சக்தி என்பவற்றை அளவிடுவதோடு சிக்கலான பந்தியொன்று, ஆவணமொன்று அல்லது விஞ்ஞாபனமொன்றினை விளங்கிக்கொள்ளல் மற்றும் அதன் கருப்பொருளினை சொந்த வசன நடையில் சுருக்கமாகவும் தெளிவாகவும் மற்றும் சரியான முறையிலும் தெரிவிப்பதற்கான பரீட்சார்த்தியின் ஆற்றலை அளவிடுதல் இங்கு எதிர்பார்க்கப்படுகின்றது. (நேரம் : 3 மணித்தியாலங்கள் - 100 புள்ளிகள். சகல வினாக்களுக்கும் விடையளிக்குமாறு பரீட்சார்த்திகள் கேட்கப்படுகின்றார்கள்.)

16. சிங்களம், தமிழ், ஆங்கில மொழி உரைகளுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில் சிங்கள மொழி உரையே மேலோங்குதல் வேண்டும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

பி. பீ. அபேகோன்,
செயலாளர்,
பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2014, மே 22.

மாதிரி விண்ணப்பப்படிவம்

[ ]
(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

**இலங்கை நிர்வாக சேவை தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2013 (2014)**

OPEN COMPETITIVE EXAMINATION FOR RECRUITMENT TO GRADE III OF SRI LANKA ADMINISTRATIVE SERVICE - 2013 (2014)

1. மொழி மூலம் :
பரீட்சைக்கு தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4 [ ]
(உரிய இலக்கத்தை கூட்டினுள் குறிப்பிடவும்)

2. தனிப்பட்ட தகவல்கள் :

2.1 முதலெழுத்துக்களை இறுதியாக இட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :-----.
உதாரணம் : GUNAWARDHANA, M. G. B. S. K.

2.2 முழுப்பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :-----.

2.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :-----.

2.4 நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) : (அனுமதி அட்டை இந்த முகவரிக்கு அஞ்சலிடப்படும்) :-----.

2.5 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :-----.

2.6 பால் (ஆண் - 0, பெண் - 1) :- [ ]
(உரிய இலக்கத்தை கூட்டினுள் குறிப்பிடவும்)

2.7 திருமணமானவரா? திருமணமாகாதவரா?
(திருமணமாகாதவர் -1, திருமணமானவர் - 2) [ ]
(உரிய இலக்கத்தை கூட்டினுள் குறிப்பிடவும்)

2.8 இனத்தொகுதி (சிங்களவர் -1, தமிழர் - 2,
இந்தியத் தமிழர் - 3, முஸ்லிம் - 4, வேறு - 5) :- [ ]
(உரிய இலக்கத்தை கூட்டினுள் குறிப்பிடவும்)

2.9 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

2.10 பிறந்த திகதி :

ஆண்டு : [ | | | ] மாதம் : [ | ] திகதி : [ | ]

2.11 தகைமைகள் பூர்த்திசெய்யப்பட வேண்டிய 2014.07.07 ஆந் திகதியில் வயது :

வருடங்கள் : [ | ] மாதங்கள் : [ | ] நாட்கள் : [ | ]

2.12 தொலைபேசி இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

3. (i) பட்டம் பெற்ற திகதி :----.
(ii) பல்கலைக்கழகம்/நிறுவகம் :----.
(iii) பதிவிலக்கம் :----.
(iv) உள்வாரி/வெளிவாரி :----.
(v) பட்டம் :----.
(vi) பாடங்கள் :----.
(vii) வகுப்பு :----.
(viii) மேல்/கீழ் :----.
(ix) சுட்டிலக்கம் :----.
(x) பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றிய மொழி மூலம் :----.

4. பணம் செலுத்திய பற்றுச்சீட்டை இதில் நன்கு ஒட்டிவிடவும் :

(பற்றுச்சீட்டைக் கழறாதவாறு ஒட்டிவிடவும்.)
(பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்.)

5. ***பரீட்சார்த்தியின் சான்றுரை :***

இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் உண்மையானவை என்றும், பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட ............................................ ஆந் திகதிய ....................................... ஆம் இலக்க பற்றுச்சீட்டு இதில் ஒட்டப்பட்டுள்ளதென்றும் உறுதியுரைக்கின்றேன். மேலும் பரீட்சை விதிகளுக்கு அமைந்தொழுகி நடப்பேன் எனவும், இப்பரீட்சை ஒழுங்குவிதிகளின்படி நான் தகுதியற்றவனெனக் கண்டுபிடிக்கப்பட்டால் பரீட்சையின் முன்னரோ, பரீட்சையின்போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எனது பரீட்சார்த்தி தன்மையை இரத்துச்செய்வதற்கு எடுக்கும் முடிவுகளை ஏற்றுக்கொள்வேன் எனவும் பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் விதி, ஒழுங்குகளுக்கு நான் கீழ்ப்படிவேன் எனவும் உறுதியுரைக்கின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

6. ***விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல் :***
(வர்த்தமானி அறிவித்தலின் 8(ஈ) இன் பிரகாரம் இருத்தல் வேண்டும்.)

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்ற ............................... (முழுப்பெயர்) என்பவரை தனிப்பட்ட முறையில் நான் நன்கு அறிவேன் எனவும், குறித்த பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளார் என்றும் அப்பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதென்றும் ................................. ஆந் திகதி அவர் என் முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

-----,
(கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தும்
உத்தியோகத்தரின் கையொப்பம்.)

கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்துகின்ற உத்தியோகத்தரின் முழுப்பெயர் :-----.
பதவி :-----.
முகவரி :-----.
திகதி :-----.
(அலுவலக முத்திரை மூலம் அத்தாட்சிப்படுத்தவும்.)

6-176

---

## கட்டடத் திணைக்களம்

(i) இலங்கை தொழில்நுட்பச் சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (குடிசார்), தரம் III/(பயிற்றுவித்தல் தரம்)
(ii) இலங்கை தொழில்நுட்பச் சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (மின்), தரம் III
(iii) இலங்கை தொழில்நுட்பச் சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (பொறிமுறை), தரம் III
(iv) இலங்கை தொழில்நுட்பச் சேவையின் வரைஞர் (பயிற்றுவித்தல் தரம்)

கட்டடத் திணைக்களத்தின் மேற்படி பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஆகக் குறைந்த தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து கட்டடப் பணிப்பாளர் நாயகத்தினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கட்டடத் திணைக்களத்தினால் உத்தியோகபூர்வ கடமைகள் மேற்கொள்ளப்படுகின்ற வேலைத்தலங்கள் நாடு முழுவதும் பரந்துள்ளதுடன், மேற்படி வேலைத்தலங்களின் நிர்மாணிப்புகளை கண்காணிப்புச் செய்வதற்காக தொழில்நுட்ப அலுவலர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்றார்கள். கூடுதலான நிர்மாணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் புதிய தொழில்நுட்ப அலுவலர்களை (குடிசார்/மின்) ஈடுபடுத்த எதிர்பார்த்துள்ளதுடன், மற்றும் இலங்கை தொழில்நட்பச் சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (குடிசார்) - பயிற்றுவித்தல் தரம், தொழில்நுட்ப அலுவலர்கள் (பொறிமுறை) தலைமை அலுவலகத்திற்கு இணைப்புச் செய்யப்படுவார்கள்.

2. இந்த அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைய ஏ4 அளவான தாளின் இருபக்கங்களையும் பயன்படுத்தி தயார் செய்து கொண்ட விண்ணப்பப்படிவத்தை 2014.06.30 ஆம் திகதிக்கு அல்லது அத்திகதிக்கு முன்னர் "பணிப்பாளர் நாயகம், இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம், மலலசேகர மாவத்தை, கொழும்பு 07" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பப்படிவங்களை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "கட்டடத் திணைக்களத்தின், இலங்கை தொழில்நுட்பச் சேவையின் (குடிசார்/மின்/பொறிமுறை) அல்லது இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் வரைஞர் (பயிற்றுவித்தல் தரம்) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை" என தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். தாமதித்துக் கிடைக்கின்ற, தெளிவற்ற மற்றும் முறையாக பூர்த்தி செய்யப்படாதுள்ள விண்ணப்பப் படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

3. ***சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள்:***

3.1 இந்தப் பதவி நிரந்தரமானது. ஓய்வூதிய உரித்துடையது. விதவை, அநாதை/ தபுதாரர், அநாதை ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்புத் தொகைகளைச் செலுத்த வேண்டும்.

3.2 அரசாங்க சேவையின் நியமனங்கள் தொடர்பான தாபன விதிக் கோவையின் 11 ஆம் அத்தியாயத்தின் 10 – 12 வரையான பிரிவுகளின் நடைமுறை விதிகளும் இதற்கு ஏற்புடையனவாகும்.

3.3 தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரர்கள் தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கும், நிதிப் பிரமாணங்களுக்கும், திணைக்களக் கட்டளைகளுக்கும், காலத்திற்குக் காலம் அரசாங்கத்தினால் வெளியிடப்படுகின்ற வேறு ஒழுங்கு விதிகள் மற்றும் கட்டளைகளுக்கும் இணங்கியொழுக வேண்டும்.

4. ***பொதுவான தகைமைகள் :***

4.1 இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

4.2 சிறந்த நன்னடத்தையுடையவராகவும், நல்ல தேகாரோக்கியத்துடனும் இருத்தல் வேண்டும்.

4.3 ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்ற அலுவலர்கள் நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்ற வேண்டும்.

4.4 விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற இறுதித் திகதிக்கு 18 வயதிற்குக் குறையாதவராகவும், 45 வயதுக்கு

மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (தற்போது அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.)

**5. சகல பதவிகளுக்கும் தேவையான கல்வித் தகைமைகள் :**

5.1 கல்விப் பொதுத் தராதர பத்திர (சா. த.) பரீட்சையில் சிங்களம்/ தமிழ்/ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் மற்றும் இன்னுமொரு பாடத்திற்கு திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு பாடங்களில் (06) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மற்றும்

5.2 உரிய துறைக்குரித்தான பாடங்கள் இரண்டுடன் விஞ்ஞானப் பாடப் பிரிவில் மூன்று பாடங்களில் கல்விப் பொதுத் தராதர பத்திர (உ/த) பரீட்சையில் (பொதுவான பரீட்சை தவிர) ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (பழைய பாடவிதானத்தின் கீழ் 03 பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருப்பது போதுமானதாகும்.)

**6. தொழில்சார் தகைமைகள் :**

6.1 இலங்கை தொழில்நுட்பச் சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (குடிசார்/மின்/பொறிமுறை), தரம் III மேலே 5.0 இலுள்ள கல்வித் தகைமைகளுக்கு மேலதிகமாக உரிய துறைசார்ந்ததாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொழில்சார் தகைமைகளில் ஒன்றினைப் பூர்த்தி செய்து விண்ணப்பப்படிவம் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதியில் உரிய சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(i) மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத்தினால் வழங்கப்படுகின்ற தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா,

அல்லது

(ii) தேசிய பயிலுனர் மற்றும் தொழில்நுட்பப் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படுகின்ற தேசிய பொறியியல் டிப்ளோமா,

அல்லது

(iii) கல்வி, உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படுகின்ற தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா,

அல்லது

(iv) இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தினால் வழங்கப்படுகின்ற தொழில்நுட்ப டிப்ளோமா,

அல்லது

(v) இலங்கை பொறியியல் நிறுவகத்தினால் நடாத்தப்படுகின்ற பொறியியல் பரீட்சையின் 1 ஆம் பகுதியை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல்,

அல்லது

(vi) தொழில் துறைக்கு ஏற்புடையதாக தேசிய தொழில்சார் தேர்ச்சி (NVQ) 6 மட்டத்தின் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்,

அல்லது

(vii) உயர் கல்வி அமைச்சு மற்றும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்பச் சான்றிதழ்களை வழங்கியுள்ள நிறுவனங்களிடம் வினவி கருத்துக்கள் பெற்றுக் கொள்ளப்பட்ட பின்னர் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்பத் தகைமைகளுக்கு சகல வகையிலும் சமமானவையென மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற வேறு தொழில்நுட்பத் தகைமைகளைப் பெற்றிருத்தல்.

6.2 இலங்கை தொழில்நுட்பச் சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (குடிசார்) - பயிற்றுவித்தல் தரம்.- மேலே 5.0 இலுள்ள கல்வித் தகைமைகளுக்கு மேலதிகமாக உரிய துறை சார்ந்ததாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொழில்சார் தகைமைகளில் ஒன்றினைப் பூர்த்தி செய்து விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியில் உரிய சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும் :

(i) மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியொன்றிலிருந்து இப்பதவிக்கு ஏற்புடைய துறைசார் பாடநெறியொன்றை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்து தேசிய தொழில்நுட்பச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

அல்லது

(ii) மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியொன்றிலிருந்து இப்பதவிக்கு ஏற்புடைய துறைசார் கைத்தொழில் தொழில்நுட்பவியலாளர்களுக்கான தேசிய சான்றிதழை பாடநெறியொன்றை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்து தேசிய தொழில்நுட்பச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

அல்லது

(iii) உயர் கல்வி அமைச்சு மற்றும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்பச் சான்றிதழ்களை வழங்கியுள்ள நிறுவனங்களிடம் வினவி கருத்துக்கள் பெற்றுக்கொள்ளப்பட்ட பின்னர் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்பத் தகைமைகளுக்கு சகல வகையிலும் சமமானவையென மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற வேறு தொழில்நுட்பத் தகைமைகளைப் பெற்றிருத்தல்.

**குறிப்பு**.- மேலே 5.0 இல் குறிப்பிடப்பட்டுள்ள கல்வித் தகைமைகள் மற்றும் 6.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்ப அலுவலர் (குடிசார்) - பயிற்றுவித்தல் தரத்திற்கு (ஒரு வருட பயிற்சி) ஏற்புடைய குறித்த தொழில்சார் தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரர்கள், சேவைக்குரிய பாடவிதானங்களுக்கு அமைய பெற்றுக்கொள்ளும் ஒருவருட கோட்பாட்டு ரீதியான மற்றும் செயல் ரீதியான பயிற்சியை வெற்றிகரமாக நிறைவு செய்து, குறித்த பரீட்சையில் சித்தியடைந்த பின்னர் இலங்கை தொழில்நுட்பச் சேவையின் தரம் III ஐச் சேர்ந்த சம்பள அளவுத்திட்டத்தின் ஆரம்ப நிலையில் வைக்கப்படுவார்கள்.

6.3 இலங்கை தொழில்நுட்பச் சேவையைச் சேர்ந்த வரைஞர் (பயிற்றுவித்தல் தரம்).- மேலே 5.0 இன் கல்வித் தகைமைகளுக்கு மேலதிகமாக குறித்த துறை தொடர்பான பின்வரும் தொழில்சார் தகைமைகளில் ஒன்றைப் பூர்த்தி செய்துள்ளதுடன், விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதியில் உரிய சான்றிதழைப் பெற்றிருத்தல் :

(i) அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியொன்றில் மேற்படி பதவிக்கு ஏற்புடைய

துறையில் பாடநெறியொன்றை வெற்றிகரமாக கற்று தேசிய தொழில்நுட்பச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

அல்லது

(ii) அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியொன்றில் வரைஞர் கலை பற்றிய ஒரு வருட முழு நேரப் பயிற்சிப் பாடநெறியை வெற்றிகரமாக நிறைவு செய்து உரிய சான்றிதழைப் பெற்றிருத்தல்.

அல்லது

(iii) அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியொன்றில் மேற்படி பதவிக்கு ஏற்புடைய துறையில் கைத்தொழில் தொழில்நுட்பவியலாளர்களுக்கான தேசிய சான்றிதழ் பாடநெறியை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளதுடன், குறித்த சான்றிதழைப் பெற்றிருத்தல்.

அல்லது

(iv) உயர் கல்வி அமைச்சு மற்றும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்பச் சான்றிதழ்களை வழங்கியுள்ள நிறுவனங்களிடம் வினவி கருத்துக்கள் பெற்றுக் கொள்ளப்பட்ட பின்னர் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்பத் தகைமைகளுக்கு சகல வகையிலும் சமமானவையென மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற வேறு தொழில்நுட்பத் தகைமைகளைப் பெற்றிருத்தல்.

**குறிப்பு**.- மேலே 5.0 இல் குறிப்பிடப்பட்டுள்ள கல்வித் தகைமைகள் மற்றும் 6.3 இல் குறிப்பிடப்பட்டுள்ள வரைஞருக்கு (பயிற்றுவித்தல் தரம்) ஏற்புடைய குறித்த தொழில்சார் தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரர்கள், சேவைக்குரிய பாடவிதானங்களுக்கு அமைய பெற்றுக் கொள்ளும் ஒருவருட கோட்பாட்டு ரீதியான மற்றும் செயல்ரீதியான பயிற்சியை வெற்றிகரமாக நிறைவு செய்து, குறித்த பரீட்சையில் சித்தியடைந்த பின்னர் இலங்கை தொழில்நுட்பச் சேவையின் தரம் III ஐச் சேர்ந்த சம்பள அளவுத்திட்டத்தின் ஆரம்ப நிலையில் வைக்கப்படுவார்கள்.

**7. தெரிவு செய்யும் அடிப்படை :**

7.1 எழுத்து மூலமான பரீட்சைக்குரிய நிபந்தனைகள்.- இதற்கான எழுத்து மூலப் பரீட்சை கட்டடத் திணைக்களம் சார்பாக இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் நடாத்தப்படுவதுடன், அவர் அறிவிக்கும் தினத்தில் பரீட்சை நடாத்தப்படும். அவர் விதிக்கின்ற சட்டங்கள், விதிகளுக்கு பரீட்சார்த்திகள் உட்படுதல் வேண்டும்.

7.2 தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரர்கள் எழுத்து மூலமான பரீட்சைக்கு தோற்ற வேண்டும் என்பதுடன், நேர்முகப் பரீட்சையில் தோற்றுவதற்காக ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும், ஆகக் குறைந்தது 40% ஆன புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

மேற்படி பரீட்சையில் புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட ஒழுங்குவரிசையின் அடிப்படையில் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு தகுதிவாய்ந்தவர்கள் குறித்த புள்ளிகளின் ஒழுங்குவரிசையின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். நேர்முகப் பரீட்சையின்போது புள்ளிகள் வழங்கப்படுவதில்லை என்பதுடன் தகைமைகள் மாத்திரம் பரிசீலனை செய்யப்படும்.

7.3 எழுத்து மூலமான பரீட்சைக்கு ஏற்புடைய விடயங்கள் பின்வருமாறாகும் :

| பாடங்கள் | நேரம் | உச்ச புள்ளிகளின் எண்ணிக்கை | சித்தியடைவதற்குப் பெற வேண்டிய புள்ளிகள் |
|---|---|---|---|
| 1. உளச் சார்புப் பரீட்சை | 1 மணித்தியாலம் | 100 | 40 |
| 2. விடய ரீதியான தொழில் நுட்பப் பரீட்சை | 3 மணித்தியாலம் | 100 | 40 |

| வினாத் தாளின் பெயர் | பாடவிதானம் |
|---|---|
| 1. உளச் சார்புப் பரீட்சை | புரிந்துகொள்ளும் சக்தி, தர்க்க ரீதியான அறிவு, சரியாக தீர்மானம் மேற்கொள்ளும் ஆற்றல், எண்கள் மற்றும் கணித சிக்கல்களைத் தீர்க்கும் ஆற்றல், மொழித் தொடர்கள், அட்டவணை, படம், குறிப்பு, வரைபடத்தைப் பயன்படுத்தல். |
| 2. விடய ரீதியான தொழில் நுட்பப் பரீட்சை | **தொழில்நுட்ப அலுவலர் (குடிசார்) பதவி**.- மானி, கட்டட வரைபடம் பற்றிய அறிவு, அடிக்கல், மண் வகை, கட்டடப் பொருட்கள், கட்டட ஒழுங்கமைப்பும், நிறைவு செய்வதும், கட்டட வரைபடங்களின் மூலம் அளவைகளைப் பெற்றுக் கொள்ளல், மதிப்பீடுகளைத் தயார் செய்தல், நீர் வழங்கலும், கழிவுநீர் அகற்றும் வடிகாலமைப்பும். |
| | **தொழில்நுட்ப அலுவலர் (மின்) பதவி**.- கட்டடங்களின் மின்சுற்றுக்கள் பற்றிய அறிவு, பின்பற்ற வேண்டிய ஒழுங்குவிதிகள், கட்டட வரைபடம் பற்றிய அறிவு, மதிப்பீடுகளைத் தயார் செய்தல் மற்றும் மின்சுற்றுக்களின் சீரான தன்மையைப் பரிசீலனை செய்தல். |
| | **தொழில்நுட்ப அலுவலர் (பொறிமுறை) பதவி**.- வாகனங்களை வகைப்படுத்தல், புதுப்பித்தல் மற்றும் சேர்விஸ் செய்யும் போது பயன்படுத்துகின்ற உபகரணங்கள், எஞ்சின் செயற்பாடு பற்றிய அறிவும், அதன் ஒவ்வொரு பகுதியினதும் செயற்பாடுகளும், குளிரேற்று (Cooling) முறை பற்றிய மற்றும் அதன் ஒவ்வொரு பகுதியினதும் செயற்பாடுகள் பற்றிய அறிவு, செலுத்தல் (Transmission) |

| வினாத் தாளின் பெயர் | பாடவிதானம் |
|---|---|
| | கட்டமைப்பு பற்றிய அறிவும் அதன் ஒவ்வொரு பகுதியினதும் செயற்பாடுகள், பல்வேறு வகையிலுமான செலுத்தல் கட்டமைப்புக்கள், மின்கட்டமைப்பு தொடர்பாக, செலுத்தற்சில்லு (Steering), தொங்கல் கட்டமைப்பு (Suspension) பற்றிய, மின்கலம் (Battery) வகைப் படுத்தல் பற்றிய மற்றும் வகைப்படுத் தல்களை தயார் செய்தல், சில்லு (Wheel) வகைப்படுத்தல் பற்றிய அறிவு, சில்லு களை வகைப்படுத்தியுள்ள சர்வதேச நியமங்கள் பற்றிய அறிவு, உடற்பகுதி (Body) பற்றிய அறிவு, சில்லுத் தொகுதி மற்றும் சில்லு வரிசையாக்கல் (Wheel Alignment),வாகனத்தின் வளிச்சீராக்கி வகைப்படுத்தல் பற்றிய அறிவு, வாகனத்தின் வளிச்சீராக்கிக் கட்டமைப் பின் ஒவ்வொரு பகுதியினதும் செயற்பாடு கள், கட்டடங்களுக்குப் பயன்படுத்தும் வளிச்சீராக்கி இயந்திர வகைப்படுத்தல் பற்றிய, அலுவலக உபகரணங்களை வகைப்படுத்தல் பற்றிய அறிவு. |
| | வரைஞர் பதவி.- உகந்த அளவுத்திட்டத் திற்கு அமைய கட்டட வரைபடங்களை வரைதல் மற்றும் குறிப்புகளைத் தயார் செய்யும் ஆற்றல். |

7.4 எழுத்து மூலப் பரீட்சை சிங்களம்/தமிழ் ஆகிய இரண்டு மொழிகள் மூலமும் நடாத்தப்படும்.

8. **ஆட்சேர்ப்புச் செய்தல்**.- மேலே 5.0 மற்றும் 6.0 இன் கீழ் கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளதுடன், எழுத்து மூலப் பரீட்சையில் சித்தியடைந்துள்ள விண்ணப்பதாரர்கள் இலங்கை தொழில்நுட்பச் சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (குடிசார்/மின்/பொறிமுறை) மற்றும் தொழில்நுட்ப அலுவலர் (குடிசார்) பயிற்றுவித்தல் தரம், வரைஞர் (பயிற்றுவித்தல் தரம்) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார்கள்.

9. **சம்பள அளவுத்திட்டம்**.- பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 6/2006(iv) இன் MN-3-2006A கீழ்,

இலங்கை தொழில்நுட்பச் சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (குடிசார்/மின்/பொறிமுறை) தரம் III

ரூபா 15,005 - 4 X 180 - 6 X 240 - 11 X 320 - 20 X 360 - ரூபா 27,885.

இலங்கை தொழில்நுட்பச் சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (குடிசார்) பயிற்றுவித்தல் தரம்.

ரூபா 12,920- 1 X 120- ரூபா 13,040.

இலங்கை தொழில்நுட்ப சேவையின் வரைஞர் (பயிற்றுவித்தல் தரம்)

ரூபா 12,920- 1 X 120- ரூபா 13,040.

10. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக் கட்டணம் 1,000 ரூபா ஆகும். விண்ணப்பதாரர்கள் திருப்பிச் செலுத்தப்படாத 1,000 ரூபா பரீட்சைக் கட்டணத்தை நாடு முழுவதிலும் அமைந்துள்ள எந்தவொரு தபால் அலுவலகத்தின் மூலமும் (உப தபால் அலுவலகங்கள் தவிர) "SLIDA" கணக்கிற்கு செலுத்த வேண்டும் என்பதுடன், இந்தக் கொடுப்பனவு தொடர்பாக வழங்கப்படுகின்ற ரசீதின் இலக்கத்தை பரீட்சை விண்ணப்பப்படிவத்தின் 12 ஆம் இலக்கத்தின் கீழ் குறிப்பிடுதல் வேண்டும்.

குறித்த தபால் அலுவலகத்தில் "SLIDA" கணக்கிற்கு கொடுப்பன வைச் செலுத்துவதற்கான படிவத்தை நிரப்பும் போது, பணத்தைப் பெற்றுக் கொள்பவராக "SLIDA" என்றும், பணம் பெற்றுக் கொள்பவரின் முகவரி எனும் இடத்தில் உங்களுக்குரிய பரீட்சையின் குறியீட்டுப் பெயரையும் குறிப்பிடுக. (குறியீட்டுப் பெயர்கள் கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளன.)

| | பரீட்சையின் பெயர் | குறியீட்டுப் பெயர் |
|---|---|---|
| 1 | இலங்கை தொழில்நுட்பச் சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (குடிசார்), தரம் III/பயிற்றுவித்தல் தரம் | TOc |
| 2 | இலங்கை தொழில்நுட்பச் சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (மின்), தரம் III | TOe |
| 3 | இலங்கை தொழில்நுட்பச் சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (பொறிமுறை), தரம் III | TOm |
| 4 | இலங்கை தொழில்நுட்பச் சேவையின் வரைஞர் (பயிற்றுவித்தல் தரம்) | TOd |

மேலும், கணக்கிற்கு பணம் செலுத்தும் போது பணம் அனுப்புபவராக விண்ணப்பதாரரின் பெயரையும், பணம் அனுப்புபவரின் முகவரி எனும் இடத்தில் விண்ணப்பதாரியின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தையும், குறிப்பிட்டு விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்தல் வேண்டும்.

11. யாராயினுமொரு விண்ணப்பதாரரின் விண்ணப்பப்படிவத்தில் யாதாயினும் தவறான, பொய்யான கூற்றுக்கள் இருப்பதன் காரணமாக அவர் தகைமையற்றவராக்கப்பட முடியும் என்பதுடன், தெரிவு செய்யப்பட்ட பின்னர் இது பற்றி அறியக்கிடைக்கும் பட்சத்தில் அவர் பதவிநீக்கம் செய்யப்பட முடியும்.

12. **கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**.- விண்ணப்பதாரர்கள் தமது கையொப்பத்தை, அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர் / ஓய்வுபெற்ற அதிபர், பிரிவின் கிராம அலுவலர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பகிரங்க நொத்தாரிசு, முப்படைகளின் ஆணைபெற்ற அலுவலர், அல்லது 2,40,360 ரூபா அல்லது அதற்கு மேலான வருடாந்த சம்பளத்தைப் பெறுகின்ற அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையின் அல்லது நிரந்தர பதவிநிலை அலுவலர் அல்லது நாயக்க தேரர் அல்லது வேறு மதவழிபாட்டுத்தள மொன்றிற்குப் பொறுப்பான மதத் தலைவர் அந்தஸ்தில் உள்ளவராகக் கருதப்படக்கூடிய ஒருவர் மூலம் உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும். ஏற்கெனவே அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பப்படிவத்தை நிறுவனத் தலைவர் ஊடாக அனுப்ப வேண்டும்.

இதில் குறிப்பிடப்படாதுள்ள விடயமொன்று தொடர்பாக தீர்மானம் மேற்கொள்ளும் அலுவலராக கட்டடப் பணிப்பாளர் நாயகம் செயற்படுவார்.

ஜி. போகஹவத்த,
கட்டடப் பணிப்பாளர் நாயகம்,
கட்டடத் திணைக்களம்.

'செத்சிறிபாய',
பத்தரமுல்லை,
2014, மே 16.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கட்டடத் திணைக்களம்**

| | |
|---|---|
| (i) இலங்கை தொழில்நுட்பச் சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (குடிசார்), தரம் III/பயிற்றுவித்தல் தரம் | |
| (ii) இலங்கை தொழில்நுட்பச் சேவையின் தொழில் நுட்ப அலுவலர் (மின்), தரம் III | |
| (iii) இலங்கை தொழில்நுட்பச் சேவையின் தொழில் நுட்ப அலுவலர் (பொறிமுறை), தரம் III | |
| (iv) இலங்கை தொழில்நுட்பச் சேவையின் வரைஞர் (பயிற்றுவித்தல் தரம்) | |

(உரிய இலக்கத்தைக் கொண்ட கூண்டில் அடையாளத்தை இடுக)

(அலுவலக உபயோகத்திற்கு)

எழுத்து மூலப் பரீட்சைக்குத் தோற்றும் மொழி :
சிங்களம் - S
தமிழ் - T
(உரிய ஆங்கில எழுத்தை கூண்டில் எழுதுக.)

1. (i) முழுப் பெயர் :----.
(ii) முதலெழுத்துக்களுடனான பெயர் (சிங்களம் /தமிழ் மொழியில்) :----.
(iii) முழுப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

2. முகவரியும், தொலைபேசி இலக்கமும் :

(i) அலுவலக முகவரி :----.
தொலைபேசி இலக்கம் :----.
(ii) சொந்த முகவரி :----.
தொலைபேசி இலக்கம் : ..............................
(iii) கையடக்கத் தொலைபேசி இலக்கம் : ................................

3. பால் :
ஆண் - 0
பெண் - 1
(உரிய இலக்கத்தை கூண்டில் எழுதுக)

4. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

5. (i) பிறந்த திகதி :

வருடம் [ ][ ][ ][ ] மாதம் [ ][ ] திகதி [ ][ ]

(ii) விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதிக்கு வயது :

வருடங்கள் [ ][ ] மாதங்கள் [ ][ ] நாட்கள் [ ][ ]

6. திருமணமானவரா /திருமணமாகாதவரா என்பது:
திருமணமாகாதவர் - 1
திருமணமானவர் - 2
(உரிய இலக்கத்தை கூண்டில் எழுதுக)

7. க.பொ.த. (சா/த) பரீட்சையின் விபரங்கள் (முதல் அமர்வு) (தயவு செய்து பிரதிகளை இணைக்கவும்) :

(i) பரீட்சையில் சித்தியடைந்த ஆண்டும் மாதமும் :----.
(ii) விண்ணப்பதாரியின் பரீட்சை இலக்கம் :----.

| பாடம் | சித்தி | பாடம் | சித்தி |
|---|---|---|---|
| ....................... | ............... | ....................... | ............... |
| ....................... | ............... | ....................... | ............... |
| ....................... | ............... | ....................... | ............... |
| ....................... | ............... | ....................... | ............... |
| ....................... | ............... | ....................... | ............... |

8. க.பொ.த. (சா. த.) பரீட்சையின் விபரங்கள் (இரண்டாம் அமர்வு) அவசியமாயின் மாத்திரம் (தயவு செய்து பிரதிகளை இணைக்கவும்) :

(i) பரீட்சையில் சித்தியடைந்த ஆண்டும், மாதமும் :----.
(ii) விண்ணப்பதாரியின் பரீட்சை இலக்கம் :----.

| பாடம் | சித்தி | பாடம் | சித்தி |
|---|---|---|---|
| ....................... | ............... | ....................... | ............... |
| ....................... | ............... | ....................... | ............... |
| ....................... | ............... | ....................... | ............... |
| ....................... | ............... | ....................... | ............... |
| ....................... | ............... | ....................... | ............... |

9. க.பொ.த. (உ. த.) பரீட்சையின் விபரங்கள் (தயவு செய்து பிரதிகளை இணைக்கவும்):

பரீட்சையில் சித்தியடைந்த ஆண்டு :----. மாதம் :----.
திகதி :----.
விண்ணப்பதாரியின் பரீட்சை இலக்கம் :----.

| பாடம் | சித்தி | பாடம் | சித்தி |
|---|---|---|---|
| ....................... | ............... | ....................... | ............... |
| ....................... | ............... | ....................... | ............... |

10. ஏனைய தகைமைகள்.- தொழில்நுட்ப /தொழில்சார் (தயவு செய்து பிரதிகளை இணைக்கவும்) :----.

11. உரிய துறை தொடர்பாக பெற்றுள்ள அனுபவம் :----.

மேலே 10,11 இற்குரிய தகைமைகளை உறுதிப்படுத்துகின்ற சான்றிதழ்களை இணைப்பாக சமர்ப்பிப்பது அத்தியாவசிய மாகும் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

12. பரீட்சைக் கட்டணம் :

பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் இலக்கம்

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| S | L | D | | | | | | | | | | | |

1,000 ரூபா பரீட்சைக் கட்டணத்தை செலுத்திய பற்றுச்சீட்டை இங்கே ஒட்டவும்.
(பற்றுச்சீட்டின் பிரதியை உங்கள் வசம் வைத்திருப்பது பயனுள்ளதாகும்.)

13. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

இந்த விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்கின்ற ............................ (முழுப் பெயர்) என்பவரை நான் தனிப்பட்ட வகையில் அறிவேன் என்றும், ............................ திகதி அவர் என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதையும் இத்தால் உறுதிப்படுத்து கின்றேன்.

----,
உறுதிப்படுத்தும் அலுவலரின் கையொப்பம்.

உறுதிப்படுத்தும் அலுவலரின் முழுப் பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.
உத்தியோகபூர்வ முத்திரை :----.

14. விண்ணப்பதாரரின் உறுதியுரை :

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் நான் அறிந்த வகையில் உண்மையானவை என்றும், சரியானவை என்றும் இத்தால் உறுதி கூறுகின்றேன். மேலும், இதில் உள்ளடங்கும் யாதாயினுமொரு தகவல் பிழையானதென்றும், உண்மைக்கு மாறானதென்றும் கண்டறியப்படும் பட்சத்தில், அவ்வாறு கண்டறியப்படுவது பதவிக்குத் தெரிவு செய்யப்பட முன்னர் இடம்பெறுமாயின் நான் தகுதியற்றவனாவேன் என்றும், நியமனம் பெற்ற பின்னர் கண்டறியப்பட்டால் எந்தவொரு நட்டஈடும் செலுத்தப்படாது பதவி நீக்கம் செய்யப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

**அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம்**

மேற்படி விண்ணப்பதாரரான திரு./திருமதி/செல்வி ...................... தற்போது இந்த அமைச்சில் /திணைக்களத்தில் ........................... ஆக நிரந்தர /தற்காலிக /அமய ஊழியராக சேவையாற்றுகின்றார் என்றும், இப்பதவிக்கு இவர் தெரிவு செய்யப்படுவாராயின், அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும் /முடியாது என்றும் அறியத் தருகின்றேன்.

----,
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

----
(உத்தியோகபூர்வ முத்திரை).

பதவி :----.
திகதி :----.

6-28

**மக்கள் தொடர்பாடல், தகவல் அமைச்சு**

அரசாங்க சேவை ஆணைக்குழு

## அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் நிறைவேற்று அலுவலர் தரத்தின் வகுப்பு I: தரம் III இற்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட /திறந்த போட்டிப் பரீட்சை- 2012

இத் திணைக்களத்தில் நிறைவேற்று அலுவலர் தரத்தின் வகுப்பு I: தரம் III இற்கான பதவிகளுக்கான 20 வெற்றிடங்களை நிரப்புவதற்காக கீழே தரப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்ப தாரிகளிடமிருந்து அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைக்கமைய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வறிவித்தலின் இறுதியிலுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைவாக விண்ணப்பங்களை தயாரித்து கீழே குறிப்பிடப்பட்டுள்ள திகதியன்று அல்லது அதற்கு முன்னர் " பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் , ஏற்பாடுகள் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கை பரீட்சைகள் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை" எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். உறையின் இடது பக்க மேல் மூலையில் "அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் நிறைவேற்று அலுவலர் தரத்தின் வகுப்பு I: தரம் III இற்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான மட்டுப் படுத்தப்பட்ட/ திறந்த போட்டிப் பரீட்சை- 2012" என தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.மேலும் , பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும்.

(அ) விண்ணப்பம் கோரும் இறுதித் திகதி: 07.07. 2014 ஆகும்.

**குறிப்பு**.- விண்ணப்பப்படிவம் அல்லது அது தொடர்பான ஆவணங்கள் தபாலில் தொலைந்து விட்டது அல்லது தாமதித்து விட்டது போன்ற காரணங்களினால் செய்யப்படும் எவ்வித முறைப்பாடுகளும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. இறுதித் திகதி வரை விண்ணப்பங்களை தாமதப்படுத்தும் விளைவுகளுக்கு விண்ணப்பதாரிகளே பொறுப்பாவர்.

1. **சேவைக்கு ஆட்சேர்த்துக் கொள்ளும் விதம்**.- எழுத்து மூலப் பரீட்சை மற்றும் தகைமைகளைப் பரீட்சிப்பதற்கான நேர்முகப்பரீட்சை ஆகியவை மூலம் உள்ளக மற்றும் வெளிவாரி விண்ணப்பதாரர்கள் ஆட் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் எழுத்து மூலப் பரீட்சையில் ஒவ்வொரு விண்ணப்பதாரியும் எல்லா வினாப்பத்திரங்களுக்கும் தோற்றுதல் வேண்டும். ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் 40% இற்குக் கூடுதலான புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகளுக்குள் ஆகக் கூடிய புள்ளிகளைப் பெற்றவர்கள் வெற்றிடமாயுள்ள எண்ணிக்கையை கருத்திற்கொண்டு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். அரசாங்க சேவை ஆணைக்குழு வினால் அங்கீகரிக்கப்படுகின்ற நேர்முகப்பரீட்சை சபையினால் தகைமைகள் பரீட்சிக்கப்படும். (நேர்முகப்பரீட்சையின் போது புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது) நியமிக்கப்படும் எண்ணிக்கை மற்றும் நியமனம் செய்யப்படும் திகதி அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைக் கமைய தீர்மானிக்கப் படும்.

2. **சம்பள அளவுத்திட்டம்**.- இப்பதவிக்கு, பொது நிருவாக சுற்றிக்கை இல. 6/2006 ஐக் கொண்ட சம்பள அளவுத்திட்டத்திற்கமைய SL- 1-2006 ரூபா 22, 935- 10×645 -8×790- 17×1,050 - ரூபா 53,555 (மாதாந்தம்) சம்பள அளவுத்திட்டத்திற்குரித்தானதாகும்.

**3. சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள் :**

(i) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். விதவைகள் /தபுதாரர், அனாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

(ii) இப் பதவிக்கு வெளிவாரி விண்ணப்பதாரிகளில் இருந்து ஆட்சேர்த்துக் கொள்ளப்படும் அலுவலர் 3 ஆண்டு தகுதிகாண் காலத்திற்கு ஆட்பட்டவர்களாவர். உள்வாரி விண்ணப்பதாரிகளில் இருந்து ஆட் சேர்த்துக்கொள்ளப்படும் அலுவலர்கள் 1 வருட பதிற் கடமையாற்றும் கால எல்லைக்கு ஆட்பட்டவராவர்.

(iii) பொது நிருவாக சுற்றறிக்கை இல. 01/2014 இற்கமைவாக அல்லது மற்றும் அதற்கண்மைய சுற்றறிக்கைக்கமைய பதவிக்கு ஆட்சேர்த்துக் கொள்ளப்படுபவர்கள் 5 வருடத் திற்குள் அரச கரும மொழி தேர்ச்சி பெறுதல் வேண்டும்.

(iv) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவைக்கும் அரச நிதி ஒழுங்கு விதிகளுக்கும் திணைக் களத்தின் ஏனைய ஒழுங்கு விதிகளுக்கும் இப்பதவி உட்பட்டதாகும்.

**4. தகைமைகள் :**

**4.1 வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்காக : 07 வெற்றிடங்கள்**

***உதவி அரசாங்க அழுத்தகர் (உற்பத்தி) பதவி***

(i) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் வகுப்பு சித்தியுடன் அச்சீட்டு தொழிநுட்பவியல் பட்டம் அல்லது இரசாயன விஞ்ஞானம்/கணினி விஞ்ஞானம் (பிரதான பாடமாக) உடன் விஞ்ஞான பட்டம் பெற்றிருத்தல்;

அல்லது

(ii) அச்சீட்டுப் பொறியியலாளர் பட்டம் அல்லது பொறியியலாளர் (இயந்திர) மின்சார/மின் தொலைத் தொடர்பு/மின்னியல் ( உற்பத்தி) பட்டம் பெற்றிருத்தல்.

அல்லது

(iii) விஞ்ஞான பட்டத்துடன் அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் 5 வருடங்கள் சேவையாற்றியிருத்தல்.

மற்றும்

(iv) இலங்கை அச்சீட்டு நிறுவகத்தில் அச்சீட்டு தொழிநுட்ப பாட நெறி இரண்டினை பின்பற்றியிருத்தல் வேண்டும்.

(பாடநெறிகள் ஒரு வருட கால எல்லைக்குக் குறையாது இருத்தல் வேண்டும்.)

**4.2 உள்ளக விண்ணப்பதாரிகளுக்காக : 08 வெற்றிடங்கள் உதவி அரசாங்க அழுத்தகர் (உற்பத்தி) பதவிக்காக**

(i) அச்சீட்டு சேவையின் பிரதம மேற்பார்வையாளர் அல்லது II ஆம் தர மேற்பார்வையாளர் பதவி வகிக்கும் அலுவலரொருவராக இருத்தல்.

மற்றும்

இலங்கை அச்சீட்டு நிறுவகத்தில் அல்லது அங்கீகரிக் கப்பட்ட நிறுவகத்தில் அச்சீட்டு தொழிநுட்பம் பற்றிய 02 பாட நெறிகளைப் பின்பற்றி சான்றிதழ் பெற்றிருத்தல்.

(பாடநெறிகள் ஒரு வருட கால எல்லைக்குக் குறையாது இருத்தல் வேண்டும்.)

அல்லது

(ii) அச்சீட்டு சேவையின் பிரதம அச்சீட்டு பதிப்பாளர் அல்லது II ஆம் தர அச்சீட்டுப் பதிப்பாளர் பதவி வகிக்கும் அலுவலரொருவராக இருத்தல்

மற்றும்

இலங்கை அச்சீட்டு நிறுவகத்தில் அல்லது அங்கீகரிக் கப்பட்ட நிறுவகமொன்றில் அச்சீட்டு தொழில்நுட்பம் பற்றிய 3 பாடநெறிகளை பின்பற்றி சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

(பாடநெறிகள் ஒரு வருட கால எல்லைக்குக் குறையாது இருத்தல் வேண்டும்.)

(iii) விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அண்மித்த 5 வருட காலத்திற்குள் திருப்தி கரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**உதவி அரசாங்க அழுத்தகர் (பராமரிப்பு) பதவிக்காக : 03 வெற்றிடங்கள்**

(i) அச்சீட்டு சேவையில் பிரதம மேற்பார்வையாளர் (பராமரிப்பு) அல்லது II ஆம் தர மேற்பார்வையாளர் (பராமரிப்பு) பதவி வகிக்கும் அலுவலரொருவராக இருத்தல்.

(ii) இலங்கை அச்சீட்டு நிறுவகத்தில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவகமொன்றில் அச்சீட்டு தொழிநுட்பம் பற்றிய 02 பாட நெறியிகளைப் பின்பற்றி சான்றிதழ் பெற்றிருத்தல்.

(பாடநெறி ஒரு வருட கால எல்லைக்குக் குறையாது இருத்தல் வேண்டும்.)

அல்லது

I ஆந் தர அல்லது II ஆந் தர மேற்பார்வையாளர் பதவிகளில் ஒன்று திரட்டிய பத்து (10) வருட அனுபவத்துடன் I ஆம் தர (பிரதம மேற்பார்வையாளர் ) மேற்பார்வையாளராக இருத்தல்.

(iii) விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அண்மித்த 5 வருட காலத்ததிற்குள் திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**உதவி அரசாங்க அழுத்தகர் (அச்சீட்டு பதிப்பாளர்) பதவிக்காக - 02 வெற்றிடங்கள்**

(i) அச்சீட்டு சேவையில் பிரதம அச்சீட்டு பதிப்பாளர் அல்லது II ஆம் தர அச்சீட்டு பதிப்பாளர் பதவிகளை வகிக்கும் அலுவலரொருவராக இருத்தல்.

மற்றும்

இலங்கை அச்சீட்டு நிறுவகத்தில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவகமொன்றில் அச்சீட்டு தொழிநுட்பம் பற்றிய 02 பாட நெறிகளைப் பின்பற்றி சான்றிதழ் பெற்றிருத்தல்.

(பாடநெறி ஒரு வருட கால எல்லைக்குக் குறையாது இருத்தல் வேண்டும்.)

(ii) விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அண்மித்த 5 வருட காலத்ததிற்குள் திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

5. **உடற்தகைமைகள் :**

(i) ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கையின் எப் பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும்;

(ii) பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் :

போதிய உடல் மற்றும் உளத் தகைமையை பெற்றிருத்தல் வேண்டும்.

6. **வயதெல்லை**.- 22 வயதிற்குக் குறையாமலும் 28 வயதிற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும்.

(திணைக்களத்தில் நிரந்தரப் பதவியிலுள்ள விண்ணப்பதாரிகளுக்கு ஆகக் கூடிய வயதெல்லை ஏற்புடைத்தாகாது.)

7. **ஏனைய தகைமைகள்:**

(i) விண்ணப்பதாரிகள் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;

(ii) விண்ணப்பதாரிகள் சிறந்த ஒழுக்கமுடையவர்களாக இருத்தல் வேண்டும்;

(iii) ஏதேனும் சமயப் பிரிவின் குருமார்களாக இருக்கக் கூடாது.

(iv) விண்ணப்பங்கள் கோரும் இறுதித் திகதிக்கு, பதவிக்கு ஆட் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு தேவையான தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் என விண்ணப்பம் கோரும் அறிவித்தலில்/வர்த்தமானியில் குறிப்பிடப்படுகின்ற இறுதித் திகதிக்கு அத் தகைமைகளை எல்லா விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

8. **8.1 எழுத்து மூலப் பரீட்சை:**

8.1.1 இப்பரீட்சையானது பரீட்சை ஆணையாளர் நாயகத்தி னால் நடாத்தப்படும்.

8.1.2. பாடத்திட்டம் .- அச்சீட்டு சேவையின் நிறைவேற்று அலுவலர் தரத்தின் III ஆம் வகுப்பின் I ஆம் தரத்திற்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை:

கீழே தரப்பட்டுள்ள பாடங்களில் எழுத்துப் பரீட்சை நடாத்தப்படும் :

| | மணித்தியாலம் | புள்ளிகள் |
|---|---|---|
| (i) கிரகித்தல் | 02 | 100 |
| (ii) பொது விவேகம் | 01 | 100 |
| (iii) பொது அறிவு | 02 | 100 |

| வினாப்பத்திரத்தின் பெயர் | பாடத்திட்டம் |
|---|---|
| (அ) கிரகித்தல் | இவ்வினாப்பத்திரத்தின் மூலம் சிறு வாக்கியங்கள் சிலவற்றின் கருத்தை ஒரு வாக்கியத்தில் வெளிப்படுத் தல். கீழே கோடிடப்பட்ட பதங் களுக்கான விளக்கத்தை வழங்கல். மாற்று கூற்றுக்கள் சிலவற்றிற்கு தரப்பட்டிருக்கின்ற வசனங்களின் உள்நோக்கு காரணிகளில் மிகவும் பொருத்தமான கூற்றை தேர்ந் தெடுத்தல். தரப்படுகின்ற பந்தி யொன்றின் தொடர்புடையவற் றிற்காக கேட்கப்படுகின்ற கேள்வி கள் சிலவற்றிற்கு விடை வழங்கல் மற்றும் தரப்படுகின்ற ஓரளவான தொடர் பந்தியொன்று, ஆவண மொன்று அல்லது தொடர்பாடலை உட்கிரகித்து அதன் முக்கிய வெளிப்பாட்டை தங்கள் சொற் களில் சுருக்கமாகச் சமர்ப்பித்தல். விண்ணப்பதாரிக்குரிய கருத்தை புரிந்து கொள்ளும் திறமை மற்றும் இலகு மொழியில் வெளிப்படுத்தும் ஆற்றலை அளவிடுவதையே இது வெளிக்காட்டும். |
| (ஆ) பொது விவேகம் | சொற்றொடர், எண்ணுருக்கள் மற்றும் வரிப்படங்களுள் காட்டப்படும் தீர்வுகள் தொடர்பாக விண்ணப்ப தாரிகளின் போக்கு மற்றும் வெளிப் பாட்டை பரீட்சிப்பதன் மூலம் அவர்களின் கிரகித்தல் திறமை மற்றும் விவேகத்தை அளவிடலை வெளிப்படுத்தும். |
| (இ) பொது அறிவு | விண்ணப்பதாரி வாழும் சூழல் உட் பட இலங்கையின் அரசியல், சமூகம், கலாசாரம் மற்றும் பொருளாதார சூழலையும் தேசிய மற்றும் சர்வதேச பிரசித்தமான புதுமை காரணிகள் போன்றே விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தியும் தொடர்பான வற்றிலிருந்தும் அச்சு விடயங்கள் பற்றியும் விண்ணப்பதாரியின் அறிவுத் தன்மை மற்றும் கிரகித் தலை அளவிடல் என்பவற்றை வெளிக்காட்டும் கேள்விகள் சிலவற் றிற்குள் தாங்கள் விரும்பும் கேள்வி களைத் தெரிவுசெய்வதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும். |

அச்சீட்டு சேவையின் நிறைவேற்று அலுவலர் தரத்தின் I ஆம் வகுப்பு III ஆந் தரத்திற்கு ஆட்சேர்த்துக்கொள்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை :

கீழே தரப்பட்டுள்ள பாடங்களில் எழுத்துமூல பரீட்சை நடாத்தப் படும் :

| | | மணித்தியாலம் | புள்ளிகள் |
|---|---|---|---|
| (i) | பொது நிர்வாகம் | 3 | 100 |
| (ii) | அச்சீட்டு தொழில்நுட்பம் | 3 | 100 |

| வினாப்பத்திரத்தின் பெயர் | பாடத்திட்டம் |
|---|---|
| (அ) பொது நிர்வாகம் | தாபனக்கோவையின் ஏற்பாடுகள், அரசாங்க சேவை ஆணைக் குழுவின் கட்டளைகள் மற்றும் திணைக்களத்தின் கட்டளைகள் பற்றிய அறிவு மற்றும் கிரகித்தலைப் பரீட்சிக்கும் வினாக்களைக் கொண்டதாகும். |
| (ஆ) அச்சீட்டு தொழில் நுட்பம் | (i) முன் அச்சீடு : தட்டச்சு பொறித்தல், பக்கங்களை ''லே அவுட்'' செய்தல், கணினி வரைவியல் வடிவமைப்பு, ''புரோசெஸ்'' நிழற்படக் கருவி வேலை, நிழல் நாடாக்களைக் கொண்டு தயாரித்தலும் ''லே அவுட்'' செய்தலும், ''ரிப்'' செய்தல், ''இமேஜ் செட்டிங் செய்தல்'', ''பிளேட்''டுக்கள் தயாரித்தல், ''பொலிமர் பிளேட்'' தயாரித்தல் |
| | (ii) அச்சீடு : ''ஓவ்செட் லித்தோ'' தாள் அச்சிடுதல், ''ஓவ்செட் லித்தோ வெப்'' அச்சிடுதல், அச்சு கோர்ப்புத் தாள் அச்சிடுதல், அச்சு கோர்ப்பு ''ரொட்டரி'' அச்சிடுதல் |
| | (iii) பின் அச்சீடு : வெட்டுதல், மடித்தல், ஒன்றுசேர்த்தலும் உள்ளிடலும், ''வயர்'' அடித்தல், ''செக்ஷன்'' தைத்தல் மற்றும் ''பேர்பெக்ட் பைண்டிங்'' செய்தல், கோவைக் ''கவர்'' தயாரித்தல், ''லெஜர்'' தயாரித்தல், ''பொயில் (Foil)'' செய்தல், மீண்டும் கட்டுதலும் விசேட புத்தகம் கட்டும் வேலை. |
| | (iv) ஏனையவை : ''டை'' கொண்டு வெட்டுதல், ''பிளைன்ட் எம்போஸ்'' செய்தல், ''பொயில் (Foil) லெமினேட்'' செய்தல், ''கிறீஸ்'' இடலும் ''பர்பரேட்'' செய்தலும், கிரயமும் மதிப்பும், பாதுகாப்பு அச்சிடல். |
| | (v) எதிர்கால தேவைப்பாடு : ''பிளேட் செட்டிங்'' செய்தல், ''கன்ரினுவஸ் ஸ்ரேஷனரி'' அச்சிடல், ''டிஜிட்டல்'' அச்சிடல் |
| | (vi) ''கம்பயிலிங்'' செய்தல் (Compiling), முன் பதிப்பு, சரவை திருத்துதல், இயந்திர சரவை திருத்துதல் |
| | (vii) பொறி மற்றும் உபகரணங்களின் இயந்திரப் பகுதிகளைப் பராமரித்தல், புதுப்பித்தல், பொறி மற்றும் உபகரணங்களின் மின்சாரப் பகுதிகளைப் பராமரித்தலும் புதுப்பித்தலும், பொறி மற்றும் உபகரணங்களின் மின்னியல் பகுதிகளைப் பராமரித்தலும் புதுப்பித்தலும், கணினி உதிரிப்பாகங்களின் மின்னியல் பகுதிகளைப் பராமரித்தலும் புதுப்பித்தலும் கட்டிடங்கள் (மின்சார பகுதிகள் உட்பட) பராமரித்தலும் புதுப்பித்தலும் |
| | (மேலே கூறப்பட்ட ஒவ்வொரு பகுதிக்குமான வினாக்கள் தரப்பட்டு அதில் விருப்பமுள்ள 04 பகுதிகளுக்கு விடை தருமாறு விண்ணப்பதாரிகளுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படும்.) |

8.2 நேர்முகப் பரீட்சை :

8.2.1 பொது நேர்முகப் பரீட்சை.- (புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது).
நிறைவேற்றப்படவுள்ள நோக்கம்.- ஆட்சேர்த்துக் கொள்வதற்கான விதிகள் மற்றும் அதற்கு அனுகூலமான விளம்பர அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதாவென பரீட்சித்தலும் உடற்றகைமைகளைப் பரீட்சித்தலும்.

9. **பரீட்சை நிபந்தனைகள் :**

(i) பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பதாரிகள் தாம் விரும்பும் ஒரு மொழியில் பரீட்சைக்குத் தோற்றலாம். பரீட்சார்த்திகள் இப்பரீட்சையில் எல்லா வினாப்பத்திரங்களுக்கும் ஒரே மொழியில் விடையளித்தல் வேண்டும். விண்ணப்பதாரிகள் தாங்கள் விண்ணப்பங்களில் எழுதியுள்ள பரீட்சை மொழியை மாற்ற இடமளிக்கப்பட மாட்டாது. ஒவ்வொரு வெளிவாரி விண்ணப்பதாரியும் மூன்று (03) வினாப்பத்திரங்களுக்கும் தோற்றுதல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரிகள் இரண்டு (02) வினாப்பத்திரங்களுக்குத் தோற்றுதல் வேண்டும்.

(ii) பரீட்சைக் கட்டணம் ரூபா 1,000 ஆகும். பரீட்சைக் கட்டணத்தைப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தலைப்பு 2003-02-13 இல் பற்று வைப்பதற்காக தீவு முழுவதிலுமுள்ள எந்தவொரு தபால் அலுவலகத்திலும் செலுத்தி விண்ணப்ப

தாரியின் பெயரில் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தின் குறித்த இடத்தில் கழறாதவாறு ஒட்டவும். அப்பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியை தங்களிடம் வைத்திருப்பது பிரயோசனமானதாகும்.

(iii) பரீட்சைக்காகச் செலுத்தப்பட்ட கட்டணம் எக்காரணம் கொண்டும் மீளத்தரப்பட மாட்டாது.

(iv) இப்பரீட்சை கொழும்பில் நடாத்தப்படும். பரீட்சை நடாத்தப்படும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

(v) பூரணமற்ற விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

**குறிப்பு**.- அனுமதி அட்டையின்றி பரீட்சை மண்டபத்திற்குள் உட்பிரவேசிக்க அனுமதிக்கப்படமாட்டாது. பரீட்சை தொடங்கும் திகதியன்று பரீட்சை மண்டப மேற்பார்வையாளருக்கு தமது கையெழுத்து சான்றுபடுத்திய அனுமதி அட்டையைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

விண்ணபதாரிக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்குவது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளார் எனக் கருதப்படமாட்டாது.

(vi) விண்ணப்பப்படிவம் 22 x 29 செ. மீ. ஏ4 அளவிலான கடதாசியில் தயாரிக்கப்படுவதுடன் வெளிவாரி விண்ணப்பதாரிகள் தங்கள் விண்ணப்பங்களை, 1.0 இலிருந்து 2.11 வரையான பகுதிகளை முதலாம் பக்கத்திலும் 3.0 இலிருந்து 6.0 வரையான பகுதிகளை இரண்டாவது பக்கத்திலும் அமையுமாறு தயாரித்தல் வேண்டும் என்பதுடன் உள்ளக விண்ணப்பதாரிகள் தங்கள் விண்ணப்பங்களை 1.0 இலிருந்து 2.11 வரையான பகுதிகளை முதலாவது பக்கத்திலும் 3.1 இலிருந்து 7.0 வரையான பகுதிகளை இரண்டாவது பக்கத்திலும் ஏனையவற்றை மூன்றாவது பக்கத்திலுமாகத் தயாரித்து அதற்குரிய தகவல்களை தங்கள் கையெழுத்தினால் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைவாகத் தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள், பூரணமற்ற விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். உரிய விண்ணப்பப்படிவத்தின் பிரதியை தங்களுடன் வைத்திருப்பது பிரயோசனமானதாகும். மேலும் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக இருக்கின்றதா என விண்ணப்பதாரி அவதானித்தல் வேண்டும். அவ்வாறு இல்லாவிடில் விண்ணப்பப் படிவம் நிராகரிக்கப்படும் என மேலும் அறிவிக்கின்றேன். இம்மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய விண்ணப்பப்படிவத்தைத் தயாரிக்கவும்.

(vii) விண்ணப்பப்படிவம் கிடைத்தமை அறிவிக்கப்படமாட்டாது என்பதுடன், பரீட்சைக்கான அனுமதி அட்டை விண்ணப்பதாரிகளுக்கு அனுப்பப்பட்டவுடன் அதுபற்றி செய்திப் பத்திரிகைகளில் அறியத்தரப்படும். அறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட 2 அல்லது 3 தினங்களுக்குப் பின்னர் அனுமதி அட்டை கிடைக்காதுவிடின் அதுபற்றி இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறியத்தருதல் வேண்டும். உங்களிடம் வைத்திருக்கும் விண்ணப்பப்படிவத்தின் பிரதியுடன், பதிவுசெய்த பற்றுச்சீட்டின் பிரதியையும் கொழும்பிற்கு வெளிப்பிரதேச மாயின் அனுமதி அட்டை அனுப்புவதற்காக தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டு உங்கள் கோரிக்கைக் கடிதமொன்றை இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு அனுப்புதல் பயனுள்ளதாக இருக்கும்.

(viii) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் மீது இப்பரீட்சையைத் தள்ளிப்போடவோ அல்லது இரத்துச் செய்யவோ பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு அதிகாரம் உண்டு.

(ix) பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அமுலாக்கப்படும் விதிகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்பட்டவராவர். அவ்விதிகளை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு பரீட்சார்த்தி ஆளாவார்.

(x) பரீட்சார்த்தியின் ஆளடையாளம்.- பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்திப்படும் வகையில் ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தில் தமது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். கீழே தரப்பட்டுள்ள ஆவணங்களில் ஒன்று மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும் :-

(i) ஆட்கள் பதியும் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ;
(iii) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.

**கவனிக்க வேண்டியது** :

(அ) ஆளடையாளத்திற்கு எவ்வித ஆவணங்களோ அல்லது அதன் பிரதிகளோ இணைக்கக் கூடாது.

(ஆ) கோரும் வேளையில், ஆவணங்களைச் சமர்ப்பிப்பதற்கு முடியாத பரீட்சார்த்தியின் ஆளடையாளம் பற்றி கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.

அரசாங்க சேவையில்/மாகாண அரசாங்க சேவையில், அரசாங்க கூட்டுத்தாபனங்களில் சேவையாற்றும் அலுவலர்கள் தங்கள் திணைக்கள/நிறுவனத் தலைவர்கள் ஊடாக விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்றுவதற்கு முன்னர் ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொள்ளல் கட்டாயமானதாகும். அரசாங்க சேவையிலுள்ளவர்கள் தமது கையொப்பத்தை தாம் சேவையாற்றும் நிறுவனத் தலைவர் மூலம் சான்றுபடுத்துதல் வேண்டும். ஏனைய பரீட்சார்த்திகள் தமது கையொப்பத்தை அரசாங்கப் பாடசாலை அதிபர்/ஓய்வுபெற்ற அதிபர்/பிரிவு கிராம அலுவலர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படைகளின் ஆணைபெற்ற அலுவலர், ரூபா 2,40,360 அல்லது அதற்கு மேல் வருடாந்த திரட்டிய சம்பளத்தைப் பெறும் அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் பணியாட்டொகுதி தரத்திலான அலுவலர் அல்லது பௌத்த விகாரை விகாராதிபதி அல்லது தலைமை தேரர் அல்லது ஏனைய மத ஸ்தானங்களின் பொறுப்புள்ள மதத் தலைவர், பிரசித்திபெற்ற ஒருவராகக் கருதப்படும் நபர் ஆகியோரில் ஒருவரினால் சான்றுப்படுத்தப்படல் வேண்டும்.

10. **பொய்யான தகவல்களை வழங்குவோருக்கான தண்டனை**.- பரீட்சார்த்தி ஒருவருக்கு தகைமைகள் இல்லையென நிரூபிக்கப்படு

மானால், பரீட்சைக்கு முன்னராயின் அல்லது பரீட்சை நடைபெறும்போது அல்லது பரீட்சையின் பின்னராயின் அல்லது எவ்வேளையிலும் அவரின் பரீட்சார்த்தித் தன்மை இரத்துச்செய்யப்பட ஏதுவாகலாம். பரீட்சார்த்தியினால் தரப்பட்டிருக்கும் ஏதேனும் தகவல்கள் பொய்யானதென அறியவரின், இல்லாவிட்டால் வேண்டுமென்றே தேவையான தகவல்களை மறைத்திருந்தால் அவரை சேவையிலிருந்து விலக்குவதற்கும் ஏதுவாகும்.

11. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைகளுக்கும், காலத்திற்குக்காலம் அரசாங்க சேவை தொடர்பாக வெளியிடப்படும் சுற்றறிக்கை மற்றும் நிறைவேற்று சேவைத் தரத்தின் III ஆந் தரத்திற்குரிய சேவை ஏற்பாடுகள் மற்றும் அதற்குச் செய்யப்படவுள்ள திருத்தங்களின் நியதிகள் இப்பதவிக்கு ஏற்புடையதாகும்.

12. இவ்வொழுங்கு விதிகளில் குறிப்பிடப்படாத ஏதேனும் காரணிகள் பற்றி அரசாங்க சேவை ஆணைக்குழுவே தீர்மானிக்கும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

சரித்த ஹேரத்,
செயலாளர்,
மக்கள் தொடர்பாடல் மற்றும் தகவல் அமைச்சு.

06.06.2014.

☐
(அலுவலக உபயோகத்திற்காக மட்டும்)

மாதிரி விண்ணப்பப்படிவம்

**அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் இலங்கை அச்சீட்டு சேவையின் நிறைவேற்று அலுவலர் பதவி தரத்தின் வகுப்பு I : தரம் III ஐச் சேர்ந்த உதவி அரசாங்க அழுத்தகர் (உற்பத்தி) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2012**

Open Competitive Examination for Recruitment to Executive Service Cardre, Class I Grade III in Printing Service in the Department of Government Printing - 2012

1. மொழிமூலம் :

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் : ☐
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.)

2. தனிப்பட்ட தகவல்கள் :

2.1 முதலெழுத்துக்கள் இறுதியில் வருமாறு முதலெழுத் துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) (SILVA, A. B.) :------------------------------------------------------------------------------------------.

2.2 முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :------------------------------------------------------------.

2.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :-------------------------------------------------------------------.

2.4 நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :---------------------------------------------------------.

2.5 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :-----------------------------------------------------------------.

2.6 பால் (ஆண்/பெண்) : ☐
(ஆண்-0, பெண்-1)
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.)

2.7 திருமணமானவரா /திருமணமாகாதவரா ? : ☐
திருமணமாகாதவர்-1, திருமணமானவர்-2

2.8 தேசிய அடையாள அட்டை இலக்கம் :
☐☐☐☐☐☐☐☐☐☐

2.9 பிறந்த திகதி :
ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

2.10 விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது :
வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

2.11 தொலைபேசி இலக்கம் :
☐☐☐☐☐☐☐☐☐☐

3. (i) பட்டம் பெற்ற திகதி (இத்தகைமைகள் இருக்கின்றனவா என்பதைப் பார்ப்பதற்கு வர்த்தமானி அறிவித்தலின் 7 (ii) தயவுசெய்து வாசித்துப் பார்க்கவும்) :--------------------.
(ii) பல்கலைக்கழகம்/நிறுவகம் :----------------------------.
(iii) பதிவுசெய்யப்பட்ட இலக்கம் :----------------------------.
(iv) வெளிவாரி/உள்ளக :----------------------------------.
(v) பட்டம் :-----------------------------------------------.
(vi) பாடங்கள் :---------------------------------------------------------------------------------------------------------------------------------------.
(vii) வகுப்பு :----------------------------------------------.
(viii) மேல்/கீழ் :--------------------------------------------.
(ix) சுட்டெண் :---------------------------------------------.
(x) பரீட்சைக்குத் தோற்றிய மொழிமூலம் :-------------------.

4. பணம் கட்டிய பற்றுச்சீட்டை கழறாதவாறு ஒட்டவும் :

(பற்றுச்சீட்டை கழறாதவாறு இங்கு ஒட்டவும்.)
(பற்றுச்சீட்டின் பிரதியை தங்களுடன் வைத்திருப்பது பிரயோசனமாகும்.)

5. விண்ணப்பதாரியின் உறுதியுரை :
மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் உண்மையானது எனவும், பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட ........................................ ஆந் திகதிய ................................... ஆம் இலக்க பற்றுச்சீட்டை இத்துடன் இணைத்துள்ளேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன். மேலும் பரீட்சை சட்டதிட்டங்களுக்கமைய செயற்படுவதற்கும் இப்பரீட்சை பற்றிய நிபந்தனைகளுக்கமைய நான் தகைமையற்றவன் எனத்

தெரியவரின் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சையின்போது அல்லது பரீட்சையின் பின்னர் எனது பரீட்சார்த்தித் தன்மை இரத்துச்செய்யப்படும் ஏதேனும் தீர்மானத்திற்கு இணங்குகிறேன், மேலும் பரீட்சை நடைபெறுவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு நான் கட்டுப் படுவேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

6. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் (வர்த்தமானி அறிவித்தல் 9(ஈ) அமைய இருத்தல் வேண்டும்.)

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் ............................................ (முழுப்பெயர்) என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும் குறிப்பிட்ட பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளா ரெனவும் அப்பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதெனவும் ................ ஆந் திகதியன்று அவரது கையொப்பத்தை எனது முன்னிலையில் இட்டார் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

----,
கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
அலுவலரின் கையொப்பம்.

கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(அலுவலக முத்திரையினால் உறுதிப்படுத்த வேண்டும்.)

மாதிரி விண்ணப்பப்படிவம்

[ ]
அலுவலக உபயோகத்திற்காக

**அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் இலங்கை அச்சீட்டு சேவையின் நிறைவேற்று பதவி தரத்தின் வகுப்பு I : தரம் III இற்கான உதவி அரசாங்க அழுத்தகர் (உற்பத்தி), உதவி அரசாங்க அழுத்தகர் (பராமரிப்பு - அச்சீட்டு இயந்திரம்), உதவி அரசாங்க அழுத்தகர் (பராமரிப்பு - மின்னியல்), உதவி அரசாங்க அழுத்தகர் (அச்சீட்டு பதிப்பாளர்) ஆகிய பதவிகளுக்கு ஆட்சேர்த்துக்கொள்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2012**

The Limited Competitive Examination for Recruitment to Executive Service Cardre, Class I Grade III in Printing Service Assistant Government Printer (Production), Assistant Government Printer (Maintenance-Printing Mechanical), Assistant Government Printer (Maintenance-Electronics), Assistant Government Printer (Printing Editor) in the Department of Government Printing - 2012

1. மொழிமூலம் :

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

[ ]
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.)

2. தனிப்பட்ட தகவல்கள் :

2.1 முதலெழுத்துக்களை இறுதியில் வருமாறு முதலெழுத் துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) (SILVA, A. B.) :---------------------------------------
----------------------------------------------------.

2.2 முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :-----------
----------------------------------------------------.

2.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :-------------------
----------------------------------------------------.

2.4 நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :--------
----------------------------------------------------.

2.5 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----------------
----------------------------------------------------.

2.6 பால் (ஆண்/பெண்) : [ ]
(ஆண்-0, பெண்-1)
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.)

2.7 திருமணமானவரா /திருமணமாகாதவரா ? [ ]
திருமணமாகாதவர்-1, திருமணமானவர்-2
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.)

2.8 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

2.9 பிறந்த திகதி :

ஆண்டு [ ][ ][ ][ ] மாதம் [ ][ ] திகதி [ ][ ]

2.10 விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று வயது :

வருடங்கள் [ ][ ] மாதங்கள் [ ][ ] நாட்கள் [ ][ ]

2.11 தொலைபேசி இலக்கம் (இருப்பின்) :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

3. 3.1 உங்களால் விண்ணப்பிக்கும் பதவி : [ ]

| | |
|---|---|
| உதவி அரசாங்க அழுத்தகர் (உற்பத்தி) | 01 |
| உதவி அரசாங்க அழுத்தகர் (பராமரிப்பு - அச்சீட்டு இயந்திரம்) | 02 |
| உதவி அரசாங்க அழுத்தகர் (பராமரிப்பு - மின்னியல்) | 03 |
| உதவி அரசாங்க அழுத்தகர் (அச்சீட்டு பதிப்பாளர்) | 04 |

(நீங்கள் விண்ணப்பிக்கும் பதவிக்கான இலக்கத்தைக் கூட்டினுள் இடுக.)

3.2 நீங்கள் திறந்த போட்டிப் பரீட்சைக்காக விண்ணப் பங்களை அனுப்புவதற்கு எதிர்பார்த்திருக்கிறீர்களா ? :----.

4. தகைமைகள் பற்றிய தகவல் :

4.1 உங்களால் அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் தற்போது வகிக்கும் பதவி, தற்போது சேவையாற்றும் பிரிவு :--------
----------------------------------------------------.

4.2 உங்களால் அச்சீட்டு தொழில்நுட்பம் பற்றி பின்பற்றியுள்ள பாடநெறிகள் மற்றும் பயின்ற நிறுவகங்கள் பற்றிய விபரம் :
----------------------------------------------------
----------------------------------------------------
----------------------------------------------------
----------------------------------------------------
----------------------------------------------------

5. பணம் செலுத்திய பற்றுச்சீட்டு :

| |
|---|
| (பற்றுச்சீட்டை கழறாதவாறு இங்கு ஒட்டவும்.)<br>(பற்றுச்சீட்டின் பிரதியை உங்களுடன் வைத்திருப்பது பிரயோசனமானதாகும்.) |

6. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் உண்மையானது எனவும், 26.06.2013 ஆந் திகதிய 1816/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை அச்சீட்டு சேவை பிரமாணத்திற்கமைய இப்பதவி விண்ணப்பிப்பதற்கான தேவையான தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளேன் எனவும், பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட ........................................ ஆந் திகதிய .................................. ஆம் இலக்க பற்றுச்சீட்டை இத்துடன் ஒட்டியுள்ளேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன். மேலும் பரீட்சை சட்டதிட்டங்களுக்கமைய செயற்படுவேன் எனவும் இப்பரீட்சை பற்றிய நிபந்தனைகளுக்கமைய நான் தகைமையற்றவனாவேன் எனத் தெரியவரின், பரீட்சைக்கு முன்னராயின் அல்லது பரீட்சை நடக்கும்பொழுது அல்லது பரீட்சைக்குப் பின்னராயின் எனது பரீட்சார்த்தித் தன்மை இரத்துச்செய்யப்படுவதற்குமான ஏதேனும் தீர்மானம் எடுப்பதற்கு இணங்குகின்றேன், மேலும் பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு நான் கட்டுப்படுவேன் எனவும் இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

7. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை சான்றுபடுத்தல் (அறிவித்தலின் 9(ஈ) இன் பிரகாரம் இருத்தல் வேண்டும்.)

இவ்விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கின்ற .......................... (முழுப்பெயர்) என்பவர் அரசாங்க அச்சகத்தில் சேவையாற்று கின்றார் எனவும் குறிப்பிட்ட பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி யுள்ளாரெனவும் அதற்கான பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளார் எனவும் ................ ஆந் திகதியன்று அவரது கையொப்பத்தை எனது முன்னிலையில் இட்டார் எனவும் இத்தால் சான்று படுத்துகின்றேன்.

----,
கையொப்பத்தை சான்றுபடுத்தும்
அலுவலரின் கையொப்பம்.

கையொப்பத்தை சான்றுபடுத்தும் அலுவலரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(அலுவலக முத்திரையினால் நிரூபித்தல் வேண்டும்.)
திகதி :----.

8. விண்ணப்பதாரி சேவையாற்றும் பிரிவு பொறுப்பு பணியாட் டொகுதி அலுவலரின் சான்றிதழ் :

இவ்விண்ணப்பதாரி அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் ............................ பிரிவில் ....................... ஆக பதவி வகிக்கும் அலுவலராக சேவையாற்றுகின்றார் என சான்றுபடுத்தி அவரின் இவ்விண்ணப்பத்தை மேற்கொண்டு நடவடிக்கைகளுக்காக சமர்ப்பிக்கின்றேன்.

----,
பிரிவு பொறுப்பு பணியாட்டொகுதி
அலுவலர்.

பிரிவு பொறுப்பு பணியாட்டொகுதி அலுவலரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(பதவி முத்திரையில் நிரூபித்தல் வேண்டும்.)
திகதி :----.

9. தனிப்பட்ட ஆவணக்கோவை பொறுப்பு பணியாட்டொகுதி அலுவலரின் சான்றிதழ் :

இவ் அலுவலர் 26.06.2013 ஆந் திகதிய 1816/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை அச்சீட்டு சேவைப் பிரமாணத்திற்கமைய மேலே குறிப்பிடப்பட்ட 3.0 இல் குறிப்பிடப்பட்டுள்ள பதவிக்கு விண்ணப்பிப்பதற்குத் தேவையான தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளார் எனவும், அவரினால் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் திருத்தமானவை எனவும், அவர் ...................................... 2014 ஆந் திகதிக்கு அண்மித்த 05 வருடத்திற்குள் எதுவித ஒழுக்காற்று தண்டனை களுக்கும் ஆட்படவில்லை எனவும் அவ்வாறு தீர்மானிப்பதற்கு எண்ணியிருக்கவில்லை எனவும், மேற்குறிப்பிட்ட திகதிக்கு அண்மித்த ஐந்து வருட காலத்திற்குள் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ளார் எனவும் சான்றுபடுத்துகின்றேன்.

----,
தனிப்பட்ட ஆவணக்கோவை பொறுப்பு
பணியாட்டொகுதி அலுவலரின் கையொப்பம்.

தனிப்பட்ட ஆவணக்கோவை பொறுப்பு
பணியாட்டொகுதி அலுவலரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
(பதவி முத்திரையினால் நிரூபித்தல் வேண்டும்.)
திகதி :----.

6-465

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2013 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**எல்லா வர்த்தமானிகளையும் www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே மணி ஓடர்களுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,300 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

14. **2013 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III வது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III வது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V வது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI வது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.***

***முக்கிய கவனிப்பு.***- *இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும்* ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.***

***அட்டவணை-2014***

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **யூன்** | .. | வெள்ளி | 06.06.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.05.2014 |
| | | வெள்ளி | 13.06.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 30.05.2014 |
| | | வெள்ளி | 20.06.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 06.06.2014 |
| | | வெள்ளி | 27.06.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 13.06.2014 |
| **யூலை** | .. | வெள்ளி | 04.07.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.06.2014 |
| | | வெள்ளி | 11.07.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.06.2014 |
| | | வெள்ளி | 18.07.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 04.07.2014 |
| | | வெள்ளி | 25.07.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.07.2014 |
| **ஓகத்து** | .. | வெள்ளி | 01.08.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 18.07.2014 |
| | | வெள்ளி | 08.08.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 25.07.2014 |
| | | வெள்ளி | 15.08.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 01.08.2014 |
| | | வெள்ளி | 22.08.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 08.08.2014 |
| | | வெள்ளி | 29.08.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 15.08.2014 |

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*